# தமிழரசு

ஜூலை 16 1973 40 காசு




# உங்களுக்கு தெரியுமா?

## உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில் செலவிடப்படுகிறது.





## உங்களுக்குத் தெரியுமா?

இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.
உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2





# தமிழரசு

மலர்.4 இதழ்-2.
16-7-73

பரனூர், பருகூர், உளுந்தூர்ப்பேட்டை மணையேறிப்பட்டி, புதுக்கோட்டை, புதுப்பட்டி மறுவாழ்வு இல்லங்களைத் தொடர்ந்து வட ஆர்க்காடு மாவட்டம் மல்லவாடியில் கட்டப் பட்டுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லம் 27 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 9·57 இலட்சம் செலவில், 500 நோயாளி கள் தங்கிச் சிகிச்சை பெறும்படியும், கண் காணிப்போர், மருத்துவர்கள் ஆகிய 32 குடும்பத்தினர் தங்கும் வகையிலும் கட்டப்பட் டிருக்கிறது.

ஏறத்தாழ 500 க்கு மேற்பட்டவர்கள் இந்த இல்லத்திலே வாழ்ந்திட இயலும்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் பத்தும் தமிழ்நாட்டிலே பரவலாகக் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, தமிழகத்தின் தெருக் களிலே அலையும் தொழுநோய்ப் பிச்சைக்காரர் களின் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு அவர் களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்பது நமது அரசின் திட்டமாகும்.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ இலட்சம் பேர் பிச்சை எடுக்கிறார்கள் என்பதும், அவர்களிலே 5,000 பேர் தொழுநோய் கொண்ட பிச்சைக் காரர்கள் என்பதும், எடுக்கப்பட்ட கணக் காகும்.

மல்லவாடி பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தை, கடந்த 4-7-1973 அன்று முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.



# அண்ணா மேம்பாலம்

சென்னை மாநகரத்துக்கு மேலும் ஒரு புதிய எழிலை ஊட்டுகின்ற விதத்தில், வசதி வாய்ப்பை அளிக்கின்ற விதத்திலும் போக்குவரத்து நெரிசலை ஓரளவு தீர்த்து வைக்கும் வகையிலும் பேரறிஞர் அண்ணா பெயரால் அமைந்துள்ள இந்த மேம்பாலத்தைத் திறந்து வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

21 மாதங்களில் இதைக் கட்டி முடித்த—கட்டி முடிக்க ஒப்பந்தம் செய்து கொண்ட ஈஸ்ட் கோஸ்ட் கம்பெனியார் தங்களது அயராத முயற்சியின் காரணமாக நல்ல வெற்றியைத் தேடித் தந்திருப்பதற்காகத் தமிழக அரசின் சார்பில்—பொதுப்பணித் துறையின் சார்பில்—சென்னை வாழ் மக்களின் சார்பில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பாலம் இந்தியாவில் கட்டப்பட்டுள்ள மூன்றாவது பெரிய பாலமாகும்.

மராட்டிய மண்டலத்தின் தலைநகரான பம்பாய்த் திருநகரில் இதுபோன்று இரண்டு மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

மேம்பாலங்கள் என்றால் இருப்புப் பாதைக்குக் கட்டப்படுபவையும் மேம்பாலங்கள்தான்; அதற்கு மாறாக, சாலைகளைக் கடப்பதற்காகக் கட்டப்படும் பாலங்களும் மேம்பாலங்கள் தான் என்று எடுத்துக் கொண்டால், இந்தியாவில் பம்பாய் நகரில் கட்டப்பட்டுள்ள இரண்டு பாலங்களுக்கு அடுத்தபடியாக நம்முடைய தமிழகத்தின் தலைநகரான சென்னையில் கட்டப்பட்ட இது மூன்றாவது பாலமாகத் திறந்து வைக்கப்படுகிறது.

கட்டப்பட்டுள்ள பாலங்களில் இது மூன்றாவது என்றாலும், இதில் எது பெரிய பாலம் என்றால் அந்த வரிசையில் இதுதான் முதல் பாலம் — பெரிய பாலம் என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வெள்ளைக்காரர் காலத்திலிருந்து இந்தியாவில் வளர்ந்திருக்கின்ற மாநிலங்கள் என்று எடுத்துக் கொண்டால் அந்த வரிசையில் மராட்டியத்திற்கு அடுத்தபடியாக, மற்ற மாநிலங்களோடு போட்டி போட்டுக் கொண்டு வேகமாக வளர்ந்து வருகிற மாநிலம் தமிழ் மாநிலம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அப்படிப்பட்ட தமிழகத்தின் தலைநகரத்திற்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு யாராவது வெளிநாட்டுக்காரர்கள் அல்லது அடிக்கடி சென்னைக்குவர இயலாத வெளி மாநிலத்துக் காரர்கள் அல்லது தமிழகத்திலிருந்து சென்னைக்கு ஏதோ புண்ணியச் சேத்திரத்தைப் பார்க்க வந்தது போல வந்துவிட்டுப் பட்டிக்காட்டிலே முடங்கிக் கிடக்கின்ற இராமப்புறத்துப் பாட்டாளி மக்கள்—இப்படிப்பட்டவர்கள் 6 ஆண்டுக் காலத்திற்கு முன்பு இந்த நகரத்தைப் பார்த்துவிட்டு இன்றைக்கு வந்து பார்ப்பார்களானால் சென்னை மாநகரம் புதுக்கோலம் பூண்டிருக்கின்ற எழில்மிகு காட்சியினைக் காண்பார்கள்.

அப்படிப்பட்ட நல்ல மாற்றத்தைச் சென்னை மாநகரத்தில் அரசு நிருவாகமும்—அரசு நிருவாகத்திற்கு முன்பே 1959-ஆம் ஆண்டு புதிதாக உருவான மாநகராட்சி நிருவாகமும் மேற்கொண்டு சென்னைக்கு அழகூட்டும் பணியிலே வெற்றி பெற்றிருக்கின்றன. அந்த வகையில் சென்னை மாநகரத்து மக்கள் அரசோடும் மாநகராட்சி மன்றத்தோடும் ஒத்துழைத்து வருகிறார்கள்.

சென்னைக் கடற்கரைக்கு ஆறாண்டுக் காலத்திற்கு முன்னால் வந்தவர்கள் அல்லது சென்னை மாநகரத்து வீதிகளைக் கடந்து சென்று வந்தவர்கள் ஆயிரக்கணக்கான குடிசைகளைப் பார்த்ததற்கு மாறாக, இன்றைக்குக் குடிசை மாற்று வாரியத்தின் பெருமுயற்சியின் காரணமாக அழகழகான அடுக்குமாடி வீடுகள் கடற்கரை யோரத்தில் அயோத்தியா குப்பம் என்றும், நொச்சிக்குப்பம் என்றும் பார்க்கின்ற காட்சியை— உள்ளார்ந்து இருக்கின்ற பல்வேறு பகுதிகளில் குடிசைகள் மாற்றப்பட்டு, மாதொருத்தியின் முகத்திலிருந்த குறுமருக்களை அகற்றிவிட்டால் எப்படி அது பொலிவு பொருந்திய முகமாக அமையுமோ, அதைபோலச் சென்னை மாநகரம் பொலிவு பொருந்தி வருகின்ற காட்சியினைக் காணக்கூடும்.

**தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் 1—7—1973-ல் அண்ணா மேம்பாலத்தைத் திறந்து வைத்துப் பேசிய உரை**

அப்படிப்பட்ட முயற்சியை ஏழை எளியவர்களுக்காகப் பாடுபடும் இந்த அரசு நிறைவேற்றி வருகிறது.

அதே நேரத்தில் ஒரு நாட்டினுடைய—ஒரு மாநிலத்தினுடைய தலைநகரம் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதனையும் சிந்தித்துப் பார்த்து அதற்கேற்பப் பல்வேறு பணிகளைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வருகின்றது.

வெளிநாடுகளுக்குச் சென்று பார்த்தால் ஒவ்வொரு நாட்டுத் தலைநகரத்திலும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்குப் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு நாட்டின் தலைநகரத்திலும் அந்தத் தலைநகரத்தை அழகு படுத்துகின்ற அளவுக்கு அழகழகான நதிகள்—பேராறுகள் சிற்றாறுகள் அவற்றிலே மிதக்கின்ற ஓடங்கள்— படகுகள் அவைகளில் உல்லாசப் பயணிகள் ஏறிச் செல்கின்ற உற்சாகமான பயணங்கள் இவைகளையெல்லாம் அங்கே நாம் காணமுடியும்.

வெளிநாட்டிற்குச் செல்வது வேடிக்கை பார்க்க அல்ல; அங்கே கண்டவற்றைக் கருத்திலே நிறுத்தி முடிந்த அளவுக்கு அதை நாம் தமிழகத்திலே செயல்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுப் பயணங்கள் எல்லாம் ஓரளவுக்குத் தமிழகத்திலே செயல்வடிவம் பெற்றிருக்கின்றன.

அவைகளிலே ஒன்றுதான் இங்கே கட்டப்பட்டு, உங்கள் பாராட்டைப் பெற்றிருக்கின்ற இந்த அண்ணு மேம்பாலமாகும்.

இந்தப் பாலம் கட்டப்படாமலிருந்த நேரத்தில் கணக்கெடுத்துப் பார்த்தபோது இதே இடத்தில் ஒரு மணி நேரத்தில் இந்த இடத்தைக் கடந்து செல்கின்ற வண்டிகளுடைய எண்ணிக்கை 9 ஆயிரமாக இருந்தது.

ஒரு மணி நேரத்தில் 9 ஆயிரம் வண்டிகள் இந்த இடத்தைக் கடந்து சென்றன என்ருல் எவ்வளவு சிக்கல் போலீசாருக்கு — வண்டி ஓட்டிச் செல்கின்றவர்களுக்கு — போக்குவரத்தைக் கால் நடையாகவே கொண்டிருக்கின்ற பொது மக்களுக்கு என்பதை நாம் அனுபவ ரீதியாகக் கண்டிருக்கின்ருேம்.

ஆகவேதான் அதைத் தவிர்க்கச் சென்னை நகரத்தில் மிகவும் நெரிசல் வாய்ந்த பகுதியான இந்தப் பகுதியில் இந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க வேண்டுமென்று திட்டமிட்டு இரண்டாண்டுக் காலத்திலே இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும் என்று எண்ணி— ஆனல் 21 மாதங்களுக்குள் இதைக் கட்டி முடித்த பெருமையை நாம் பெற்றிருக்கிருேம். இதற்கு உறுதுணையாக இருந்த பொதுப்பணித் துறைக்கும், அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களுக்கும், அவரது அரிய முயற்சிக்கும் அயராத பணிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணிச் செயலாளர், அதிகாரிகள், பொறியாளர்கள், தொழிலாள நண்பர்கள், ஆகியோரின் அயராத பணிகளை நான் இந்தப் பகுதியைக் கடந்து செல்லும் போதெல்லாம் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கெல்லாம் நான்எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணு அவர்களுடைய பெயரை இந்தப் பாலத்திற்கு ஏன் வைத்தோம் என்பதற்கான காரணத்தைச் சொல்லத் தேவையில்லை. ஏனென்ருல் அண்ணு அவர்களுடைய பெயரை வைத்த பிறகு அதை ஏன் வைக்க வேண்டும் என்று கேள்வி கேட்கிற யாரும் தமிழகத்தில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே தான் அண்ணு அவர்களுடைய பெயர் இந்தப் பாலத்திற்கு வைத்திருப்பதற்கான விளக்கத்தை-அதற்கான காரணத்தை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். அண்ணு அவர்கள் உருவாக்கிய அரசு இந்த அரசு; அண்ணு, அவர்களால் உருவாக்கப்பட்ட உண்மையான தம்பிமார்கள் நாங்கள். ஆகவே உண்மையான தம்பிமார்களாகிய நாங்கள் எங்களை ஆளாக்கிய அண்ணனுக்குச் செலுத்த வேண்டிய மரியாதையை — நாங்கள் தந்திட வேண்டிய நன்றிக் கடனை- அவ்வப்போது, இன்று நேற்றல்ல என்றென்றும் செலுத்திக் கொண்டு வருகிருேம். அதிலே ஒரு பகுதிதான் இந்தப் பாலத்திற்குப் பெயர் வைத்திருக்கும் நிகழ்ச்சியே தவிர வேறல்ல.

இப்படிப்பட்ட பாலங்கள் - நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த தலைவர்களுடைய பெயரால் - நம்முடைய சமுதாயத்திற்குப் புத்துணர்ச்சி ஊட்டியவர்களின் பெயரால்- இந்திய நாட்டில் பிறந்த தலைவர்களுடைய பெயரால் வழங்கப்பட வேண்டும் என்பது நம்முடைய எண்ணம்.




அண்மையில்கூட, ஒரு காரியத்தை படிப்படியாக செய்யும் முயற்சியை மேற்கொண்டிருக்கிருேம். ஆகவே இந்த நல்ல காரியத்தை—நம்முடைய நாட்டு வளத்திற்கேற்ப நிதிநிலைக்கேற்ப—வேறு பல சிக்கல்களுக்குக்கேற்ப — படிப்படியாக — மெல்ல மெல்ல இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. அந்த வகையில்தான் இன்று இந்தப் பாலத்திற்கு அறிஞர் அண்ணு அவர்களுடைய பெயரை நாம் வைத்திருக்கிருேம்.

இந்தச் சாலையின் பெயர் அண்ணு சாலை ; இந்தச் சாலையில்தான் அண்ணு சிலை இருக்கிறது. இந்தச் சாலை முடிந்த பிறகு, அங்கேயிருந்து சென்ருல் அண்ணு அவர்களுடைய கல்லறை இருக்கிறது.

மர்மலாங் பாலத்தில் இருந்துதான் அண்ணு சாலை ஆரம்பமாகிறது. மர்மலாங் என்ற பெயர் கூட ஒரு டச்சுக்காரருடைய பெயர் என்று கேள்விப்பட்டேன். மர்மலாங் பாலத்திற்கு அருகாமையில் உள்ள பல்லாவரத்தில் தான் மறைமலைஅடிகளார் வாழ்ந்தார். ஆகவே மர்மலாங் பாலம் உச்சரிப்பதற்கு ஏற்றவகையில் இனி வருங்காலத்தில் - மறைமலை அடிகளார் பாலம் என்று மாற்றப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடையாற்றில் ஒரு பாலம் கட்டிக் கொண்டிருக்கிருேம். அந்த அடையாறு பாலத்தை, நான் பொதுப் பணி அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மறுநாளே, மாநகராட்சி மன்றத்திலே உள்ள நண்பர் முனுசாமியும் மற்றவர்களும் ஓடி வாருங்கள் என்று அழைத்தார்கள். போய்ப் பார்த்தால் இன்னும் பத்து நாளில் இது முறிந்து விடும் என்று பொறியாளர்கள் சொன்னர்கள். பின்னர் அதற்குக் கொடுக்க வேண்டிய முட்டெல்லாம் கொடுத்து, இப்போது அந்தப் பாலத்தைப் பெரிதாகக் கட்டியிருக்கிருேம். அந்த அடையாறு பாலம், தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்களுடைய பெயரால் அழைக்கப்படும்.

வாலாஜா பாலத்திற்கு, காயிதே மில்லத் அவர்களுடைய பெயர் வைக்கப்பட்டு, அந்தப் பாலம் காயிதே மில்லத் பாலம் என்று அழைக்கப்படும்.

காமராசருடைய சிலைக்கு அருகாமையிலே இருக்கின்ற வெலிங்டன் பாலம் பெரியார் அவர்களுடைய பெயரால் அழைக்கப்படும்.

அதைப் போல, ஹாமில்டன் பாலத்திற்கு ஏதேதோ பல பெயர்கள் மாற்றப்பட்டதெல்லாம் உங்களுக்குத் தெரியும். அந்தப் பாலம் அம்பேத்கார் பாலம் என்று அழைக்கப்படும்.

மதுரையிலே கட்டப்படுகிற ஒரு பாலத்திற்கு - அந்தப் பாலத்திற்கு அருகாமையில் விடுதலைப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடைய நினைவாக - வெகு விரைவில் சூலைத் திங்களில் திறக்கப்படுகிற அந்த மேம்பாலத்திற்குப் 'பசும்பொன் தேவர் பாலம்' என்கிற பெயர் வைக்கப்படும்.

சென்னையில் கட்டப்படுகிற மன்ருே பாலத்திற்கு இராஜாஜியின் பெயர் வைக்கப்படவிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெயரில் என்ன இருக்கிறது என்று சொல்வார்கள்.

பெயரில் தமிழ் இருக்கிறது ; தமிழ் உணர்வு இருக்கிறது ; சமுதாய எழுச்சி இருக்கிறது. சமுதாயத்திற்காகப் பாடுபட்டவர்களுக்குக் காட்டப்படுகிற நன்றி உணர்வு இருக்கிறது.

ஆகவேதான் பெயரில் என்ன இருக்கிறது என்று கேட்டால், அது விளக்கத்திற்காகக் கேட்கப்படுகிற கேள்வியே தவிர, கேலிக்காகக் கேட்கப்படுகிற கேள்வி அல்ல என்பதற்கேற்பத்தான் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிருேம்.


படமும்
செய்தியும்
மல்லவாடித் தொழுநோய்
மறுவாழ்வு இல்லத்தில்
தொழுநோயாளர்களுக்கு
கைத்தொழில்கள்
கற்றுக்கொடுக்கப்
படுகின்றன!
USHA


# போக்குவரத்துத் துறையில் புகழ் மிக்க சாதனைகள்



சட்டப்பேரவையில் பேசிய உறுப்பினர்களின் கருத்துகளை நான்கு தலைப்புகளின்கீழ் வருகின்ற அமைப்பிலே, நான் என்னுடைய பதிலுரையை ஆற்றலாம் என்று நினைக்கிறேன். முதலாவதாக அரசு நடத்துகின்ற அரசுப் போக்குவரத்துத் துறையைப் பற்றி, இரண்டாவதாக அண்மையிலே நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் பற்றி, மூன்றாவதாக அரசுப் போக்குவரத்துத் துறை, நாட்டு உடைமையாக்கப்பட்டு பல்லவன் போக்குவரத்துக் கழகம், அரசாங்கப் போக்குவரத்துத் துறையாகவும் இயங்குவதைப் பற்றி; நான்காவதாக தொழிலாளர்களுக்கு நிருவாகத்திலே கொடுக்கிற நிலையைப் பற்றிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

அரசுப் போக்குவரத்துத் துறையிலே நிருவாகிகள் நல்ல முறையிலே செயல்படவேண்டும். வண்டிகள் நல்லமுறையிலே சோதனை செய்யப்பட்டு விபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும். விபத்துக்கள் நடந்தாலும் அந்த இடத்திற்கு வாகன ஆய்வாளர்கள் விரைவிலே செல்லவில்லை என்றும், அவர்கள் செல்லவேண்டுமென்றும் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையிலும் விபத்துக்களைத் தடுக்கவேண்டும், தவிர்க்க வேண்டும் என்பதிலே மிகுந்த கவனம் செலுத்தி அதற்காகப் பல நடவடிக்கைகளை ஆராய்ந்து படிப்படியாக மேற்கொள்ள இருக்கிறோம்.

முதலாவதாக, வண்டிகளை ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் மிகுந்த சிரமங்களுக்கு இடையே ஓட்டுகின்ற நிலைமை இருப்பதாலும் அவர்களை முறையாகப் பயிற்றுவிக்கின்ற நிலையங்கள் இல்லாத நிலைமை இருப்பதாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஏற்படுகின்ற விபத்துக்களில் 50 சதவிகிதம் விபத்துக்கள் அந்த வழியிலேதான் ஏற்படுகின்றன என்பதைக் கணக்கெடுத்த பொழுது, டிரைவர்கள் நல்ல பயிற்சி பெறுவதற்கு ஏற்றவகையில் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துவதிலும் டிரைவர்கள் தங்களுடைய அனுமதிகளைப் பெற வருகின்ற பொழுது அவர்களுக்கு வேண்டிய சோதனைகளை நல்ல முறையிலே செய்ய வேண்டும் என்பதிலும், அவர்கள் தங்களுடைய அனுமதிகளைப் புதுப்பிக்கின்ற நேரத்திலேயும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்ற நேரத்திலேயும் வண்டிகளை ஓட்டக்கூடிய அளவுக்குத் தேவையான உடல் நலத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்களா என்பதைப்பற்றித் தீவிரமான சோதனை மேற்கொள்ள வேண்டுமென்பதிலும் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.


மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்

வண்டிகள் பராமரிப்பைப் பொறுத்தவரையிலும்கூட தகுதிச் சான்றிதழ்கள், பிட்னஸ் சர்டிபிகேட் வழங்குகின்ற பொழுது விதிக்கப்பட்டிருக்கின்ற முறைகளைத் தீவிரப் படுத்தலாம். ஒவ்வொரு ஆர்.டி.ஓ. வாலும் பிட்னஸ் சர்டிபிகேட் வழங்கப்படுகின்றபொழுது அவர்கள் தீவிரக் கண்காணிப்புடன் இருக்க வேண்டுமென்ற முறையிலேயும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

பேருந்துகளை நாட்டுடைமை யாக்குகின்ற பொழுது லாரிகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கருத்தை திரு. சுரேந்திரன் அவர்கள் சொன்னார்கள். நாட்டுடைமைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல் இந்த அரசு படிப்படியாக ஆனால் அதே நேரத்திலே உறுதியாகக் கொள்கைகளை நிறைவேற்றி வருகிறது என்பதைக் கடந்த கால காரியங்களைப் பார்த்தாலே புரியும். பேருந்துகளை முழுமையாக எடுத்துச் செயல்படாத நிலைமையிலே நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளைப் பொறுத்தவரையில் நிருவாகத்தைச் சீர்படுத்தி விடுகின்ற சூழ்நிலை ஏற்படுகிற வரையில் மேலும் மேலும் லாரிகளையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கருத்துக்கு இப்பொழுது அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநகரப் போக்குவரத்தைப் பொறுத்தவரை சில விவரங்களை முதலில் சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் போன்றுதானே பல்லவன் போக்குவரத்துக் கழகமும். அதிலே இலாபம் வரக்கூடாது

என்று நினைக்கத் தோன்றும்? உண்மை நிலை என்ன என்று பார்க்க வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக் கொண்டால் கல்கத்தா, டில்லி, பம்பாய், சென்னை ஆகிய நான்கு நகரங்கள் இருக்கின்றன. கல்கத்தா நகரத்தை எடுத்துக் கொண்டால் பீகார், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களுடைய மக்கள் தொகையின் முன்னேற்றம் கல்கத்தாவிற்கு வரும். உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களுடைய நெருக்கம் டில்லியில் வந்து சேரும். மேற்கு இந்தியாவை எடுத்துக் கொண்டால் குஜராத், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களுடைய மக்கள் தொகை நெருக்கம் பம்பாயைச் சாரும். அதே போல் சென்னை நகரம் என்று எடுத்துக் கொள்ளும்போது அது தமிழகத்திற்கு மட்டுமல்ல, தென்மாநிலங்களுக்கு, ஆந்திரம், கேரளம், கருநாடகம், தமிழகம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கும் அது தலைமை இடமாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் தொழில் நகரமாகவும் சென்னை நகரம் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் வணிக நகரமாகவும் சென்னை நகரம் இருக்கிறது.

சென்னை நகரத்தின் வளர்ச்சியைப் பற்றிச் சொல்லும்போது நான் ஒரு விகிதத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

1961-க்கும் 1971-க்கும் இடையே பொதுவான மக்கள் தொகைப் பெருக்கத்தை எடுத்துக் கொண்டால் 44 கோடியிலிருந்து 55 கோடி அளவுக்கு 24½ சதவிகிதம் வளர்ந்திருக்கிறது. நகர்வாழ் மக்கள், ஊர்ப்புறங்களிலிருந்து நகரங்களுக்குச் செல்லுகின்ற மக்கள் தொகை எந்த அடிப்படையில் வளர்ந்திருக்கின்றது என்றால் 79 இலட்சத்தில் இருந்து 1 கோடியே 9 இலட்சம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட 38 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது பொதுவான மக்கள் தொகைப் பெருக்கம் 24 சதவிகிதம். நகர்வாழும் மக்கள் தொகைப் பெருக்கம் 38 சதவிகிதம். இதைப் பொறுத்து நம்முடைய தலைநகரமான சென்னை என்ன நிலைமையில் இருக்கிறது என்றால் 1961-ல் 17·3 இலட்சமாக இருந்தது, இன்றையத் தினம் 25 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. இது 42½ சதவிகிதம் உயர்வு. அகில இந்திய சராசரியைவிட சென்னை மாநகரத்தில் மக்கள் தொகை அதிகரிப்பு அதிகமாக இருக்கிறது. அதிலே, புறநகரப் பகுதிகளையும் சேர்த்துக் கொள்வீர்களானால், திருவெற்றியூர், எண்ணூர், ஆவடி, அம்பத்தூர், கிண்டி என்று இவற்றை எல்லாம் சேர்த்துப் பார்க்கும்போது கிட்டத்தட்ட 31.69 லட்சம் மக்கள் இங்கே வாழ்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் சென்னை நகரம் என்று சொல்லும்போது இங்கிருக்கும் மக்கள் தொகை மட்டுமல்லாது வந்து போகிறமக்களும் இருக்கிறார்கள். அவர்கள்தான் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பயணங்களை அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கணக்கு ஆறு இலட்சம் என்று பார்க்கிறபொழுது மொத்தம் 38 இலட்சம் மக்கள் புழங்க வேண்டிய சூழ்நிலை சென்னை நகரத்திற்கு இருக்கிறது.

> **துப்புரவுத் தொழிலாளர்க்கு வீட்டு வாடகைப்படி.**
>
> நகரத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு, அவர்களின் சம்பளம், பஞ்சப்படி இவற்றைப் பொறுத்து ரூ. 10 அளவில் வீட்டுவாடகைப் படி வழங்குவதற்குத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

போக்குவரத்து வண்டிகளின் விகிதம் எந்த அளவுக்குப் போயிருக்கிறது என்பதையும் சொல்ல விரும்புகிறேன். 1961ல் மொத்தம் வண்டிகள் சைக்கிள் அல்லாமல் பேருந்துகள், லாரிகள், ஸ்கூட்டர்கள், கார்கள், வாடகைக் கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள் எண்ணிக்கை 21,046. இன்றையத் தினம் அந்த எண்ணிக்கை 52,212. வண்டிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 250 சதவிகிதம் வளர்ந்திருக்கிறது. இப்படி 250 சதவிகிதம் வளர்ந்திருப்பது போல் வண்டிகள் போகக்கூடிய நெடுஞ்சாலைகள் 250 சதவிகிதம் வளர முடியுமா என்று பார்க்க வேண்டும்.

தனியார் வண்டிகளை எடுத்துக் கொள்வோமானால் ஸ்கூட்டர், கார், இவற்றின் எண்ணிக்கை 1961ல் 4,000; 1971ல் 18,547. இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் மக்கள்தொகைப் பெருக்கம் 50 சதவிகிதம்; வண்டிகள் பெருக்கம் 250 சதவிகிதம். விளைவு என்ன நிலைமைக்குக் கொண்டு வருகிறது என்றால் சராசரி வேகம் நெரிசல் நேரங்களில் 9-ல் இருந்து 12½ மைல் வேகந்தான். இந்தச் சூழ்நிலையில், நெரிசல் நேரத்தில் மேலும் பேருந்துகளை விட்டால்—200 பஸ்களை அதிகமாக விடுவது பெரிய காரியம் அல்ல. மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் சொல்லி 200 பஸ்களுக்கு நிதி ஆதாரத்தைத் தேடச் சொல்லிவிடலாம். வேகம் குறைந்து பேருந்திலே செல்லுவதை விட நடந்து சென்றுவிடலாம் என்று எண்ணக்கூடிய சூழ்நிலையைத் தான் தோற்றுவித்துவிடும்.

மாநகரங்களில் பேருந்துகளை இயக்குவது என்பது தனிப்பட்ட பிரச்சினை அல்ல. மாநகரத்தின் பிரச்சினை. மாநகர வளர்ச்சியின் பிரச்சினை. சென்னை மாநகரத்தை எடுத்துக் கொள்வோமானால் நீர்வழித்தடங்கள் இருக்கும் குறுகிய பாலங்கள், ரயில்வே கிராசிங்குகள் இருக்கின்ற நிலையில் நாம் மேலும் பேருந்துகளை அதிகப்படுத்துவதன் காரணமாகப் பிரச்சினையைத் தீர்த்துவிடமுடியும் என்று கருதுவோமானால் நிச்சயமாகப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆனால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நிரந்தரமான பரிகாரம் என்ன என்று கணக்கிட்டுப் பார்ப்போமானால் அண்டர் கிரவுண்ட் ரயில்வே (Mass Rapid Transport System) வந்தால்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அதைத் தள்ளிப் போடுவதில் பயன் இல்லை. புண்ணுக்குப் புனுகு தடவுவதுபோல் வண்டிகளை அதிகப்படுத்திப் பயன் இல்லை. ஆகவே, நெரிசல் நேரங்களில் அதிக பஸ்களை விடுவது நிச்சயமாகப் பலன் தராது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, மத்திய சர்க்கார் இப்போதே அந்த அண்டர் கிரவுண்ட் ரயில்வே திட்டத்தை ஆரம்பிப்பார்களானால் தான், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களானால் தான் சென்னை நகரை வளர்ச்சி பெற்ற நகரமாக மட்டுமல்ல, அழகான நகரமாகவும் வைத்துக் கொள்ள முடியும். இந்த நிலை நீடித்தால் இன்னும் போகப் போக சங்கடமான சூழ்நிலை தான் வரும். நகரங்கள்தான் நாகரிகத்தின் பிறப்பிடம். வெளிநாட்டுக்காரர்கள், வேறு நாட்டுக்காரர்கள் வந்து பார்க்கும்போது நகரம் எப்படி இயங்குகிறது என்பதைப் பார்க்கையில்

நகரத்திலுள்ள வண்டிகளின் தன்மையைப் பார்க்கும்போதுதான் நம்முடைய வாழ்க்கை முறையைப் பற்றித் தெரிவிப்பதாக அமையும்.

நகரங்கள் நமது நாகரிகத்தின் சாளரங்கள் ( Cities are Windows of Our Civilisation ) என்று சொல்லுவார்கள். அந்த வகையில் பார்க்கும்பொழுது மத்திய அரசும் சரி, சம்பந்தப்பட்ட மாநில அரசுகளும் சரி, சிந்தித்துப் பார்த்து நீண்ட காலத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் வரையில் இதை இப்படியே விட்டுவிடுவதா என்றால் நிச்சயமாக நான் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளமாட்டேன். அரசாங்கப் போக்குவரத்துத் துறையின் மூலம் எவ்வளவுக்கெவ்வளவு பேருந்துகளை நல்ல முறையில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவற்றை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பொருள்கள் வாங்குவதிலும், அதைக் காப்பாற்றுவதிலும் ஒரு சிறந்த முறையைக் கையாள வேண்டுமென்பதற்காக, அதற்காகத் தனி அதிகாரி, கன்சல்டன்ட் என்ற வகையில், ஒரு மெடீரியல்ஸ் மேனேஜர் என்று சொல்வார்கள், அவைகளெல்லாம் தெரிந்த ஒருவரை அசோக் லேலேண்ட் கம்பெனியிடம் அங்கே முழு நேரமாக ஒருவரைத் தரவேண்டுமென்று கேட்டோம். முழு நேரமாகத் தரமுடியாது, வாரத்திற்கு ஒரு நாள் தருவோம் என்று ஒப்புக் கொண்டார்கள். அவர்களும் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால் நியமிக்கப்பட்டு, ஏதோ வாரத்திற்கு ஒரு நாளாவது வரட்டும் என்று அவர்களது திறமையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்த நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டாலும் கூட, இவைகளெல்லாம் ஷார்ட் டர்ம் மெஷர்ஸ் தான், குறுகிய காலப் பலன்களைத் தான் தரும். நீண்ட கால நடவடிக்கைகளுக்கு, லாங் டர்ம் மெஷர்ஸ் என்று சொல்வார்கள். அதற்கு அந்தப் பேருந்துகளை நல்ல முறையில் வைத்து நடத்துவதற்கு மத்திய அரசின் உதவிவேண்டும். மாநில அரசைப் பொறுத்த வரையில் அந்த உதவிகளை வழங்கிக் கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இன்றைக்கு எதிர் பார்த்தேன். போக்குவரத்துத் துறை நிறுவனங்களில் தொழிலாளர்களுக்குப் பங்கு அளிப்பது என்ற திட்டத்தைப் பற்றி அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பார்கள் என்று எதிர் பார்த்தேன். ஒருவேளை அதிலே குறை சொல்லவில்லை என்ற காரணத்தால், அவ்வளவு பேரும் அமைதியாக இருந்துவிட்டனர் என்று கருதினேன். தமிழரசுக் கட்சியின் தலைவர் அதைப் பாராட்டினார்கள். ஆனால் பொதுவாகச் சொல்வார்கள். அமைதியாக இருப்பது சம்மதத்திற்கு அறிகுறி என்று. ஆகையால் அந்த வகையில் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

> **வேலைவாய்ப்புக்கு விவசாயப் பண்ணை**
>
> மனவளர்ச்சி பெறாத குழந்தைகளுக்காகச் சமூக சேவா நிலையத்தின் சார்பில் பாலவிகார் பள்ளி நடத்தப்படுகிறது. அதில் குணம் பெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க விவசாயப் பண்ணை ஒன்றினை நிறுவத் தமிழக அரசு ரூ. 25 ஆயிரம் வழங்கியுள்ளது.

நாட்டுடைமை யாக்கப்பட்ட உடனே அது ஏதோ அதிகாரிகள் கைக்குப் போய்விடுகிறது. தொழிலாளர்களுக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்ற உணர்வு இருக்கிறது. ஆனால் தொழிலாளர்களும் சேர்ந்து, அரசாங்கமும் சேர்ந்து, முதல் போட்டு நடத்துவது என்று தொழில் முறையில் ஒரு புதிய முறையை நம்முடைய தமிழ்நாட்டில்தான் உருவாக்கியிருக்கிறோம். இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் இந்த முதல் ஜாயின்ட் செக்டார் வைத்து இருக்கிறோம். 'கவர்ன்மென்ட் என்டரிங் வித் தி ஒர்க்கர்ஸ்'. இது போன்ற கருத்துக்கள் இந்திய நாடுகளில் இருந்து கொண்டிருக்கின்றன. டென் மார்க்கில் 1974-ஆம் ஆண்டிலிருந்து தொழிலாளிக்குப் பங்கு கொடுத்துத் தொழில் நிறுவனங்கள் உருவாக்க வேண்டுமென்ற சட்டத்தை அண்மையில் கொண்டுவந்திருக்கிறார்கள். அதே போல் யுகோஸ்லேவியா நாட்டிலும் தொழில் நிறுவனங்களை நடத்துவது என்று கொண்டு வந்துள்ளதாகக் கேள்விப்படுகிறேன்.

வெஸ்ட் ஜெர்மனியில் இது போன்ற திட்டத்தை'ப்ராஸ்ட்' என்ற நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் அவர்களுடைய கம்பெனியில் உள்ள தொழிலாளர்களையும் உரிமையாளராக ஆக்கி இருக்கிறார்கள். இப்படி உலகத்தில் இருக்கும் நாடுகளெல்லாம் இப்போதுதான் சோதனை அடிப்படையில் செய்கிறபோது இந்தியாவிலேயே முதன்முதலில் தொழிலாளர்களைப் பங்குதாரர்களாக — உரிமையாளர்களாக, அவர்களோடு நிருவாகமும் சேர்ந்து செயல்படுவது என்பதை செய்யத் தமிழகம்தான் முன் வந்திருக்கிறது என்பதில் நாம் மிகுந்த பெருமையடையலாம். இதேபோன்று பங்களா தேசத்தில் செய்வோம் என்று முஜிபுர் ரகுமான் அவர்கள் 1970 தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். 1970 தேர்தல் அறிக்கையை நம்முடைய இந்திய சர்க்காரே அச்சடித்து நமக்கெல்லாம் எளிதில் கிடைக்க வேண்டுமென்று இப்படிப் புத்தகமாக போட்டிருக்கிறார்கள். அதிலே, முஜிபுர் ரகுமான் தேர்தல் அறிக்கையில் "Equity Contributed by the Government shall be owned collectively by the workers of the enterprise who shall be entitled to the profits accuring to such shares.

Workers would not only participate in the equity capital but also in the management of the enterprise"

முஜிபுர் ரகுமான் இதைக் குறிப்பிட்டிருக்கிறார். அவர்களுக்கு அடுத்து ஒரு தேர்தல் வந்திருக்கிற காரணத்தால் அவர்களாலே அதைச் செய்ய முடியவில்லை.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நமக்கு மத்திய சர்க்காரிடமிருந்து சில சலுகைகள் தேவைப்படுகிறது. அதாவது தொழிலாளர்களிடத்தில் இருக்கும் பங்குக்கு நாம் டிவிடன்ட் கொடுப்பதற்கு, இலாபத்தைக் கொடுப்பதற்கு இப்போது இருக்கிற முறை, எப்படியிருக்கிறது என்றால் இலாபத்தில் மத்திய சர்க்காருக்கோ, மாநில சர்க்காருக்கோ செலுத்த

வேண்டிய வரி போக மீதியில் தான் இலாபத்தைக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது.

அதற்காக அவர்களுக்கு ஒரு காரண்டீட் டிவிடன்ட் கொடுக்க வேண்டும். ஒரு பொதுத்துறையை எடுத்துப் பார்க்கிற பொழுது பொதுத்துறை நட்டத்தில் இருக்கிறது. தொழிலாளர்களிடத்தில் உழைப்பைப் பங்காக வைத்துக் கொள்ளுங்கள் என்றால் அவர்களுக்கு டிவிடன்ட் வராது. சரி இலாபத்தில் நடக்கும் தொழிலைப் பற்றி என்ன நிலைமையென்றால், இலாபத்தில் நடக்கும் தொழில்களில் நிதியாகப் பங்கு கொடுத்து விடலாம். பங்கு கொடுத்துவிட்டால் என்ன நிலைமையென்றால், இலாபத்தில் அரசுக்குக் கொடுக்க வேண்டிய வரி போக எஞ்சியதில் தான் அவர்களுக்குப் பங்கு கொடுக்கிற நிலைமை. ஷேர் திரட்டுவதிலே பல வகையான முறைகள் கம்பெனியில் இருக்கின்றன. தொழிலாளர்களும் ஊக்கத்தோடு தொழிலில் பங்கு கொள்ள வேண்டும். தொழிலையும் ஊக்குவிக்க வேண்டும். தொழிலாளர்களையும் ஊக்குவிக்க வேண்டும். அதற்காகத் தான் 'எம்ளாயீஸ் டிவிடென்ட் காரன்டீட் ஷேர்' உத்தரவாதம் அளிக்கப்பட்ட டிவிடன்ட், அந்த அடிப்படையில் ஒன்றை உருவாக்குவதற்கு இந்தியக் கம்பெனி சட்டத்தில் ஒரு திருத்தத்தை மத்திய அரசு கொண்டு வர வேண்டும். அதே போல் அந்த காரண்டீட் டிவிடென்ட் கொடுப்பதற்கான செலவை பிசினஸ் எக்ஸ்பென்டிச்சராக, தொழில் செலவாகக் கழித்து மீதிப் பணத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்ளலாம். வரி போட்டு வருவாய் தேடிக் கொள்வது சமுதாயத்திற்கு நன்மை செய்வதற்காக. அதே நேரத்தில் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் தொழிலாளி தொடர்ந்து ஊக்கத்தோடு பணியாற்றுகிற வகையில் அவர்களுக்கு உற்சாகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையும் இன்றைய தினம் இருக்கிறது. திரு. டி. ஏ. பாய் அண்மையில் பேசுகிற போது சொன்னார்கள். தொழிலாளர்களை நிருவாகத்தில் எப்படிச் சொந்தக்காரர்களாக ஆக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று. அது போல சமீபத்தில் இங்கே வந்த மத்திய அமைச்சர் ஒருவர் பேசுகிறபோது தொழிலாளர்களும், தொழிலாளர் நிருவாகமும் நேருக்கு நேர் பேசுவதைவிட 'அலாங் கைட் தி டேபிள்' ஒரே பக்கத்தில் அவர்கள் பணியாற்ற வேண்டுமென்று ஒரு அமைச்சர் குறிப்பிட்டார்கள். இன்னொரு அமைச்சர் அவர்கள் நேற்று பாராளுமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் நாங்கள் லேபர் பார்ட்டிசிபேஷனில் நிருவாகத்தில் தொழிலாளர்களின் பங்கைப் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். இப்படி எல்லாரும் ஆராய்ந்துகொண்டு இருக்கிறார்களே தவிர, இன்னும் நடைமுறைப்படுத்தும் சூழ்நிலை வரவில்லை. தண்ணீரில் இறங்கினால் தான் நீந்தக் கற்றுக் கொள்ள முடியும் என்பதைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் தான் இந்த நாட்டிற்கு வழிகாட்டியிருக்கிறார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. நாம்தான் முதலில் செய்தோம். செய்வதில் கஷ்டம் வரவில்லை. சங்கடங்கள் வரலாம். அப்படி வந்தாலும் திருத்திக் கொள்ளலாம் என்ற முறையில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

> **மாஸ்கோவில் உலக வரலாறு**
>
> மறைந்த இந்தியத் தலைமை அமைச்சர் பண்டித சவகர்லால் நேரு அவர்கள், சிறையிலிருந்தவாறு தம் மகளுக்கு எழுதிய கடிதங்கள் 'உலக வரலாற்றில் ஒளிக் கதிர்கள்' என்ற பெயரில் நூல் வடிவில் வெளிவந்துள்ளது. இந்த நூலை, மாஸ்கோவில் ஒரு புத்தக நிறுவனம் ரஷ்ய மொழியில் வெளியிடும் பணியை மேற்கொண்டுள்ளது.

உழவனுக்கு நிலம் சொந்தம் என்பது போல, தொழிலாளிக்குத் தொழில் சொந்தம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். கலைஞர் அரசு, கழக அரசு உழைப்பவனுக்கு உடைமை சொந்தம் என்ற அடிப்படையில் இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் இந்தத் திட்டத்தை அமல் படுத்தியிருக்கிறது.

முதல் கட்டமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள பேருந்துகளை எடுத்துக்கொண்டு இயங்குகிற சோழன் போக்கு வரத்துக் கழகத்தில் இந்த ஆண்டு மே திங்களில் தொழிலாளர்கள் நாள், உலகத்தில் அத்தனை தொழிலாளர்களும் உரிமையோடு கொண்டாடுகிற நாள்— அந்த நாளில்—சோழன் போக்குவரத்துக் கழகத்தில் இந்தத் திட்டத்தை அமல் படுத்துவதாக இருக்கிறோம். அதற்காகச் சில அனுமதிகளையெல்லாம் மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கிறோம். கொடுத்துவிடும் என்று நம்பிக்கை இருக்கிறது. இப்படிச் சட்டத்தைத் திருத்தித் தொழிலாளர்களை நேரடியாகப் பங்குதாரர்களாக ஆக்கும் வரையில், ' கன்வர்டபிள் டிபன்சர்ஸ் ' மாற்றக்கூடிய பங்கு முதலீடுகள் அதற்கு 8 சத விகிதம் பங்கு கொடுக்கப்படும். அதற்கு மேல் 10—12 சத விகிதம் டிவிடென்ட் வந்தால் அதை அவர்கள் ஷேராக மாற்றிக்கொள்ளத் தொழிலாளிக்கு உரிமை இருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் இதுவரையில் நாம் பொருளாதாரக் கருத்தினால் பார்க்கிறபோது, முதலாளிகள் இருப்பார்கள், தொழிலாளிகள் இருப்பார்கள், தொழிலாளர்கள் அவர்கள் சொல்வதைக் கேட்டு நம்முடைய உறுப்பினர் சுரேந்திரன் அவர்கள் சொல்லியது போல்—பணிந்து, அடங்கி, வணங்கி நடக்க வேண்டும். அதற்குப் பிறகு பொதுவுடைமைத் தத்துவத்தின் அடிப்படையில் என்ன ஏற்பட்டது என்றால் ஒரு அதிகாரி சொல்வதற்குப் பணிந்து அடங்கி, வணங்கி நடக்க வேண்டும். ஆனால், தமிழகத்திலே, ஒரு ஜனநாயக உணர்வு, ஒரு சோஷலிச உணர்வு, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல், அறிவுக்கு ஏற்ற சமதர்மம், என்னவென்றால், நாம் சில பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகக் கூடாது. கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாது. பகுத்தறிவுக்கு ஏற்ற அளவுக்கு உழுபவனுக்கு எப்படி நிலம் கொடுக்கிறோமோ அதைப் போல் உழைப்பவனுக்கு உரிமை கொடுக்க வேண்டும் என்ற முறையிலே சமதர்மத் திட்டத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தமிழகத்திலே துவக்கியிருக்கிறோம். ஆகையால் இந்த மன்றம் நிச்சயமாகப் பெருமைப்பட வேண்டும், மகிழ வேண்டும். தமிழகத்திற்கு இந்தப் பெருமை உலக நாடுகளிலே கிடைத்து இருக்கிறதே என்று எண்ணுகிறபோது, தமிழக அரசைப் பாராட்டவும், தமிழக அரசை நடத்திச் செல்கிற சிறந்த சமதர்மவாதியாகிய கலைஞர் அவர்களைப் பாராட்டவும், நான் மட்டுமல்ல, இந்த மன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, இந்த நாடே, இந்த உலகமே கடமைப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.


**[தமிழ்நாடு சட்டப் பேரவையில் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது ஆற்றிய பதிலுரையிலிருந்து]**

# அறநிலையத் துறையின் அரும் பெரும் சாதனைகள்

தமிழ்நாட்டிலே இருக்கின்ற அறநிலையங்கள் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாகக் கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பற்றி, புதிய நிறுவனங்களைக் கண்டு பிடிக்கவும், அதே போல் புதிய நிலையங்களுக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும், அல்லது பல்வேறுசொத்துக்களாக இருந்தாலும், அவையெல்லாம் தனியாருடைய பொறுப்பிலே இருக்கின்றன, அவற்றை அரசுக்கு மாற்ற வேண்டும். அவற்றைஅரசுக்குக் கொண்டுவர வேண்டும், அவை இருப்பது கண்டுபிடிக்கப்பட வேண்டும். நம்முடைய துறையின் கட்டுப்பாட்டின் கீழ் அவற்றைக் கொண்டு வரவேண்டு மென்ற நோக்கத்தோடுதான் – இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இதற்காகத் தனியாக ஒரு அதிகாரியை நியமித்தோம்.

அவரின்கீழ் பல அதிகாரிகளை நியமித்து, இன்றைய வரையிலே அவர்கள் தேடிக் கண்டுபிடித்திருப்பது 40,247 நிறுவனங்கள். அவைகளுக்கு 1,98,920 ஏக்கர் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன என்று குறிப்பிலேயே கொடுத்திருக்கிறேன். இப்படிப்பட்ட இடங்களைப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறோம். 13,000-க்கு மேற்பட்ட அறநிலையங்கள் நம்முடைய பொறுப்பிலே இருந்தாலும், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை 4,0000க்கு மேற்பட்டவை என்று சொல்லி இருக்கிறோம். ஆனால், தனியார் நிறுவனங்களாக இருந்தாலும், அவைகளைச் சேர்ந்த சொத்துக்களாக இருந்தாலும், அவைகளை இத்துறையினர் எடுத்துக் கொள்கிற நேரத்தில், அவர்கள் நீதி மன்றத்திற்குப் போகிறார்கள். நீதி மன்றத்திலே தடை உத்தரவு பெறுகிறார்கள். எப்படி இருந்தாலும் தீவிரமாகக் கவனம் செலுத்திஉறுப்பினர்கள்சொன்ன கருத்துக்களைக் கொண்டு எதிர்காலத்திலே நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதைப்போலச் சித்தவைத்திய நிலையங்களையெல்லாம் நிறையத் துவக்க வேண்டுமென்று உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் பேசிய நேரத்திலே சொன்னார்கள். ஏற்கெனவே சில கோயில்களிலே துவக்கப்பட்டு, 13, 14 சித்த மருத்துவ மனைகள்



மாண்புமிகு அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன்

அமைக்கப்பட்டதிலே, சில இடங்களிலே அவை வெற்றிகரமாக நடைபெறவில்லை. சில இடங்களிலே மக்கள் விரும்பவில்லை. கோயில் நிதியைச் செலவழிக்கின்ற நேரத்தில்அதை வீணாக்காமல் எங்கே தேவையென்பதையறிந்து சித்த மருத்துவ மனையைத் துவக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். ஆகவே வருகின்ற ஆண்டுகளில் எந்த எந்தக் கோயில்களில் உபரி நிதி இருக்கிறதோ அந்த அந்தக் கோயில்களில் இந்தச் சித்த வைத்திய மனைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று நாங்கள் நினைத்திருக்கிறோம்.

கோயில் கல்வெட்டுக்களிலிருந்து வரலாற்றைத் தயாரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளிலிருந்து நாம் வரலாறுகளைத் தயாரிக்கிறோம். ஒவ்வொரு மாவட்டவாரியாகக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் போன்றவற்றிலிருந்து, அவற்றிலிருக்கின்ற வரலாற்றுச் சான்றுகளை எடுத்து வரலாறு தயாரித்து வருகிறோம். இப்படிக் கூறுகின்ற நேரத்தில் நிச்சயமாக நம்முடைய தமிழ்நாட்டினுடைய வரலாறு தயாரிக்க முடியும் என்ற நோக்கத்தில்தான் அதற்கான முயற்சிகள் எதிர்காலத்திலே மேற்கொள்ளப்படும் என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறேன்.

அடுத்து, "கோயில்களுடைய நிலத்தையெல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டும்; இந்த மதத்திற்குச்சம்பந்தப்பட்ட நிலங்களை மட்டும் எடுத்துக்கொள்ளக் கூடாது; ஏன் வேறு மதங்களுடைய நிலங்களை எல்லாம் எடுப்பதில்லை" என்று சௌடி சுந்தர பாரதி அவர்கள் குறிப்பிட்டார்கள். கோயில் நிலங்கள் ஏராளமாக இருந்தாலும் அவற்

றிற்கு வெவ்வேறு வருமானக் குத்தகை என்று யார் யாரோ அனுபவித்து வருகிறார்கள். இலட்சக் கணக்கான ரூபாய் குத்தகை பாக்கி வரவேண்டி இருக்கிறது. அதனாலேயே சில கோயில்கள் பாதிக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆதலால், கோயில்களுக்குப் பாதகம் இல்லாத வகையில் அந்தக் கொள்கையைச் செயலாற்ற எதிர்காலத்திலே திட்டமிட்டிருக்கிறோம்.

நிருவாக அதிகாரிகளைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டிலே, நம்முடைய துறையின்கீழ் உள்ள கோயில்களில் நிருவாக அதிகாரிகளை நாம் நியமிக்க முயற்சிக்கிறோம். ரூபாய் 1,000 அளவிலே வருமானம் உள்ள கோயில்களுக்கு நிருவாக அதிகாரி போட்டால், அவருடைய சம்பளத்திற்குச் சரியாகப் போகும் என்று சொன்னார்கள். அங்கே நிருவாக அதிகாரிகளை நியமிப்பதில்லை. ஆனால், 10 கோயில்கள், 15 கோயில்களை ஒன்றாகச் சேர்த்து, குரூப் செய்து, அவைகளுடைய வருமானத்தைக் கண்காணிப்பதற்கு — செலவைக் கண்காணிப்பதற்கு— சிறந்த நிருவாகத்தை ஏற்படுத்த வேண்டும். அதைக் கருத்தில் கொண்டு, நிருவாக அதிகாரிகளைப் போடவேண்டுமென்று யோசனை செய்து கொண்டிருக்கிறோம். எதிர் காலத்திலே அதுவும் செயல்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ரூபாய் 200 வருமானம் வருகிற கோயில்களிடமிருந்து கூட கான்ட்ரிபியூஷன் கேட்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் பேசுகின்ற பொழுது சொன்னார்கள். ரூ. 1,000 வரை வருமானம் வருகிற கோயில்களுக்கு 100-க்கு ரூ. 2 கொடுத்தால் போதும் என்று வைத்திருக்கிறோம். அந்த நிலைமையிலேதான் கான்ட்ரிபியூசன் வசூல் செய்கிறோமே தவிர, ஏதோ அந்த ஆலயத்தினுடைய வருமானத்தைப் பாதிக்கிற அளவுக்கு கான்ட்ரிபியூசன் வசூலிக்கப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயில் சொத்துக்களை, வருமானத்தை வேறு காரியத்திற்குப் பயன்படுத்தக் கூடாது, என்று சொன்னார்கள். வேறு நிகழ்ச்சியிலே சொன்ன பதிலையெல்லாம் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால், வேறு காரியத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று அதே நிகழ்ச்சியிலே ஒப்புக்கொண்டார்கள்.

## ஒலிம்பிக் செலவு

*1972 ஆம் ஆண்டு முனிச் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டின் செலவு, 2,130 மில்லியன் சுவிஸ் பிரான்சஸ் ஆகும். இது, 1948 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்குச் செலவான தொகையைவிட 400 மடங்கு அதிகம்: 1968 ஆம் ஆண்டு மெக்சிகோவில் நடைபெற்ற விளையாட்டுக்கான செலவைவிட நான்கு மடங்கு அதிகம். சாலை அமைப்பு, தங்கும் வசதிகள், விமான நிலைய விரிவுப் பணிகள் மற்றும் பலவகைப் பணிகளுக்கு ஆகிய செலவுகளும் இந்தத் தொகையில் அடங்கும். 1972ல் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்கு வந்த பார்வையாளரின் எண்ணிக்கை 44,78,252 ஆகும்.*

இருந்தாலும் இங்கே பேசியாக வேண்டியிருக்கிறது. அனைத்தையும் நாம் வேறுகாரியங்களுக்குச் செலவு செய்யவில்லை.

குறிப்பாக பழனியிலே இருக்கிற திருக்கோயில் 52 இலட்சம் ரூபாய் வருமானத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. பழனி கோயிலிலே இருந்து வருகின்ற வருமானத்தை அந்தக் கோயிலுக்கே முழுவதுமாகச் செலவு செய்யவில்லை. அங்கேயுள்ள அறங்காவலர்கள், பக்தர்கள் ஆண்டவனுக்குச் செய்கின்ற எல்லாச் செலவுகளும் போக, மீதியிருக்கிற பணத்திலேதான் சமுதாயத்திலே தாழ்ந்த நிலையில் உள்ள மக்களுக்காகச் செலவு செய்கின்றோம். அங்கே 30 ஊமைக் குழந்தைகளுக்குப் பேசுவதற்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய முயற்சியை மேற்கொள்ளுகின்ற முறையிலே சென்ற ஆண்டிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு பள்ளியைத் துவக்கி வைத்தார்கள்,

பேசவே முடியாத நிலையிலிருந்த 30 குழந்தைகள் பேசுவதற்கும், புத்தகம் படிப்பதற்கும் முடிகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால் அதைவிடச் சிறந்த திருப்பணி ஆண்டவனுக்கு என்ன செய்ய முடியும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அனாதைகள், ஏழைக் குழந்தைகள் இவர்களுக்காகக் காப்பகங்கள் ஏற்படுத்தி அவர்களுக்கு எல்லாம் உதவிகளைச் செய்து வருகிறது. இதையெல்லாம் தவறு என்று சொன்னால் அந்தத் தவறைச் செய்வதற்கு அரசாங்கம் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழையான கோயில்களுக்கே பயன் படுத்துங்கள்— கோயில்களுக்கே பயன்படுத்துங்கள் என்று அவர்கள் சொல்வது கோயில் திருப்பணிகளுக்குச் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 1966–67-ஆம் ஆண்டிலே 200 கோயில்களுக்குத் தான் திருப்பணி செய்துகொண்டு இருந்தார்கள். இப்பொழுது நாம் 700 கோயில்களுக்குத் திருப்பணி செய்து வருகிறோம். வருகின்ற ஆண்டிலே 1,200 கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வதற்குத் திட்டம் இட்டிருக்கிறோம். இதற்காக அரசாங்க உதவி 50 ஆயிரம் ரூபாய் என்றுதான் இருந்தது. அதற்குப் பிறகு 2 இலட்சம் ரூபாய் என்று மாறி 4 இலட்சம் ரூபாய்க்கு வந்து நின்றது. 5 இலட்சம் என்பது மாறி இந்த ஆண்டு அரசாங்க உதவி 6 இலட்சம் ஆகக் கொடுத்து இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, கோயில் திருப்பணிகளைக் குறைத்துக் கோயில் நிதியிலிருந்து வேறு காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தணியோடு சேர்ந்த கோயில்களுக்கும் திருப்பணி வேலைகள் செய்யப்படவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். திருத்தணிக் கோயிலிலே ஏராளமான நிதி வருமானம் வருகின்றது. எனவே, அதைச் செய்வதில் தடை ஒன்றும் இல்லை. அதைச் சீக்கிரமாகச் செய்வதற்கு, அந்தக் கோயில்களைப் புதுப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு நடைபெற வேண்டுமென்று குற்றச்சாட்டுச் சொன்னார்கள், ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்படுவதாகவும், அதனால் அரசியல் வந்துவிட்டதாகவும் சில பேர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, சேராதவர்களாக இருந்தாலும் சரி, கோயில்களில் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் எங்கேஎந்தக் குறை என்பதைச் சுட்டிக்காட்ட

வேண்டும். கட்சி ரீதியிலே குற்றச் சாட்டுச் சொல்ல வேண்டுமென்று தவருன கருத்தைச் சொல்கிருர்கள் என்பதைத்தான் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் எங்கேயும் நடைபெருவண்ணம் முன்னுலே நடைபெற்றது போன்ற பூசைகள், கோயில் வருமானத்தைச் சீர்செய்ய வேண்டுமென்ற முறையிலே காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அர்ச்சகர்களாக, தாழ்த்தப்பட்ட மக்களை நியமிக்க வேண்டுமென்பதற்காக இந்த அரசு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அது இந்த மன்றத்திலே நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். அவர்கள் அதை ஏதோ சாதாரணமாகச் சொன்னுர்கள். எந்த அளவிற்கு அதனுல் தாழ்த்தப்பட்ட மக்கள் மகிழ்ச்சியடைகிருர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஏதோ ஒரு பெரிய உத்தியோகத்தைப் பெற்றதுபோலக்—கிடைக்காதது தங்களுக்குக் கிடைத்ததைப்போலஅதை அவர்கள்கருதுகிருர்கள் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்திலே அவர்கள் நிலை உயர்வதற்கு,அவர்களுடைய அந்தஸ்து உயர்வதற்கு அப்படிப்பட்ட சட்டத்தை நாம் கொண்டுவந்திருக்கிருேம். அர்ச்சகர்களாக நியமிக்கும் சட்டம் கொண்டு வந்தது போதாது, அவர்கள் ஐ. ஏ. எஸ். ஆக வர வேண்டுமென்று சொன்னுர்கள். ஐ. ஏ. எஸ். உத்தியோகத்திற்கு அவர்களும் வர முடியாது என்பதில்லை. அவர்களும் வரலாம். ஜனுதிபதியாகக் கூட, தாழ்த்தப்பட்ட மக்கள் வரலாம். ஆனுல் அர்ச்சகர்களாக வரமுடியாது என்ற நிலை இருந்தது. அந்தத் தடையையும் நாம் நீக்கவேண்டுமென்றுசொல்கிருேம். சாதாரணமாக, தாழ்த்தப்பட்ட குடிமகன் தேர்தலில்போட்டியிட்டு வெற்றி பெற்று ஜனுதிபதியாக வருவதற்கு முடியும். ஆனுல் ஆண்டவனைத் தொட்டு வழிபட, அர்ச்சகர்களாக இருந்து மாலைபோட முடியாத நிலைமை இருந்தது. அப்படிப்பட்ட தடையை நீக்க வேண்டுமென்றுதான் நாம் சொல்லுகிருேம்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது தேவஸ்வம் போர்டு பற்றிச் சொன்னுர்கள். ஏற்கெனவே அதைப்பற்றி நான் சொல்லி இருக்கிறேன். நாமே அதைத் திருத்துவது ஆக இருந்தாலும் கூட மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலோடுதான் இங்கே திருத்தத்தைக் கொண்டு வரக்கூடிய நிலைமை இருக்கிறது என்று சட்டத்துறையின் கருத்து இருக்கிறது. எனவே, மத்திய அரசிற்கு அனுப்பியிருக்கிருேம். சிக்கிரத்திலே வந்துவிடும் என்று எதிர்பார்க்கிருேம்.

வடமொழியிலே சில கோயில்களில் அர்ச்சனை நடப்பதாகச் சொன்னுர்கள். தமிழ்நாட்டிலே தமிழிலேதான் வழிபாடு நடைபெறவேண்டும். யாராவது விரும்பிக் கேட்டால் வடமொழியிலே நடத்தலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. யாராவது தமிழிலே கேட்டு, அதை மறுத்திருப்பார்கள் என்ருல், எந்தக் கோயிலில் அப்படி நடைபெற்றிருக்கிறதுஎன்பதைத் தெரிவித்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு கருத்துக்களையெல்லாம், கோயில் நிருவாகம் நல்லமுறையிலே நடைபெறவேண்டும், கோயில் சொத்துக்கள் எல்லாம் சிறந்த முறையிலே நிருவகிக்கப்படவேண்டுமென்றெல்லாம் நல்ல பல யோசனைகளைத் தெரிவித்து இருக்கிருர்கள். அவைகளைக் கருத்திலே கொண்டு எதிர் காலத்திலே இந்தத் துறை செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வருகின்ற ஆண்டிலே முக்கியமான சில பணிகளைச் செய்யத் திட்டமிட்டிருக்கிருேம்.

தமிழகத்திலே ஏழை எளியவர்களுடைய குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு இல்லாத காரணத்தினுலே எந்த அளவிற்கு அவதிப்பட்டிருக்கிருர்கள் என்பது தெரியும். அரசாங்கம் பல்வேறு துறைகளிலிருந்து ஊட்டச் சத்துணவு கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. தமிழகத்திலே எந்த எந்தக் கோயில்களில் உபரி நிதியிருக்கின்றதோ அதனைப் பயன்படுத்திச் சாதாரணக் குழந்தைகளுக்குப் பால் வழங்குவதற்கு, மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குப் பால் வழங்குவதற்குத் திட்டமிட்டிருக்கிருேம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரையிலே பழமுதிர் சோலை என்ற இடம் இருக்கிறது. தமிழ்நாட்டிலே முருகனுக்கு 6 படைவீடுகள் என்று சொல்வார்கள், 6 கோயில்கள் சிறப்பாக இருக்கின்றன. அவற்றில் ஒன்ருன பழமுதிர்ச்சோலை சிறிய கோயிலாக இருப்பதால், அங்கே புதிதாக ஒரு கோயிலாக எழுப்புவதற்கு 25 இலட்சம் ரூபாய் செலவிலே புதிய கோயிலை அமைக்கக் கருதியிருக்கிருேம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே தமிழ்க் கவிஞர்களை ஊக்குவிப்பதற்குச் சிறந்த கவிதைகளைப் பாடுகின்ற திறமைப் பெற்றிருக்கிறவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே—சங்க காலத்திலே இறைவனே பாட்டுப் புலவனுக மாறிச் சங்கம் ஏறித் தமிழ்க் கவிதை பாடிப் பாண்டிய மன்னனிடத்திலே பொற்கிழி பெற்ற வரலாறு நமக்குத் தெரியும். அந்த வரலாற்றை மக்களுக்கு உணர்த்துகின்ற வகையிலே அந்த மதுரையிலே கவிதைப் போட்டி நடத்திச் சிறந்த கவிஞர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்குப் பொற்கிழி வழங்குவதற்கான திட்டமும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலே திருவாமுத்தூர் என்ற ஊரில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னுலே கண்பார்வையற்ருேருக்கு உணவு கொடுத்துப் படிப்பு சொல்லிக் கொடுத்துத் தனியாகக் கல்வெட்டுச் சான்றுகள் இருக்கின்றன. மேலும் அந்தச் சான்றுகளை நாட்டுக்கு உணர்த்துகின்ற வகையிலே கண்பார்வைப் பள்ளியை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பேசும் வபாட்

மனிதர்கள் பேசுவது போலவே இயந்திரமும் பேசுகிறது. இந்த அதிசய மனிதனை டோக்கியோவிலுள்ள வரதோ பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி குழு உருவாக்கியுள்ளது. இந்த அதிசய இயந்திரத்திற்கு இரு கால்களும், செயற்கைக் காதுகளும், வாயும், கண்களும் பொருத்தப்பட்டுள்ளன. ஒருவர் கேட்கும் கேள்விகளுக்கு இது பதிலளிக்கிறது. இதைக் கம்ப்யூட்டர் மூலம் பேச வைத்துள்ளனர். இந்த இயந்திரத்திற்கு வபாட் என்று பெயர்.

தஞ்சையில் இருக்கின்ற சோழ மாதேவியில், இராஜ இராஜ சோழனின் தமக்கை குந்தமாதேவி இருக்கின்ற திருக்கோயிலில் மருத்துவ நிலையம் அமைத்து அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு மருத்துவப் பணியாற்றினர் என்று கல்வெட்டிலிருந்து காண்கிறோம். அத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தப் பகுதியில் சித்த மருத்துவச்சாலை ஒன்றினை ஏற்படுத்த இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறையிலிருக்கின்ற திருக்கோயில் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வை அறிவித்திருக்கின்றேன். அதைப் பற்றிச் சில சந்தேகங்களைக் கூட என்னிடம் வந்து கேட்டார்கள். நமது துறையிலிருக்கின்ற கோயில்களில் எல்லாம் ஒரே விதமாக வருமானம் இல்லை. ரூ. 200 வருமானம் உள்ள கோயிலிலிருந்து ரூ. 52 இலட்சம் வரை வருமானமுள்ள பல்வேறு கோயில்கள் இருக்கின்றன. இந்தத் துறையிலுள்ள இந்தத் கோயிலில் பணியாற்றுகின்ற 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்குச் சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டு ஆண்டுதோறும் ஊதிய உயர்வும் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நாட்களாக வைத்து, எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டுமென்று தம்பி தேவேந்திரன் அவர்களும், மேலவையில் மாண்புமிகு தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் பல முறை கேட்டிருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்னால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவையில் வரவு-செலவுத் திட்டத்தின் பேரில் விவாதத்திற்குப் பதிலளிக்கின்ற போது, இந்த மன்றத்திலே அது அறிவிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த ஆணையை ஏற்றுத்தான் 17 ஆயிரம் கோயில்களில் வேலை செய்கிற 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர்களுக்குச் சம்பள விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் ரூ. 60 இலட்சம் ஆண்டுதோறும் அதிகமாகச், செலவாகுமென்று எதிர்பார்க்கிறோம். இதனால், முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் ரூ. 30 சம்பளம். இப்போதும் அதே ரூ. 30 சம்பளம் என்றிருக்கின்ற நிலையை மாற்றி, அவர்கள் சம்பள உயர்வு பெறுகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். அற நிலையங்களில் வருகின்ற மொத்த வருமானத்தில் மற்றச் செலவுகளுக்கும் பணம் இருக்க வேண்டுமென்று, 30 விழுக்காட்டிற்கு மேல் நிருவாகச் செலவுகள் போகக்கூடாது என்று இருக்கிறது. எனவே, அந்த 30 விழுக்காட்டிற்குள் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்ற நிலையில் அந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே ஊதிய உயர்வுக்கு வழிவகை செய்து, சட்டம் செய்யப் பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு தரப்பட்ட வருமானம் உள்ள கோயில்களின் ஊழியர்களின் சம்பளத்தை முறைப்படுத்துவது பற்றிப் பிரச்சினை எழுந்தது. அதைப் பரிசீலித்துக் கோயில்களை அவற்றிற்கு வருகின்ற வருமானத்தின் அடிப்படையில், 12 பிரிவுகளாகப் பிரித்திருக்கிறோம். முதலில் 15 இலட்சத்திற்கு மேற்பட்ட வருமானம் உள்ள கோயில்கள் என்று தனியாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட பணியாளர்கள் அர்ச்சகராக இருந்தாலும், நாதசுரம் வாசிப்பவராக இருந்தாலும், எழுத்தராக இருந்தாலும், ரூ. 112 அடிப்படைச் சம்பளம் கொடுக்கலாம் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். அடுத்து ரூ. 5 இலட்சத்திலிருந்து ரூ. 15 இலட்சம் வரை 2—வது நிலையிலேயும், 2 இலட்சத்திலிருந்து ரூ. 5 இலட்சம் வரை 3-வது நிலையிலேயும், ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ. 2 இலட்சம் வரை நான்காவது நிலையிலேயும், ரூ. 50 ஆயிரத்திலேலிருந்து ரூ. 1 இலட்சம் வரை 5—வது நிலையிலேயும் வைக்கப்பட்டிருக்கின்றன. ரூ. 50 ஆயிரத்திற்குக் கீழே வருமானம் உள்ள கோயில்களையும், 5 பிரிவுகளாகப் பிரித்து ரூ. 2 ஆயிரத்திலிருந்து ரூ. 5 ஆயிரம் ; ரூ. 5 ஆயிரத்திலிருந்து ரூ. 10 ஆயிரம்; ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ. 20 ஆயிரம் ; ரூ. 20 ஆயிரத்திலிருந்து ரூ. 30 ஆயிரம்; ரூ. 30 ஆயிரத்திலிருந்து ரூ. 40 ஆயிரம்: ரூ. 40 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம்—இப்படி ஒட்டு மொத்தமாக 12 நிலைகள் உள்ள கோயில்களாகப் பிரித்து வருமானத்திற்குத் தகுந்தாற்போல் சம்பள உயர்வு வைத்துச் சம்பளத்தை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில், இந்த ஆலயங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் அத்தனை பேரும் பயனடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த ஊழியர்களுடைய கோரிக்கையை இன்றைய தினம் நமது அரசு நிறைவேற்றியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**[தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறநிலையப் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு அளித்த பதிலுரையிலிருந்து]**



**வெண்பாப் போட்டி-60**

பாதைகளும் சாலைகளும் பெருகத் "தமிழக அரசு" செய்த பணி குறித்து நேரிசை வெண்பா எழுதி அனுப்புக.

**முடிவு நாள் ; 1-8-1973**

**வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :**

**ஆசிரியர் (வெண்பாப் போட்டி),**
**தமிழக அலுவலகம்,**
**அரசினர் தோட்டம், சென்னை-600002.**



# கராத்தே

"கராத்தே" "கராத்தே" என்கிறார்களே அப்படி என்றால் என்ன?

'கராத்தே' என்றால் 'வெறுங்கை' என்று பொருள்.

"வெறுங்கையா?"

ஆமாம். 'KARATE' என்ற சொல் இரு சொற்களாலாகியது.




அட்டைப் படக் கட்டுரை.

அமெரிக்க நாட்டில் ஒரு மாணவர் படிக்கும் பொழுதே பணி செய்து வந்தால் நமக்கு வியப்பான நிகழ்ச்சி. பத்திரிகைகளுக்கும் பெரிய செய்தி.

நம் நாட்டைச் சேர்ந்த இளைஞர் 'தமிழ்மணி' அகில இந்தியாவிலும் கராத்தேக் கலை வல்லவராகத் திகழ்கிறார். மருத்துவக் கல்லூரி மாணவரான இவர், நமது காவல் துறையினருக்குக் 'கராத்தே' பயிற்சி அளித்து வருகிறார்.

இந்தப் பெருமை மட்டுமல்ல—

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்திலிருந்து சென்ற வீரக்கலையை மீண்டும் தமிழகத்திற்குக் கொண்டு வந்த பெருமை முழுதும் 'தமிழ் மணி'க்கே உரியது!



'Kara' என்றால் 'empty' என்றும் 'te' என்றால் 'hand' என்றும் பொருள்.

"ப்பூ...இந்த 'வெறுங்கை'க்கா இவ்வளவு பிரமாதமான விளக்கம்......?

"ஆமாம், வெறுங்கைதான்! ஆனால் அந்த வெறுங்கை விளைத்திடும் வீரத்திற்கு ஈடுமில்லை; இணையுமில்லை! இதன் பெருமைக்கு எடுத்துக்காட்டு–கராத்தே ஜப்பான் நாட்டின் வீரக் கலைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. ஜப்பான் நாட்டின் பள்ளி மாணவர்கள் கராத்தே அல்லது ஜூடோவைக் கட்டாயம் பயின்றாக வேண்டும்.

ஜப்பானிலிருந்து உலகம் முழுவதும் பரவியிருக்கும் 'கராத்தே'க்குத் தாயகம் நமது தமிழகம்தான். வியப்பாக இருக்கிறதா? உண்மை அதுதான்!


உலகின் பல பாகங்களிலிருந்தும் கராத்தே பற்றிய நூல்கள் வெளி வந்துள்ளன. அவை அனைத்தும் இந்தியாவின் தென் பாகத்தில்தான் 'கராத்தே' தோன்றியுள்ளது என்பதை ஆதாரத்துடன் விளக்கியுள்ளன.

கராத்தேக்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு.

தமிழ்நாட்டில் கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு 'கராத்தே' கண்டுபிடிக்கப்பட்டது.

விலங்கினங்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள, தமது உடலுறுப்புக்களை எவ்வாறு பயன்படுத்திக் கொள்கின்றன என்பதை கவனித்து வந்த மன்னன் ஒருவன், அந்த நுணுக்கங்களின் அடிப்படையில் மனித உடலுக்கேற்பக் கராத்தேயைக் கண்டுபிடித்தான்.

மனிதனின் பாதுகாப்புக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட இக்கலை, மனிதனுக்குக் கட்டுப்பாட்டையும் வலுவான உடலையும் அளிப்பதாக அமைந்தது.



மகாயானம் புத்தக் கொள்கையைக் கண்டு பிடித்தவரும் போதி தர்மா என்று அழைக்கப்படும் தர்மதத்தன் என்ற புத்த பிக்கு தமிழ்நாட்டிலிருந்து சீன நாட்டின் தென்பகுதிக்குச் சென்று குடியேறினார்.

அவர் 'கராத்தே'க் கலையில் வல்லவர். புத்த பிக்குகள் ஆயுதம் எடுத்துச் செல்லக் கூடாது என்பதால் பகைவர்களிடமிருந்து மின்னல் வேகத்தில் காப்பாற்றிக் கொள்ள கையையும் காலையும் மட்டும் பயன்படுத்தும் கராத்தேக் கலையைப் பயின்றிருந்தார். புத்த சமயக் கொள்கையுடன் 'கராத்தே'க் கலையையும் தர்மதத்தன் பரப்பினார்.

ஆனால், அப்பொழுது ஜப்பானில் கராத்தே பரவவில்லை.

கராத்தே மறையாமல் வளர்ந்திருந்த இடம் ஜப்பானுக்குத் தெற்கே உள்ள 'ஓகினாவா' (Okinawa) என்ற தீவுதான். இங்கிருந்துதான் ஜப்பான் மக்களுக்குக் கராத்தே 1925-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. பிரான்சு நாட்டுக்கு 1950-ஆம் ஆண்டில் கராத்தே அறிமுகப்படுத்தப்பட்டது.

இன்று உலகில் பிரான்சு, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, கனடா, அமெரிக்கா, மலேசியா, இந்தோனேஷியா, இலங்கை, இங்கிலாந்து

முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழ்மணியின் 'கராத்தே'க் கலைப் பயிற்சிகளைப் பார்த்துப் பாராட்டி வாழ்த்துகின்றார்!



என்று பலபாகங்களிலும் 'கராத்தே' பரவியுள்ளது. ஜப்பான் நாடோ தன் போர்க் கலைகளில் ஒன்ருகக் கராத்தையை ஆககியுள்ளது.

'கராத்தே'யில் உலகிலேயே மிகச் சிறந்துவிளங்குகிறது ஜப்பான்.

'கராத்தே'யில் ஏழு எட்டு விதங்கள் உள்ளன. ஜப்பான் நாட்டினர் கராத்தே பயிற்சிக்காகப் பல்கலைக் கழகம் போன்ற அமைப்பை நிறுவியுள்ளனர். அவர்களின் அனுமதியுடன்தான்–அங்கு பயிற்சி பெற்று–சான்றிதழ் பெற்று–கராத்தே கழகம் அமைத்து மற்றவர்களுக்குப் பயிற்றுவிக்க முடியும்.

'கராத்தே'க்கலையில் இந்தியாவிலேயே சிறந்தவராக, விளங்கி நம் நாட்டில் கராத்தேயைப் பரப்பி வருபவர் தமிழ்மணி என்ற இளைஞர்.

தமிழ்நாட்டில் கராத்தே இன்று பரவுவதற்குக் காரணமாகவுள்ள தமிழ்மணி எட்டு ஆண்டுகளாகக் கராத்தேயில் பயிற்சி உடையவர் ஆவார். (கராத்தே பயிற்சியின் முதிர்ச்சியையும் ஆற்றலையும் இடுப்பில் கட்டும் பட்டையின் வண்ணத்தை வைத்தே குறிப்பிடப்படும்) தமிழ்மணி 'ப்ளாக் பெல்ட்' பெற்றவர் ஆவார்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டை விட்டுச் சென்ற கராத்தேக் கலையைத் தமிழ்நாட்டுக்குத் திரும்பக் கொண்டு வந்திருக்கும் தமிழ்மணிக்குக் 'கராத்தே'க் கலையில் எப்படி ஈடுபாடு ஏற்பட்டது? கராத்தேயை எப்படி பயின்ருர்?


அது ஒரு சுவையான செய்தி மட்டுமல்ல–முயற்சி திருவினையாக்கும்......முயற்சி–மெய்வருத்தக் கூலி தரும் என்பதற்கும் ஆதாரமாகும்.

* * *

தஞ்சை மாவட்டத்திலுள்ள வடபாதிமங்கலம் பகுதியைச் சேர்ந்தவர் ஆர். வேணுகோபால் ரயில்வேயில் பணிபுரிகிருர். அவருடைய மூத்தமகன்தான் தமிழ்மணி.

தமிழ்மணியின் தந்தை அப்பொழுது திருச்சியில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அப்பொழுது எல்லாம் தமிழ்மணி மிகவும் மெலிந்தவராகக் காணப்படுவார். தவிர ஒரு காது கேட்காது. இதனுல் தாழ்வு மனப்பான்மை அதிகம். ஒருவருடனும் நெருங்கிப் பழகமாட்டார்.

இவைகளைப் பார்த்த தமிழ்மணியின் சிறிய தந்தைகளான திரு. சண்முகானந்த வடிவேலு அவர்களும், திரு. சந்திரன் அவர்களும் இவரை, கம்புச் சண்டை முதலிய வீர விளையாட்டுகளை கற்றுக் கொள்ளச் சொன்னுர்கள். அவர்கள் இருவருக்கும் அவைகளில் ஈடுபாடும் பயிற்சியும் உண்டு. எனவே, தமிழ்மணிக்கு ஆர்வத்தைப் புகட்டினுர்கள்.



திருச்சியில் லூர்துசாமி என்பவரிடம் கம்புச் சண்டைகளைப் பயின்ருர் தமிழ்மணி. பின்னர் இலைப்புள்ளி எம். கே. வி. மேனன் என்பவரிடம் களரிச் சண்டைகளையும், பாலன் குருக்கள் என்பவரிடம் பலவிதமான ஆயுதச் சண்டைகளை பயின்ருர்.

தமிழ்மணியின் ஆர்வம் - வீர விளையாட்டுகளில் நாளுக்கு நாள் பெருகியது.

சிலம்பத்தின் நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள மதுரை, தர்மபுரி முதலிய இடங்களில் எல்லாமிருந்து ஆட்களை அழைத்துவந்து வைத்துச் சிலம்பங்களைத் தமிழ்மணி கற்றுக் கொண்டார்.

இந்தச் சமயத்தில்தான் செக்கா குச்சி என்ற ஜப்பானிய நண்பர் ஒருவர் தமிழ்மணியிடம் கராத்தேயைப் பற்றிச் சொன்னுர். லயோலா கல்லூரிக்கு மாணவராக வந்திருந்த ஒனே என்பவரிடமும் முரோதோனே என்பவரிடமும் கராத்தேயைத் தமிழ்மணி பயின்ருர்.

'கராத்தே' சம்பந்தமாக வெளிவந்துள்ள புத்தகங்களை எல்லாம் வாங்கிப் படித்தார். இலங்கை, சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய இடங்களிலுள்ள கராத்தே பயின்றவர்களிடம் கடித மூலம் தொடர்பு கொண்டு 'கராத்தே' பயிற்சி பெற்ருர். ஜப்பான் கராத்தே கழகத்துடனும் தொடர்பு கொண்டு - கராத்தேயில் தனது பயிற்சியைப் பற்றியும் முன்னேற்றங்களையும் விளக்கி வந்தார். புகைப்படங்களையும் எடுத்து அனுப்பி வைத்தார். இப்படி எட்டு ஆண்டுகள் உருண்டோடின.

ஜப்பான் கராத்தேக் கழகம் தமிழ் மணியை அழைத்தது. அங்கே சென்று கராத்தே பயிற்சியைக்காட்டி, அங்குள்ள ஆசிரியர்களுடன் போட்டியிட்டுத் தமது ஆற்றலைக் காட்டி, 'கறுப்புப் பட்டை' பெற்றுள்ளார்.


நான்காவது டிகிரியான கறுப்புப் பட்டை (Black Belt) பெற்ற இந்திய நாட்டைச் சேர்ந்தவர் தமிழ்மணி ஒருவரே.

தமிழ்மணி பயின்றுள்ள கராத்தே முறையில் இவருக்கு இணையாக ஜப்பானியர் அல்லாதவர் இன்னும் ஒருவர்தான் உண்டு! உலகிலேயே ஜப்பான் நாட்டினர் அல்லாத இருவர்களில் ஒருவராகத் திகழ்கிருர் இவர். கற்றுள்ள முறையில் தென்கிழக்கு ஆசியாவிலேயே இவருக்கு இணையாகக் கராத்தேயில் வல்லவர் எவருமிலர்.

இந்தியாவில் கராத்தே கழகங்கள் அமைக்க வேண்டுமானல் தமிழ்மணியின் அனுமதியுடன் தான் தொடங்க வேண்டுமென்று ஜப்பானிய கராத்தேக் கழகம் சான்றிதழ் வழங்கியுள்ளது.

ஜப்பானிய கராத்தே கழகத்தில் தலைவரான யாமோகுச்சி கராத்தேயில் உயர்ந்த டிகிரியான 'ரெட் பெல்ட்' பெற்றவர். 63 வயதான இவருக்கு கராத்தேயில் இணையானவர்கள் உலகில் எவருமிலர். கராத்தே பிறந்த மண்ணை தமிழ்நாட்டிலிருந்து தமிழ்மணி வந்திருக்கிருர் என்பதால் மிகுந்த அன்பு பாராட்டியுள்ளார் யாமோகுச்சி.





ஆனால், அதே சமயத்தில் அங்குப் பயிற்சி பெற்றபோது ஏற்பட்ட விழுப்புண்கள் தமிழ்மணியின் உடலில் உள்ளன. அவை கராத்தேயின் பெருமையை அறிவிக்கின்றன. அந்த அளவுக்கு ஜப்பானிய கராத்தே கழகத்தினர் வீரத்துடன் பயிற்சி அளிக்கின்றனர். ஜப்பான் நாட்டு டெலிவிஷனில் தமிழ் நாட்டுச் சிலம்ப முறைகளை ஆடிக் காட்டியும் விளக்கங்களையும் தமிழ்மணி தெரிவித்தார். தமிழ்மணியின் திறமையை அங்குள்ள அனைவரும் பாராட்டினர்.

**கடினமான அந்தப் பயிற்சியில், வெற்றி பெற்று இந்தியாவில் 'கராத்தே'யில் வல்லவராகத் திகழும் தமிழ்மணியின் முயற்சியால்- உழைப்பால் தமிழ்நாடு கராத்தே கழகம் உருவாகியுள்ளது.**

நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு கராத்தே கழகத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள்.

தமிழ்நாடு கராத்தே கழகத்தின் பயிற்சிக் கூடம் நுங்கம்பாக்கம் ஏரிக்கரை மாநகராட்சி விளையாட்டரங்கத்தில் இயங்கி வருகிறது.

ஏறத்தாழ 30 பேர்களுக்குமேல் அங்கு, பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சித் தகுதி, 'பெல்ட்' அடிப்படையில் கணக்கிடப் படுகிறது. அந்த வண்ணங்களின் வரிசை வருமாறு :—

வெள்ளை,

மஞ்சள்,

வெளிர் பச்சை,

நீலம்,

ஊதா,

பிரவுன் (மூன்று விதங்கள்)

கறுப்பு.

இந்தத் தகுதிகளைப் பயிற்சியாளர்களுக்குத் தேர்வு வைத்துத் தமிழ்நாடு கராத்தேக் கழகம் அளிக்கின்றது.

இங்கு பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் கூட கராத்தே பழகுகின்றனர்.

ஆண்கள் மட்டுமா கராத்தே கற்கின்றனர்?

பெண்களும் கராத்தே பயில்கின்றனர். ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி மாணவிகள் கராத்தே கற்கின்றனர்.

சாந்தோம் உயர்நிலைப்பள்ளியிலும் கராத்தே கற்றுக் கொடுக்கப் படுகிறது.

இப்பொழுது தமிழ்நாடு காவல் துறையினருக்குக் 'கராத்தே' கற்றுக் கொடுக்கப்படுகிறது. எப்பொழுதும் இந்தியாவிலே எல்லா மாநிலங்களுக்கும் வழி காட்டியாக விளங்குபவர்கள் தமிழ்நாட்டுக் காவல் துறையினர். எனவே கராத்தேப் பயிற்சியிலும் இன்றுமுன்னோடியாகவே விளங்குகின்றனர்.


நமது காவல்துறையினருடன் பாரத் ஹெவி எலெக்ட்ரிகல் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் இப்பொழுது பயிற்சி பெற்று வருகின்றனர்.

**பிடிபட்ட குற்றவாளிகள் தப்பி ஓடாமலும், உயிருக்கு ஆபத்தற்ற நிலையில் குற்றவாளிகளைத் தாக்கிப் பிடிக்கவும் கராத்தேப் பயிற்சி உதவும்.**

ஜப்பான் நாட்டில் போலீசாருக்குக் கராத்தேப் பயிற்சி கட்டாயமாகும். இப்பொழுது இந்தோனேஷியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் கராத்தே போலீசாருக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டிலும் போலீசாருக்குக் கராத்தே பயிற்சியை கட்டாயமாக்க வேண்டுமென்று விரும்புகிறார் தமிழ்மணி. நமது போலீசார் கராத்தே பயிற்சி பெற்று முடிந்தவுடன், அதன் விளைவுகளை உணர்ந்தவுடன் மற்ற மாநிலத்தவர்களும் கராத்தே பயிற்சிக்காகத் தாமாகவே வருவார்கள் என்றும் தமிழ்மணி நம்பிக்கை தெரிவிக்கிறார்.

'கராத்தே' கற்பதால் மனக்



கட்டுப்பாடு, தன் பொருளுக்கோ, மற்றவர்கள் பொருளுக்கோ ஊறு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளும் மனப்பக்குவம், கடமையுணர்வு, உடல் ஆரோக்கியம், ஆசியர்களுக்கு மரியாதை கொடுக்கும் மனநிலை முதலியன உருவாகின்றன.'' என்கிருர் தமிழ்மணி.

உண்மைதான் கராத்தே பயிற்சி நடைபெறும் இடத்தில் இருந்து ஒருநாள் நாம் பார்த்தால் போதும், இந்த உண்மைகள் தெரியும்.

தமிழ்நாட்டு மாணவர்கள் அனைவரும் கராத்தேப்பயிற்சியில் சிறந்து விளங்கவேண்டும். பள்ளியிலும், கல்லூரியிலும் 'கராத்தே' கட்டாயமாக்கவேண்டும்; மாணவ, மாணவியரின் உடல் ஆரோக்கியத்திற்கும், கட்டுப்பாட்டுக்கும் கராத்தேப் பயிற்சி சிறந்த சாதனமாகும் என்கிருர் தமிழ்மணி.

எல்லாருக்கும் 'கராத்தே'ப் பயிற்சியளிக்கக் கூடிய அளவுக்கு நம்மிடையே கராத்தேப் பயிற்சியாளர்கள் மிகக் குறைவு. அவர்களை அதிக அளவில் தோற்றுவிப்பதில் முழுக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தமிழ்மணி விரும்புகிருர்.

தமிழ்நாடு கராத்தேக் கழகத்தினைத் தொடங்கி வைத்த நமது முதல்வர் கலைஞர் அவர்கள், 'கராத்தே'ப் பயிற்சியாளர்களின் ஆற்றல்களைக்கராத்தே நிகழ்ச்சிகள் மூலம் அறிந்துள்ளார்கள். முதல்வர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளுடன் வளரும் 'கராத்தே', தமிழ்நாட்டில் நன்கு வளரும் என்று நம்பிக்கையும் தெரிவிக்கிருர் தமிழ்மணி.

அனைத்து இந்தியாவிலும் கராத்தே'யில் வல்லவராகத் திகழும் தமிழ்மணியின் திறமைக்காக இந்தியா முழுவதும் பெருமைப்படலாம்.

*   *   *

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டிலிருந்து சென்ற கலையைத தாயகத்திற்குத் திருப்பிக் கொண்டு வந்த அரும்பணிக்காகத் தமிழ்மணியை எவ்வளவு பாரட்டினாலும் தகும்.

அது மட்டுமல்ல—


தமது சொந்த முயற்சியாலும் உழைப்பாலும் சிறந்து விளங்கும் தமிழ்மணி இந்த நாட்டின் இளைய தலைமுறையினருக்கு ஓர் எடுத்துக் காட்டு ஆவார்.

முடிவாக 'கராத்தே' வேந்தராகத் திகழும் தமிழ்மணியைப் பற்றி இரண்டு சுவையான செய்திகள்—

**உடல் வலுவையும் கட்டுடலையும் காக்கத் தமிழ்மணி அரிசிச் சோறு உண்பதில்லை.**

**அகில இந்தியப் புகழுக்குரிய இவர் இன்று ஒரு மாணவர்தான். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டில் பயில்கிருர்.**

**—மாமூலன்**






## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

# சேமிப்புப் பழக்கமே
# எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்



சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது. 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

# உலகில் இரண்டு கிளைகள்

டி.என். சுகி சுப்பிரமணியன்.

## நன்றிக்கு விலை இல்லை

விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்வது நேர்மை. விதி விலக்குகளைச் சாதகமாக்கிக் கொண்டு வாழ நினைப்பது சாமர்த்தியம். சட்டரீதியாகத் தம் சாமர்த்தியத்தை நிலைநாட்டவும் பிறரை சிக்கலுக்குள்ளாக்கவும் முயன்று கொண்டிருக்கிறார் ஆலை முதலாளி முத்தையா.

இது அவருக்குப் பழகிய பாதை.

செல்வம் செல்வாக்கு இரண்டும் சேர்ந்துவிட்டால் சிறு துரும்புக்கும் இரும்பன்ன, ஏன் இடிபோன்ற அசுர பலம் வந்து விடும். அவரைப் பொறுத்த மட்டில் அவருக்கு ஆயிரம் மனங்கள் இருப்பது உண்மை.

கருக்கிருட்டும் மறையாமல் கதிரொளியும் பரவாமல் கண்ணில் புகைபபடலம் விரிக்கும் அதிகாலைப் பொழுது.

கிண்டி-சைதாப்பேட்டை நெடுஞ்சாலையில் கார் விபத்து ஒன்று நிகழ்ந்துவிட்டது. விபத்துக்குள்ளான நபர் உயிராபத்தான நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறான். விபத்துக்கு வித்தாக இருக்கும் முத்தையாவோ எதுவுமே நடவாதவர்போல், தம் அருமை நண்பர்-ஆலையின் தலைமைப் பொறியாளர் தாமோதரனின் இல்லத்தில் அமர்ந்து சல்லாபித்துக் கொண்டிருக்கிறார். விபத்தின் கோரம் கண்ணுக்குள்ளேயே மூட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது. அவர் மனமோ புலியின் மனம். விபத்தை நடத்திவிட்டு விதிர் விதிர்த்துப் போகாமல், வேதனை கொள்ளாமல் அவரால் அமைதியாக இருக்க முடிகிறது.

அன்றாடம் விபத்துக்களையும் விடிவுகளையும் பார்த்துப் பார்த்துப் பழகிப்போன கம்பெனி முதலாளியாயிற்றே முத்தையா!

பொறியர் தாமோதரத்தின் வீட்டுத் தனியறையில் அமைதியின் மொத்த உருவமாக முத்தையா அமர்ந்திருக்கிறார். அவர் முன்னே டீப்பாயில் காலியான காபிக் கோப்பைகள்; வண்ண வண்ண நிறத்தில் இருக்கின்றன! சிகரெட் சாம்பல் கிண்ணம் பளபளப்பாகக் காட்சியளிக்கிறது. அன்றைய புத்திரிகைகள் பரவிக் கிடக்கின்றன. எதிரே கலவரம் தோய்ந்த முகத்துடன் அவருடைய காரோட்டி சண்முகம் கைகளைக் கட்டியபடி நிற்கிறான். முத்தையாவின் அருகே பொறியர் தாமோதரன் ஏதோ பத்திரிகை ஒன்றைப் பேருக்குப் புரட்டிக் கொண்டே வீட்டு வாசலைக் கண்ணோட்டம் விட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.

வாசலில் அழைப்பு மணியின் ஒலி கேட்கிறது.

பணியாள் ஒருவன் 'வக்கீல் மணிவாசகன்' என்று வருகை அறிவிக்கிறான்.

'வரச்சொல்' என்கிறார் தாமோதரன்.

மணிவாசகனின் சட்ட ஞானம், நடந்த விபத்தை நடந்த சம்பவக் கோவைகளை அடுக்கி-உலைத்து-திட்டவட்டமாக அசைபோட்டுக் கொண்டே வருகிறது. சாலையில் நடந்த விபத்தையும், தனக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை என்பது போல் உட்கார்ந்திருக்கும் முத்தையா ஒருபால்; கை கட்டியபடி கலவரத்துடன் நிற்கும் கார் டிரைவர் சண்முகம் மற்றொருபால்; இருவரையும் பாலமாக இணைக்க மறந்துவிட்ட பொறியர் தாமோதரன் யாவரையும் பார்த்த வண்ணம் வந்து நிற்கிறான் மணிவாசகன்.

ஒரு கணத்தில் அவனுக்கு உண்மை புலனாகின்றது.

'மணிவாசகன்! உங்களை அவசரமாக வரச்சொன்னதன் காரணம்..........' என்று முத்தையா ஆரம்பிப்பதற்குள் மணிவாசகனே முந்திக்கொண்டு பேச ஆரம்பிக்கிறான்.

''புரிகிறது முதலாளி! காரோட்டும் காலத்தில் உங்கள் கவனக் குறைவால் ஒரு விபத்து நிகழ்ந்துவிட்டது. உயிருக்குப் போராடுகிற நிலையில் அடிபட்ட நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறான். உங்கள் நல்லநேரம், விபத்து நடந்த இடத்தில் ஆள்நடமாட்டம் அதிகமில்லை. அதனால் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்த நபர் நீங்கள்தான் என்று உறுதி கூறுவதற்குச் சாட்சியங்கள் ஏதுமில்லை......''

வழக்கைப் பூர்ணமாகப் புரிந்த புன்னகை பிறக்கிறது.

''அதுமட்டுமில்லை மணிவாசகன்...... 'வண்டியை நானே ஓட்டிக் கொண்டு வந்தேன்' என்று வலியவந்து சாட்சிகூற, நன்றியுள்ள வண்டியோட்டி சண்முகம் என்னிடம் வேலை பார்க்கிறான். இல்லையா சண்முகம்?'' என்று அழுத்தமாகக் கூறுகிறார் முத்தையா.

அவர் சொற்கள் வறுக்கப்பட்ட இரும்புக் கடலையாக இருக்கின்றன.

"முதலாளீ" என்று பதறுகிறான் சண்முகம். அவன் அடிவயிறு பகீரென்று தீப்பற்றுகிறது.

"சண்முகம்............ என்னிடம் முப்பது வருடங்களாக வேலை பார்ப்பவன் நீ. உன் குடும்ப நிலையை எண்ணிப் பார்; உடனே என் கௌரவத்தையும் கொஞ்சம் நினைத்துப் பார்......... நிலைமை விபரீதமாகி ஒருவேளை நீ சிறைச்சாலைக்குப் போகவேண்டிய கட்டம் வந்தாலும், உன் குடும்பத்தைக் காப்பாற்ற நான் ஒருவன் வெளியே இருக்கிறேன். ........நானே சிறைச்சாலைக்குப் போய்விட்டால், உனக்கும் வேலைபோகும்.......... உன் குடும்பமும் பட்டினி கிடந்து சாகும்.........."

சொல்லில் நயம், காரியத்தின் அழுத்தம் தொனிக்கிறது. சொல்லும் விதத்தில் பூவின் மணம்; அதன் மணமோ போர்க்களத்தை நினைவூட்டுகிறது.

மணிவாசகன் நிலைமையின் தீவிரத்தை ஒரு நொடியில் உணர்ந்து கொள்கிறான். சன்னல் வழியே தெருவைப் பார்த்தவன் திடுக்கிட்டு, "முதலாளி ......விபத்து நடந்த இடத்தைச் சுற்றி நின்றவர்கள்.... திபுதிபுவென நாமிருக்கும் வீட்டிற்குள் வருகிறார்கள். வந்து கொண்டிருக்கிறார்கள்" என்று பரபரப்பாகக் கூறுகிறான்.

தன் குகைக்குள் நிமிர்ந்து நிற்கும் சிங்கமாக இருக்கிறார் முத்தையாவோ மிகவும் அலட்சியமாக, "வரட்டுமே, மணிவாசகன்......" என்று கூறிவிட்டு சண்முகத்தை ஏறிட்டு நோக்குகிறார்....... அவர் சிரிக்கிறார். அவரால் சிரிக்கவும் முடிகிறது. அவர் சுகத்தினால் வாழும் முதலை. ஆழத்தில் வாழும் மீன் இல்லை!

சண்முகம் என்ன கூறப் போகிறான் என்பதை அறிய மணிவாசகனுக்கு ஆவல் ஏதுமில்லை. முதலாளி முத்தையா தமக்குச் சாதகமாகக் கூற வைத்துவிடுவார். கூறப் போகிறவன் தொழிலாளி. எனவே வக்கீலான அவனுக்கு முத்தையாவைவிட, சண்முகத்தின்மீது நம்பிக்கை அதிகம் இருந்தது.

மறுகணம்.

தம் கைப்பையைத் திறந்து கத்தை கத்தையான நோட்டுக்களை எடுத்து சண்முகத்தின் முன்னால் போடுகிறார் முத்தையா.

"பழியை நான் ஏற்றுக் கொள்கிறேன் முதலாளி" என்கிறான் சண்முகம். அவன் பேசவில்லை. பணம் பேசுகிறது!

"பணத்துக்காக!" என்கிறார் தாமோதரன்.

"இல்லை...... என் முதலாளிமேல் கொண்ட பரிதாபத்திற்காக!" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறான் சண்முகம்.

"ச ண் மு க ம்?" என அதட்டுகிறான் மணிவாசகன். வக்கீலான அவனுக்கும் முதலாளி ஆயிற்றே.

"வக்கீலய்யா...... இந்தக் கட்டுகளில் எவ்வளவு பணம் இருக்கிறது? ......" எனக் கேட்கிறான்.

"பத்தாயிரம்!" முத்தையாவின் பதில்.

"உன் தியாகத்தின் விலை பத்தாயிரம்"—மணிவாசகனின் பாராட்டு.

"இல்லை! என் முதலாளியின் மானத்தின் விலை பத்தாயிரம். கௌரவத்தின் விலை பத்தாயிரம். அவருடைய கோழைத்தனத்தின் விலை பத்தாயிரம்" என்று சண்முகம் ஊசிக்குத்தல்களாக வீசத் தொடங்கிய நேரத்தில் வாசற்கதவு படபடவெனத் தட்டப்படுகிறது........

கலவரமும் கூக்குரலும் எழுகின்றன.

கிண்டி - சைதாப்பேட்டை நெடுஞ்சாலையை ஒட்டிக் கடை வைத்துள்ள டீக்கடைக்காரர்.. பெட்ரோல் பங்க் ஊழியர்.... பெட்டிக் கடைக்காரர்...... முறைவாசல் தெளிக்கப்போகும் வேலைக்காரப் பெண்மணி.... ஆப்பக்கடைக்காரி......தெருக் கூட்டுகிறவர்கள்...... என்னும் உழைப்பாளி வர்க்கமே ஒருசேரத் திரண்டு வந்து தாமோதரனின் பங்களா வாசலில் கூடிவிட்டது...... கூச்சலிட்டு நிற்கிறது.

தாமோதரன் வாசல்முன் வந்து நிற்கிறார்.

"என் ன வே ண் டு ம்?" என்று கேட்கிறார் தாமோதரன்.

"சாலையின் இறக்கத்தில் சற்று முன் கார் விபத்து நடந்து விட்டது"



'உயிராபத்து ஒன்றுமில்லையே?

"தெரியாது........ ஒரு பெண்மீது கார் மோதியதைப் பார்த்தோம்...... காரிலிருந்து யாரோ இறங்கி உங்கள் வீட்டுக்குள் ஓடியதாகச் சொன்னார்கள். குற்றவாளிக்கு உங்கள் வீட்டில் நீங்கள் இடங் கொடுக்கக் கூடாது......" என்று குமுறுகிறது கூட்டம்! கொந்தளிக்கின்றன குரல்கள்.

"இங்கேதான் ஓடிவந்தான் என்பது என்ன நிச்சயம்?"

"தோட்டம் பங்களாவுமாக இந்தச் சாலையில் உள்ள ஒரே இடம்-இதுவும் விபத்து நடந்த இடத்திற்கு நேர் எதிரே உள்ள ஒரே வீடு-உங்களுடையது மட்டுந்தான். காரை ஓட்டிய கொலைகாரன் இங்கேதான் வந்திருக்கிறான். அனுமதி கொடுங்கள்...... நாங்களே தேடி ஆளைப் பிடித்துத் தருகிறோம்!"

தாமோதரன் கூறுகிற சமாதானத்தைக் கேட்கவோ-கேட்டு அமைதியடையவோ-வந்திருக்கிற கூட்டம் தயாராக இல்லை.



'' காரின் எண் கொண்டு அந்தக் கார் யாருடையது என்பதைக் கண்டுபிடிக்க எங்களால் முடியும். அந்த அளவுக்குப் போய்விடாமல் கௌரவமாக நீங்களே ஆளை வெளியே அனுப்பிவிடுங்கள் '' என்று மிரட்டுகிருன் ஒரு முரட்டு மனிதன்.

தாமோதரனின் பாடு தர்ம சங்கடமாகி விடுகிறது.

பொங்கிவரும் ஆவேச வெள்ளமென மக்கள் கூட்டம் அலை மோதிக் கொண்டிருக்கிறது. யாரைத் தடுத்து யார் யாரைக் காப்பாற்ற நினைக்கிருர் தாமோதரன்? முதலாளி முத்தையா இப்படித் தம் வீட்டுக்குள்ளேயே வந்து உட்கார்ந்து தம்மைச் சங்கடத்துள் ஆழ்த்துவார் என்பதை தாமோதரன் எதிர்பார்க்கவில்லை.

அவர்-செயலற்றுநின்ற ஓரிரு கணங்களுக்குள் ஒரு அதிசயம் நிகழ்கின்றது.

குனிந்த தலை நிமிராமல் குற்றம் புரிந்த நெஞ்சினனைப் போல் சண்முகம் வாசலுக்கு வந்து நிற்கிருன்.

'' இவன் தான் வண்டியிலிருந்து இறங்கித் தப்பி ஓடியவன் !'' என்று குற்றவாளியை இனங்கண்டுவிட்ட பரபரப்பில் கையை ஓங்குகிருன் கூட்டத்திலிருந்து . முன்கோபக்காரன்.

கூட்டம் 'ஆமாம் சாமி' போடுகிறது.

'' தப்பி ஓட நினைக்கவில்லை நான்......தவறு நிகழ்ந்துவிட்டது என்பதை என் முதலாளி ஐயாவுக்குப் போன் வழியே தகவல் அனுப்ப எண்ணியே இந்த பங்களாவுக்குள் நுழைந்தேன் ! '' என்கிருன் சண்முகம்.

தாமோதரனின் பார்வை சண்முகத்தை எச்சரிக்கிறது. வீட்டுக்குள் எவருமே வரவில்லை என்பதாக அவர் வாதாடிக் கொண்டிருக்கும் நேரத்தில்

குற்றவாளியே வலிய வந்து வெளியே நிற்பதாவது...... நின்றதோடு குற்றப்பட்டியலைப் பிரகடனம் செய்கிறதாவது.

அவருடைய தவிப்பை உணர்ந்துகொண்ட சண்முகம், '' மன்னிக்க வேண்டும் என்ஜினீயர் சார்...... உங்களுக்குக் கூடத் தெரியாமல் நான் உள்ளே வந்தேன்...... உங்கள் வீட்டு டெலிபோனைப் பயன்படுத்தினேன்......'' என்று கூறிச் சமாளிக்கிறான்.

'' என்ன கூச்சல் அங்கே..?'' என்று கேட்டபடியே வெளியே வருகிறார் முத்தையா........ கூட்டத்தில் எவரேனும் தன்னை இனங்கண்டு கொள்வார்களோ என்று உள்ளூர அவருக்கு நடுக்கந்தான்...... இருந்தாலும் பழியைச் சுமக்க ஒருவன் பக்கத்திலேயே நிற்கிறானே....! அந்த அசட்டுத் துணிச்சலில் அவரும் சற்றே தெம்பாக நிற்க முயற்சி செய்கிறார்....

'' வாருங்கள் முதலாளி.... உங்கள் வண்டியோட்டி சண்முகம் உங்கள் காரை யாரோ ஒரு அப்பாவிப் பெண்ணின்மீது ஏற்றி........'' என்று தாமோதரன் கூறுவதற்குள் மிகுந்த பரபரப்புக் காட்டிப் பேசுகிறார் முத்தையா...... '' அடடா...... அந்தப் பெண்ணுக்கு என்ன ஆயிற்று...... பாவம் யார் பெற்ற பிள்ளையோ ......ஆசுபத்திரிக்கு எடுத்துப் போனார்களா...... தாமோதரன்! உடனடியாக ஒரு டாக்சி கூப்பிடுங்கள்........ அல்லது உங்கள் வண்டியை எடுங்கள். ........அடிபட்ட நபரைப் பார்த்து ஆறுதல் சொல்ல வேண்டும்.......... அவள் குடும்பத்துக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும்'' என்று முத்தையா இரக்கத்துடன் பேசப்பேச சண்முகத்தின் மனம் ' துரோகி' என்று எரிமலையாய்க் குமுறுகின்றது..........

இந்த இடைவெளிக்குள் விபத்து நடந்த இடத்திற்கு

வந்து நின்ற போலீஸ் ஜீப் ஒன்றும் காவலர் படை ஒன்றும் தாமோதரனின் பங்களாவை நோக்கித் திரும்புகிறது.

பணம் பிழைப்பு நடத்தியது·

அறம் செத்துக் கொண்டிருக்கிறது:

'' நான்தான் குற்றவாளி!'' என்று வாக்குமூலம் கொடுத்து போலீஸ் வண்டியில் ஏறி அமர்கிறான் சண்முகம். காவல் நிலையம், நீதிமன்றம், வாதம், வழக்கு என்றெல்லாம் சங்கிலித் தொடராக வரப்போகும் சங்கடங்களிலிருந்து விடுபட்ட நிம்மதியுடன் பெருமூச்சு விடுகிறார் முத்தையா.

போலீஸ்-இன்ஸ்பெக்டர் தாமோதரத்திடம், '' என்ஜினீயர் சார்! வழக்குப் பதிவான பிறகு நீங்கள் சாட்சி கூற கோர்ட்டுக்கு வரவேண்டியதிருக்கும்......நினைவு வைத்துக் கொள்ளுங்கள் .. .. .. .. என்று பணிவோடு கூறுகிறார்.

'' சாட்சி கூறத்தானே.... அது என் கடமை. கட்டாயம் வருகிறேன்'' என்கிறார் தாமோதரன்.

சத்தியம் யார் பின்னால் போகிறது, சாட்சிகள் யார் பின்னால் போகிறார்கள்....?

போலீஸ் வண்டி தாமோதரனின் பங்களாவை விட்டுப் புறப்பட்டுப் போகிறது.

குற்றவாளி போய்ச் சேர்ந்தான். பெரிய நிம்மதி.

'' சாட்சி என்று வந்தால் நானும் நீதிமன்றத்திற்கு வர வேண்டுமோ?'' என்று மணிவாசகனிடம் கேட்கிறான் முத்தையா.

'' ஆமாம்''

'' என்னைப் பார்த்து நீங்கள் அதிகாலை நேரத்தில் என்ஜினீயர் வீட்டுக்கு ஏன் வந்தீர்கள் ......... எப்படி வந்தீர்கள்' என்று தன்னைக் குறுக்கு விசாரணை செய்தால்?'' — எதிர்க் கேள்வி போடுகிறார் முதலாளி முத்தையா.

''நீங்கள் ஆலை முதலாளி.... பல கம்பெனிகளின் முதலாளி.... மிஸ்டர் தாமோதரன் உங்கள் நிறுவனங்களின் பிரதம என்ஜினீயர் .. .. தொழிற்சாலையின் வளர்ச்சி சம்பந்தமாகவோ.... தொழிலாளர்களுக்குக் குடியிருப்புக் கட்டித்தரும் விஷயமாகவோ நீங்கள் இருவரும் சந்தித்துப் போசலாமே.. .. !'' என்கிறது மணிவாசகன் மூளை.

சட்டம், சட்டாம்பிள்ளைத் தனந்தானே செய்யும்!

''அதாவது.... அதிகாலை நேரத்தில் கூட முதலாளிக்குத் தம் தொழிலாளர் நலன் பற்றிய சிந்தனைதான்....!'' என்று இடைமறித்துக் கூறுகிறார் தாமோதரன்.

''அதிகாலை என்ன, அல்லும் பகலும் எனக்குத் தொழிலாளர் நலன் பற்றிய அக்கறைதான்.. ..'' என்று கூறி அட்டகாசமாகச் சிரிக்கிறார் முத்தையா.

மூவருமாக மீண்டும் அறைக்குள் வருகிறார்கள்.

டீப்பாயின் மேல் முதலாளி வைத்துப்போன பணம் பத்தாயிரம் அப்படியே அனாதையாக இருக்கிறது. சண்முகம் அதைத் தொடவோ, பத்திரப்படுத்தவோ தன் குடும்பத்தாரிடம் சேர்க்க முயற்சி செய்யவோ எண்ணவில்லை என்பது உண்மையாகி விட்டது......!

''முதலாளி இந்தப் பணம்?'' என்று கேட்கிறான் மணிவாசகன்.

''நன்றிக்கு விலை இல்லை.... பணம் இப்போதைக்கு என்னிடமே இருக்கட்டும்'' என்று தம் பைக்குள் பத்திரப்படுத்திக் கொள்கிறார் முத்தையா.

## 3. நட்புக்கு உறவு இல்லை

மருத்துவ மனையிலிருந்து மனச்சோர்வுடன் வீடுவந்து சேருகிறாள் டாக்டர் நர்மதா. அதிகாலை நேரத்தில் தனக்கு வந்த அவசர அழைப்பைத் தொடர்ந்து மருத்துவமனைக்குச் சென்றவள் வீடு திரும்பும் போது மணி பதினொன்று. கலகலப்பாக விடிய வேண்டிய காலைப்பொழுது கலவரத்துடன் தொடங்கிவிட்டதே என்ற வேதனை....'டாக்டர்' என்னும் தொழில் துறையில் அவளுக்கு இரவும் பகலும் ஒன்றுதான். இன்னலும் இன்பமும் ஒரே மாதிரிதான். அது இரவும் வரும்; பகலும் வரும். ஆனால் ஒரு பெண் என்ற முறையில்-அதுவும் தாய்மை யடைந்திருக்கும் இந்த நேரத்தில்—அவளால் எந்தச் சிறு வேதனையையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அலுத்துக் களைத்து வந்து சேர்ந்திருக்கும் நர்மதாவைப் பார்த்ததும் 'ஐயோ பாவம்' என்ற பரிவிரக்கம் ராதையின் இதயத்தில் பிறக்கிறது...... தாயாக நின்று தாய்மையான டாக்டரைப் பார்க்கிறாள்.

* முட்டாளின் இருதயம் அவன் வாயில் இருக்கிறது. ஆனால், புத்திசாலியின் வாயோ அவன் இருதயத்துக்குள் இருக்கிறது.

—பெஞ்சமின் பிராங்ளின்

“ஒரு சிலரின் கவனக் குறைவால் எத்தனை பேர்களுக்கு வேலையும் வேதனையும் வந்து சேருகிறது....!” என்று கூறியபடியே சோபாவில் அமருகிறாள் நர்மதா.

“உன் உடம்பு இருக்கிற நிலைக்கு நீ அப்படிப் படபடவென ஓடுவானேன்....உங்கள் மருத்துவ மனையில் வேறு டாக்டரே கிடையாதா என்ன?” என்று உரிமையுடன் கண்டிக்கிறாள் ராதை. காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடாமல் நர்மதா பொறுப்போடு போராடி உழைக்க வேண்டியிருக்கிறதே என்னும் கோபம்.

“அதனால் என்ன ராதா..?” டாக்டர் என்பது பட்டமன்று. அது பணியின் அடையாளம்.” இவ்வாறு சமாதானம் கூறிவிட்டு உடைமாற்றி வர அறையினுள் போகிறாள் நர்மதா.

“சீக்கிரம் சாப்பிட வா அக்கா... தாம்போன இடத்திலேயே அத்தான் சாப்பிட்டு விட்டாராம். நீயும் நானுந்தான் சாப்பிடப்போகிறோம்...” என்று ராதை கூறியதும்தான் மணிவாசகன் வீட்டில் இல்லை என்பதை நர்மதா உணருகிறாள்.

“அத்தான் எங்கே?”

“முத்தையா மாமா மதுரையிலிருந்து சென்னைக்கு வந்திருக்கிறாராம். அவரிடமிருந்து அத்தானுக்குப் போன் வழியே அழைப்பு வந்ததும்—அவசரமாகப் புறப்பட்டு ஓடிப் போயிருக்கிறார் அத்தான்...”

“ஓகோ... பாவம் ... நீயாவது சாப்பிட்டிருக்கலாம்... எனக்காகக் காத்திருக்க வேண்டாமே. இதோ ஒரு நொடியில் வந்து விட்டேன்..” என்று அறைக்குள்ளிருந்தபடியே குரல்கொடுக்கிறாள் நர்மதா.

வாசலில் கார் ஒன்று வந்து நிற்கிறது.

வருபவள் ராதையின் தோழி செண்பகம், உடன் வருபவர் மணிவாசகனின் தோழன் ரோமியோ....

“அடேடே... வாருங்கள் வாருங்கள்— தம்பதி சமேதராக ஏது இப்படி அபூர்வமாக...!” என்று அதிசயித்து வரவேற்கிறாள் ராதை.

மணிவாசகன் வந்துவிட்டானா?—ரோமியோவின் முதல் கேள்வியே இதுதான்.

ராதைக்குப் பொய்க் கோபம். “எங்களைப் பார்த்தால் மனிதர்களாகத் தோன்றவில்லையாக்கும்... உங்கள் நண்பர் ஒருவர் தான் இந்த வீட்டில் மனிதராகப் படுகிறாராக்கும்?... என்று செல்லமாகச் சீறுகிறாள்.

“அவன் மனிதன்தானா என்பதை நேருக்கு நேராகப் பார்த்து விட்டும், கேட்டு விட்டும் போகத்தான் நான் வந்தேன்...” என்று கொஞ்சம் ஆத்திரமாகவே கூறுகிறான் ரோமியோ.

“இரண்டு வருடங்களாகியும் இன்னும் உங்கள் கோபம் தணியவில்லையே மிஸ்டர் ரோமியோ!” என்று குத்தலாகப் பேசியபடியே அறையை விட்டு வெளியே வருகிறாள் நர்மதா.

“உங்கள் திருமணம் பற்றிய என் கோபமும் முயற்சியும் என் பலனற்றுப் போய்விட்டன. அதை மறந்தே விட்டேன், அம்மணி. இப்போது எனக்கேற்பட்ட புதிய கோபத்திற்கு வேறு காரணம் இருக்கிறது...” மணிவாசகன் இன்னும் வரவில்லையா? பதில் சொல்லுங்கள்”

ரோமியோவின் படபடப்பு அடங்கியபாடில்லை. மருத்துவ மனையில் சிக்கலான ‘கேஸ்’ ஒன்றைக் கவனித்து விட்டு வந்திருப்பவள் டாக்டர் நர்மதா. அவள் அமைதியாக உணவுக்காக உட்கார நினைத்த நேரத்தில், ஆவேசப் புயலைக் கிளப்ப வந்திருக்கிறானே இந்த ரோமியோ...

நிலைமையில் தீவிரத்தை மாற்ற எண்ணிய ராதை, “உன் அப்பா மதுரையிலிருந்து வந்திருக்கிறாராமே செண்பகம்?” என்று தன் தோழியிடம் கேட்கிறாள்.

“அப்பா வந்திருக்கிறார். அவரோடு ஆபத்தையும் சேர்த்துக் கொண்டு வந்திருக்கிறார்... இவருக்கு அதனால் தான் கோபம்!..” என்று பரிதாபமாகக் கூறுகிறாள் செண்பகம். பதட்டத்துடன் ரோமியோவைப் பார்க்கிறாள்.

“உன் அப்பா வந்திருப்பதற்கும் மிஸ்டர் ரோமியோ என் அத்தானிடம் கோபம் கொள்ள வேண்டுவதற்கும் சம்பந்தம் என்ன?” என்கிறாள் ராதை.

ரோமியோ அதிர்ச்சியுடன் தொடங்குகிறான்.

“மிஸ் ராதா! என் மாமாவின் கம்பெனியின் சட்ட ஆலோசகர், மணிவாசகன் அந்தக் கம்பெனியின் சட்டதிட்டங்களைப் பற்றி ஆராயவும், ‘உண்மை’ ஆலோசனை கூறவும் தான் அருகதை பெற்றவன். ‘அதை விட்டு விட்டுத் தனிப்பட்ட முறையில் தன் முதலாளியின் துரோகத்திற்குத் துணைபோகக் கூடியவன் என் நண்பனில்லை” என்று சீறுகிறான் ரோமியோ.



எந்நாடாயினும் இடரிலும் இழிவிலும் படாமல் இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில் தொடராய் அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும் நன்று இது; தீது இது; மருள் இது என்பதனை ஆராய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும் ஆற்றல் மிக்க அறிவுப்படை எழுந்தபடி இருந்திட வேண்டும்.

“துரோகமா?” என்று வியப்பும் அதிர்ச்சியும் மூன்று பெண்களின் இதயத்திலும் ஒரு சேர எழுகின்றன.

“ஆமாம். துரோகந்தான். இன்று காலையில் என் மாமனார் ஓட்டி வந்த கார்—சைதாப்பேட்டை அருகே—ஒரு பெண்ணின் மீது மோதிவிட்டது!”

“உங்கள் மாமனார் காரை ஓட்டி வந்தாரா?”

“ஆமாம்.. செண்பகா மில்லின் முதலாளி... சென்னையில் பல நிறுவனங்களின் முதலாளியுமான திருவாளர் முத்தையா ஓட்டி வந்த கார்.,”

“எந்த இடத்தில்?”

“கிண்டி—சைதாப்பேட்டை நெடுஞ்சாலையில்”

டாக்டர் நர்மதாவின் நினைவில் பளீரென ஒரு மின்னல் கீற்று.

“அடிபட்டவள் பெயர் அஞ்சலை. அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தாள்... அவள் நம் கம்பெனியைச் சார்ந்த ஒரு தொழிலாளியின் மனைவி என்ற விவரம் அறிந்து எங்கள் மருத்துவ மனைக்கு அனுப்பிவைக்கப் பட்டாள்...” என்று படபடப்பாகக் கூறுகிறாள் நர்மதா.

“சரி.. இந்த விபத்தில்

# சிந்தனை

சிந்தனை செய்யும் தனித்திறன் காரணமாகவே மனிதன் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். சிந்தனையால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. மனிதனாகப் பிறந்தவன் கட்டாயமாகச் சிந்திக்க வேண்டும். சிந்திக்கச் சிந்திக்கத்தான் மனிதனுடைய எண்ணங்கள் உரிய உருப்பெற்றுச் சிறப்படையும். சிந்திப்பது மனிதனுடைய தனி உரிமை! சிந்திக்கத் தெரிந்தவனே மனிதன்!

—ஐன்ஸ்டைன்

முத்தையா மாமாவின் துரோகம் என்ன? அதற்கு என் அத்தான் துணை நின்ற விவரம் என்ன?'' என்று அவசரப்படுத்துகிறாள் ராதை.

''குற்றம் செய்தவர் முத்தையா''

''உங்கள் மாமன்'' என்று நிறுத்தினாள் ராதை.

''குற்றவாளியை உறவு சொல்லி அழைப்பது தவறு. அவர் செய்தது குற்றம். அந்தப் பழியைச் சுமந்தவன் அவரது கார் டிரைவர்—காசுக்காகப் பழியை அவனாக ஏற்றுக்கொண்டாலும்; முதலாளிமேல்கொண்ட கருணைக்காக ஏற்றுக் கொண்டாலும்—நாளை முதல் கம்பி எண்ணப் போகிறவன் அந்த அப்பாவித் தொழிலாளி.. மூன்று ஆண்டுகள் வரை அவனுக்குத் தண்டனை கிடைக்கலாம்... பத்தாயிரம் ரூபாய்ப் பணத்தைக் காட்டி தியாகத்தின் பேரால் பேரம் நடந்திருக்கிறது!''

''இந்த பேரத்திற்கு அத்தான் சாட்சியா? உடந்தையா?''

''சாட்சியல்ல... உன் அத்தானின் சட்ட ஞானம்தான் இந்த அரிய யோசனையை சொல்லிக் கொடுத்திருக்கிறது..'' என்று சீறுகிறான் ரோமியோ.

நர்மதா தலை குனிந்தபடி நிற்கிறாள். உயிருக்குப் போராடிய நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டிருக்கும், பிள்ளைத்தாச்சிப் பெண்ணின் பரிதாப நிலையைவிட, செய்யாத குற்றத்திற்காகச் சிறைவாசம் அனுபவிக்கப் போகும் டிரைவர் சண்முகத்தின் தியாகம் அவள் இதயத்தைப் பிழிந்தெடுக்கிறது.

என்ன செய்வது?. 'டாக்டர்' என்ற முறையில் அவள் நோயாளியின் உடலும் மனமும் தேறுவதற்கான சிகிச்சைகளைச் செய்யலாம். முயற்சிகளும் முடிவும் அவள் ஒருத்தியின் திட மனத்துள் அடக்கம்... ஆனால் சட்ட ஆலோசகனின் நிலை அப்படி யில்லையே.. ஆலை முதலாளிக்குச் சாதகமாகவும் நடந்து கொள்ள வேண்டிய சங்கடமான நிலைமை உருவாகியிட்டதே!

டாக்டர் நர்மதாவின் சிந்தனையைக் கலைத்தான் ரோமியோ.

''நியாயத்தை நிலை நாட்ட வேண்டியவன் சட்ட நிபுணன். அவனே இப்படி ஒரு துரோகத்திற்கு உடந்தையாக இருக்கலாமா? என்பதைக் கேட்டு விட்டுப் போகத்தான் வந்தேன். மணிவாசகன் மனிதப் பிறவியே அல்ல... அறத்தை மறந்து விட்ட அறிவிலி... காசுக்காக அவன் எதையும் இழப்பான்.. எந்த எல்லைக்கும் போவான்...'' என்று ஆத்திரத்தில் பொரிந்து தள்ளுகிறான் ரோமியோ.

அறிவிலி!

அதன்பின் மனிதப்பிறவி அல்லன்!!

காசுக்காக எதையும் செய்வான்!!!

நர்மதா — மணிவாசகனின் மனைவி நர்மதா—ஒவ்வொரு சொல்லையும் வெடி குண்டை விழுங்கியவள் போன்று விழுங்கியவள்—ரோமியோவை எரித்து விடுவது போல் ஏறிட்டு நோக்குகிறாள்.

''மிஸ்டர் ரோமியோ! என் கணவர் ஒரு வக்கீல். சட்ட நிபுணர். தன் கட்சிக்காரரின் வெற்றி ஒன்றுதான் அவருக்குக் குறிக்கோள்''

''ஆனால் நியாயம்?'' என்று குறுக்கிட்டான் ரோமியோ.

''நியாயத்திற்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று சிந்திக்கவோ, செயலாற்றவோ நீதிபதியாக நீங்கள் அவரை நியமனம் செய்யவில்லை.

வக்கீலுக்குத் தம் வழக்கு வெற்றி பெற வேண்டும். வக்கீலுக்கு இந்த ஒரு குறிக்கோள்தான் தேவை.

''டாக்டரம்மாபரவாயில்லையே அவனுக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு வரிந்து கட்டிக் கொண்டு வாதாட நீங்கள் வந்து விட்டீர்கள் அம்மணி. ஆனாலும் ஒன்று சொல்லுவேன். நண்பனாக எண்ணித்தான் உறவு கொண்டாட வந்தேன். உரிமை கேட்க வந்தேன். அவன் செய்தது தவறு—செய்வது அக்கிரமம். இதனை நீங்களே ஒருநாள் சொல்லத்தான் போகிறீர்கள்!'' என்கிறான் ரோமியோ.

''ஒரு நாளும் அப்படிச் சொல்ல மாட்டேன்'' எந்தக் கட்டத்திலும் என் கணவரை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்''

''உங்கள் அன்பு, உங்கள் அறிவுக்குத் திரையிடுகிறது''

''பொய்''

''காலம்தான் எது பொய்—எது மெய் என்று பதிலைச் சொல்ல வேண்டும்!'' என்று கூறிவிட்டுக் கலகலவெனச் சிரிக்கிறான் ரோமியோ..

அவன் சிரிப்புக்கு எதிரொலி போல் அட்டகாசமாகச் சிரித்தவாறு வீட்டினுள் நுழைகிறான் மணிவாசகன்..

''ஹலோ ரோமியோ.. வாம்மா செண்பகம்..!'' என்று தம் பதிகளுக்கு வரவேற்புத் தந்தவனுக்கு எதிர் பார்த்த இன்முகம் கிடைக்கவில்லை.. நண்பனின் நகைமுகம் தெரியவில்லை. ரோமியோவின் போக்குப் பற்றித் தெரிந்தவனாதலால் அதைப் பொருட்படுத்தாமல் நர்மதாவிடம், ''என்ன நர்மதா... அஞ்சலையை நம் ஆசுபத்திரிக்குக் கொண்டு வந்தார்களாமே.. அவள் எப்படி யிருக்கிறாள்... நினைவு வந்ததும் என்ன வாக்குமூலம் கொடுத்தாள்... ஏதாவது உனக்குத் தெரியுமா?'' எனக் கேட்கிறான் மணிவாசகன்.

''அஞ்சலை உயிர் பிழைத்தாளா என்பது பற்றி உனக்கு அக்கறை யில்லை... அவள் கொடுக்கிற வாக்கு மூலத்தினால் உன் முதலாளியின் உயிர் ஊசலாடப் போகிறதே என்ற அக்கறைதான் உனக்கு இருக்கிறது!'' என்று சீறுகிறான் ரோமியோ.

''என் முதலாளியின் உயிர் ஏன் ஊசலாட வேண்டும்? அவள்மேல் காரை மோதி விபத்துக்குள்ளாக்கியவன் டிரைவர் சண்முகந்தானே?''

''இன்றைய உலகத்திற்குப் பணம்தான் தெய்வம். நியாயம் நீதி இங்கு இல்லவே இல்லை''

ரோமியோ கத்தினான்.

''நியாயம் எது, அநியாயம் எது என்பது நீதிபதியின் வேலை!!!

"ஒவ்வொரு அநியாயத்திற்கும் மிருகபலம் சட்ட பலம் பக்க பலமாக இருக்கிறது மணிவாசகன். சண்முகம் காரை ஓட்டினான். அஞ்சலையைக் குற்றுயிராக்கினான் என்பதை என்னையும் நம்பச் சொல்கிறாய்?"

"நீ என்ன.. இந்த ஊரும் உலகமுமே இதை நம்பித்தான் ஆகவேண்டும்... நீதிமன்றமும் நியாயத் தீர்ப்பும் இதனை நம்பியாக வேண்டும். நர்மதா... அஞ்சலையின் உயிருக்கு ஆபத்து ஒன்றும் வந்துவிடாதே?" என்று வினவுகிறான் மணிவாசகன்.

"காரிலே மோதித் துடித்துக் கொண்டிருப்பது அஞ்சலையா அல்லது நீதி நியாயத்தின்மேல் நாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையா? எனக்கொன்றும் புரியவில்லையே...!" என்று கேட்கிறாள் ராதை.

ராதையின் கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. விடை கிடைக்கவும் முடியாது.

"அஞ்சலை பிழைக்கா விட்டால்?" என்று கேட்டு நிறுத்துகிறாள் டாக்டர் நர்மதா.

"அவள் மேல் காரை ஏற்றிக் கொன்றதாக அவள் கணவன் தூக்கு மேடைக்குப் போவான்!" என்கிறான் மணிவாசகன்.

"அவள் கணவனா?" என்று எல்லாரும் திகைக்கும் நேரம்.

"ஆமாம்.. காரை ஓட்டி வந்தவன் டிரைவர் சண்முகம். கார் விபத்தில் அடிபட்டுக் கிடப்பவள் அவன் மனைவி அஞ்சலை!" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறான் மணிவாசகன்.

(வளரும்)





## தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி லிட்.,

**32, லஸ் சர்ச் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4.**

தொலைபேசி { 76103, 76104, 76105

தபால் பெட்டி எண். 609
தந்தி : நிலவளம்

| | | |
|---|---|---|
| ஒரு வருஷ பிக்சட் டிபாசிட்டுகளுக்கு | ... | 7% வட்டி |
| 15, 18, 21, 24 மாத டிபாசிட்டுகளுக்கு | ... | 7½% வட்டி. |

ரூ. 1.000 அல்லது அதற்கு மேற்பட்ட டிபாசிட்டுகள் பெறப்படும். நீங்கள் விரும்பினால் மாதந்தோறும் வட்டி பெற்றுக் கொள்ளலாம்.

இட்டு வைக்கும் தொகைகளுக்கு பெறப்படும் வட்டி ரூ. 3,000 வரைக்கும் வருமான வரி விலக்கு உண்டு.

மற்ற விபரங்களுக்கு, மாவட்ட அளவிலுள்ள கிளை அலுவலகங்களிலாவது, பிரதம நிலவள வங்கிகளிலாவது தொடர்பு கொள்ளவும்.

மு. சண்முகம், எம். எல். ஏ.,
பெருந்தலைவர்.

பி. எஸ். முத்துச்செல்வன், எம். எல். ஏ.
துணைத்தலைவர்.




**நோ**ய்கள் பலவிதம் !

மருத்துவம் முன்னேறிக் கொண்டுவரும் இக்காலத்தில், புதிய புதிய நோய்கள் வந்த வண்ணமிருக்கின்றன. சிலவகை நோய்கள் மருத்துவர்களையே திகைக்க வைக்கின்றன !

வயிறு, குடல், கல்லீரல், கணையம் முதலியவற்றைப் பாதிக்கும் நோய்கள் இன்று ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளன. இந்தியாவில் ஏறத்தாழ 50 சதவீதத்தினர் இரைப்பைக் கோளாறுகளால் துன்புறுகின்றனர் என மருத்துவ வல்லுநர்கள் கருதுகின்றனர். இந்நோய்கள் பரந்து காணப்படுவதற்குக் காரணம், நாட்டின் சமூகப் பொருளாதாரச் சுற்றுப்புறச் சூழ்நிலைகளே எனக் கருதப்படுகிறது.

அஜீரண நோய்கள் இளம் வயதிலேயே — ஒருவர் வாழ்க்கையில் இனவிருத்திப் பருவத்தில் இருக்கும்போதே — பீடித்துவிடுகிறது. நல்ல வளர்ச்சியும், உரமும் பெற வேண்டிய சிறு குழந்தைகளை இந்நோய்கள் பற்றுகின்றன. கிராமங்களிலும், சேரிப் பகுதிகளிலும் வசிக்கும் நலிந்த மக்கள் எளிதில் இந்நோய்களுக்கு ஆளாகின்றனர்.

ஜீரண சம்பந்தமான நோய்களில் பெரும்பான்மையானவை நாட்பட்ட நோய்களாகிவிடும். சில திரும்பத் திரும்ப பீடித்துவிடும் தன்மை உடையவை. இவற்றால் நோயாளியின் உடல் பெருமளவில் சக்தி இழந்துவிடுகிறது. இந்நோய்களால் மரணம் அதிகம் நிகழ்வதில்லை. ஆனால் நோயாளி நீண்ட காலத் துன்பத்துக்கு உள்ளாகிறார். அமெரிக்காவில் வேலை நாட்கள் நட்டத்திற்கான முக்கிய காரணங்களில் இரண்டாவதாக இருப்பது ஜீரண சம்பந்தமான நோய்களே. இந்தியாவில் அநேகமாக இதுவே முதல் காரணமாக இருக்கலாம். நாட்பட்ட நோயினால் விளையும் இயலாமை, உற்பத்தித் திறனைக் குறைத்துவிடுகிறது. ஜீரணக் கோளாறு நோய்களுடன் சத்துணவு இல்லாமையும் சேர்ந்து நமது பொருளாதார முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

நமது ஜீரண முறையை எதிர்த்து அறைகூவல் விடும் எதிரிகள் நிறைய உண்டு. ஒன்று தொற்று நோய்கள்; இரண்டாவது ஊட்டமில்லாத உணவு. இவை தவிர வாசனைப் பொருட்கள், மதுபானம், மருந்துப் பொருட்களை அடிக்கடி உட்கொள்ளும் கெட்ட பழக்கம், உணர்ச்சி வசப்படும் மனநிலை ஆகியவையும் நமக்கு விரோதிகள்தான். சண்டையில் ஜீரண உறுப்புக்கள் தோல்வி அடையும்போது வயிற்றுப் போக்கு, சீதபேதி, குடல்நோய், வயிற்றுப்புண், கல்லீரல் அழற்சி, கல்லீரலில் சீழ்கட்டுதல், கல்லீரல் மஞ்சள் நோய், கணைய அழற்சி, குடலில் நோய் அறிகுறியான எரிச்சல், உட்கிரகிப்பில் கோளாறுகள் முதலியன நம்மைத் தேடி வந்து விடும்!

குடல்நோய் : கோடை காலத்தில் ஏராளமான மக்கள் கடுமையான குடல்நோய்த் துன்பம் தாங்காது மருத்துவமனைகளுக்குப் படையெடுக்கின்றனர். இந்நோய்க்குக் காரணம், அதிக வெப்பநிலையில் உணவுப் பொருட்கள் சீக்கிரம் கெட்டுப்போய், இவற்றில் தொற்றுநோய்க் கிருமிகள் ஏராளமாக விரைந்து வளர்ந்துவிடுவதாகும். இப்படிப்பட்ட உணவை உட்கொள்ளும் போது குடல்நோய்கள் உண்டாகின்றன.

காலரா : குடல் நோய்களில் மிகவும் கடுமையானது. இது இன்னமும் இந்தியாவை விட்டுச் செல்லவில்லை. நம் நாட்டில் முக்கியமாக, கிராமப் பகுதிகளில் ஒட்டுண்ணி குடல் நோய்கள் பரவலாகக் காணப்படுகின்றன. வட இந்தியாவின் மலை மாவட்டம் ஒன்றில் இது சம்பந்தமான விவரத் தொகுப்பு ஒன்றை நடத்தினர். மக்களில் 66 சதவீதம் பேர் ஒட்டுண்ணி குடல் நோயால் தொல்லைப்படுவதாகத் தெரிய வந்தது. சுமார் 31 சதவீதம் மக்களிடையே தொற்றுநோய்களும், ஒட்டுண்ணி நோய்களும் பரவலாகக் காணப்பட்டன. 25 சதவீதம் மக்கள் அமீபா நோயாலும், 20 சதவீதம் பேர் கொக்கிப் புழு நோயாலும், 33 சதவீதத்தினர் நாக்குப்பூச்சி நோயாலும் பீடிக்கப்பட்டிருந்தனர்.

ஒட்டுண்ணி நோய்களால் சுகாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் உறுதியாகிவிட்டன. ஒட்டுண்ணி தொற்றுநோய்கள் கலந்து படையெடுத்துவிட்டால் உணவு ஏற்பு வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. கொக்கிப்புழு குடல்நோயால் விளையும் ரத்தச்சோகை நாட்பட்டு தொல்லை தரும் நோயாகும். நமது கிராம மக்களில் பெரும்பாலோர் இம்மாதிரி ஏற்படும் ரத்தச்சோகையால் வலுவிழந்து துன்புறுகின்றனர். அதுபோலவே நாக்குப்பூச்சியும், நாட்பட்ட நோய்க்கு முக்கிய காரணமாகும். இந்த நோய்களால் ஜீரண உறுப்புக்கள் உணவைச் சரிவர உட்கிரகிப்பதில்லை. உடல் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. குடல் அமீபா நோய் நீண்ட காலத்திற்கு உடம்பில் இயலாமையை உருவாக்கிவிடுகிறது. ஏனெனில், குடல் நாட்பட நோய்க்கு இடமாகிவிடுவதால் உடல் மிகவும் வலுவிழந்துவிடுகிறது. இது கடைசியில் மன நோயில் கூட கொண்டுவிடக் கூடும்!

**வயிற்றுப் புண்:** வயிற்றுப்புண் உலகம் முழுவதுமே பரவலாக உள்ளஒரு நோய். இந்தியாவில் வேறுபல நோய்களைப்போல இது மிக அதிகமாகக் காணப்படுகிறது. 1000 பேர்களில் 4 முதல் 10 பேர் வரை வயிற்றுப் புண்ணுல் அவதியுறுகின்றனர். இது சம்பந்தமாகக் கள ஆய்வுகள் பல நடத்தினர். தமிழ்நாடு, ஆந்திரம், ஜம்மு—காச்மீர் மாநிலங்களில் இந்நோய் அச்சுறுத்தும் அளவு பரவியுள்ளது. இந்நோய் உண்டாவதற்கான சரியான காரணம் தெரியவில்லை. இந்த நோய் நாட்படத் தொல்லை தருகிறது. வேலைநேரம் வெகுவாக நட்டமடைவதோடு, நோயாளிகளுக்கு மரணமும் நிகழலாம். புகைப்பிடிப்பது, மதுபானம், வாசனைப் பொருட்கள் நோய் அறிகுறிகளை மேலும் தீவிரமாக்குகின்றன. சிக்கலான பயங்கரப் புண் நோய்களை விரைந்து ஏற்படுத்துகின்றன. 'டியோடெனிடிஸ்' என்பது வயிற்றுப் புண்ணின் துணைநோய் எனலாம். புண் நோய் வருவதற்கு முன் இது சில அறிகுறிகளைக் காண்பித்து கட்டியம் கூறும். குடல் புண்ணை விட இது நம் நாட்டில் அதிகம் காணப்படுகிறது. இது நோயாளியிடம் நாட்பட்ட அஜீரணக் கோளாற்றை உண்டாக்குகிறது. இதனுல் நோயாளியின் உடல் நிலையோடு, அறிவு, ஆரோக்கியமும் பாதிக்கப்படலாம்.

**கல்லீரல் அழற்சியும் மஞ்சள் நோயும்:** நச்சு நுண்மச் சார்பான கல்லீரல் அழற்சி, பலரும் சேர்ந்துவாழும் பெரிய நகரங்களில் அதிகம் காணப்படுகிறது. 1955–56ல் தில்லியில் அவை மிக பயங்கர அளவில் பரவியிருந்தன. இது மிக தீங்கு விளைவிக்கக்கூடியது. முக்கியமாக 6 முதல் 9 மாதம் வரையிலான பேறு காலத்தில் மரண அபாயம் மிக்கதாகும். நச்சு நுண்மச் சார்பான கல்லீரல் அழற்சியால் கல்லீரல் மஞ்சள் நோய் ஏற்படுமா என்பது தெரியவில்லை. அதை அறிவதற்கான தீவிர ஆராய்ச்சிகள் நடந்துவருகின்றன. கல்லீரல் மஞ்சள் நோயைக் குணமாக்குவது சாத்தியமில்லை. நோயாளியை நீண்டகாலம், ஒரு சில ஆண்டுகள் வாட்டிய பின்னர் உலகுக்கு விடைகொடுக்கச் சொல்லி கூட்டிச் சென்றுவிடும்!

குழந்தைகளைத் தாக்கும் கல்லீரல் மஞ்சள் நோய் என்று ஒரு தனிவகை இருக்கிறது. இது மிகக் கொடிய நோயாகும். கல்லீரல் மஞ்சள் நோய் பற்றியது என்ருல் குழந்தையின் கதை முடிந்தது என்றே கொள்ளலாம்! இந்நோய் பீடித்த குழந்தைகள் பெரும்பாலோர் முடிவில் இறந்தே போயிருக்கின்றனர். இந்நோய் எதனுல் எற்படுகிறது என்பதை இன்னமும் கண்டுபிடிக்கவில்லை. அதனுல் இந்நோய்க்கான சிகிச்சையும் திருப்திகரமாக இல்லை.

**பித்தப்பை அழற்சி:** நாட்பட்ட பித்தப்பை அழற்சியும் வட இந்தியாவில் மிகச் சாதாரணமாகக் காணப்படுகிறது. தென் இந்தியாவில் இருப்பது போல் ஏழு மடங்கு அதிகச் சாதாரணமாக இவை வட இந்தியாவில் பரவலாக இருக்கின்றன. இந்நோய்களை வர வைப்பதில் முக்கியப் பங்கு ஆற்றுவன, உணவுப் பொருட்கள்—முக்கியமாக 'கொழுப்புகள்'. பித்தப்பையில் கல் போன்ற கடினப் பொருள் ஏற்பட ஆரம்பித்தாலும் நாட்பட்ட அஜீரண நோய் கூட வந்துவிடும். அல்லது கடுமையான வயிற்று வலியுடன் காய்ச்சலும், மஞ்சள் காமாலையும் தோன்றலாம். நாட்பட்ட பித்தப்பை அழற்சியும், பித்தப்பை புற்றுநோயும் சேர்ந்துவிட்டால் நோயாளியின் நிலை மிகவும் மோசமாகிவிடும். பித்தப்பைப் புற்றுநோய் பீடித்தவரை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்ருல், நோயாளியின் பித்தப்பையை அறுத்து நீக்குவதே ஒரேவழி. இதற்கு நோயை ஆரம்ப நிலையிலேயே சரிவரக் கண்டுபிடித்து, அறுவைச் சிகிச்சை தர வேண்டும்.

**கணைய அழற்சி:** நாட்பட்ட கணைய அழற்சி நோயுடன், கணையக் குழாயில் கல் சேர்ந்த நிலையும் வந்துவிட்டால், தென் இந்தியாவின் பல பாகங்களிலும் கணையத்தை அழித்தே விடுகின்றனர். மரண அபாயம் மிக்க இந்நோய்களைப் பற்றிக் கேரளத்தில் விரிவான ஆராய்ச்சிகள் நடத்தினர், நோய்க்கான காரணத்தைத் குறிப்பாக அறிய முடியவில்லை. ஊட்டக் குறைவே முக்கிய காரணமாயிருக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனுல் அது இன்னும் உறுதியாகவில்லை. வயிற்று வலி, வயிற்றுப்போக்கு, தோல் நோய்கள், கடுமையான நீரழிவு நோய் உள்ள இளம் வயதினரை இந்நோய் பாதிக்கிறது.


இந்தியாவில் ஊட்டக் குறைவுக்கான முக்கிய காரணங்களில் ஒன்று சரியான உட்கிரகிப்பு இல்லாததைக் காட்டும் நோய் அறிகுறிகளின் ஒத்திசைவு. தென்னிந்தியாவில் (வேலூர்) இது ஒரு பெருவாரி நோயாகப் பதிவு பெற்றிருக்கிறது. ஆனுல், இந்தியாவின் மற்ற பாகங்களில் குறிப்பிட்ட காலங்களில் தோன்றும் தொற்றுநோயாக இது காணப்படுகிறது.

**வயிற்றுக் காசம்:** இது குடலையும், மற்ற வயிற்றுப் பாகங்களையும் பாதிக்கும். வயிற்றுக் காசம், தீவிர நுரையீரல் காசத்துடன் தொடர்புபட்டிருக்க வேண்டுமென்பது இல்லை. காச நோய் ஒழிப்புத் தீவிர திட்டங்கள் பல செயலாக்கப் பட்டபின் நுரையீரல் காச நோயால் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற வருவோர் எண்ணிக்கை இன்னமும் அதிகமாகவே இருக்கிறது. இந்நோய் பீடித்துவிட்டால் நோயாளி உடல்நலம் குன்றி நீண்டகாலம் துன்புற நேரிடும். காசநோயைக் குணமாக்க எவ்வளவு உயரிய சிகிச்சை அளித்தாலும், கடைசியில் அறுவைச் சிகிச்சை அவசியமாகிறது. இத்துடன் துணைவரும் மற்ருெரு நோயும் உண்டு. இதுதான் சீழ்ரணத்துடன்கூடிய குடல் அழற்சி. ரத்தத்துடன் சேர்ந்த வயிற்றுப் போக்கான இதைக் குணமாக்குவது மிகவும் அரிது. பத்து ஆண்டுகட்கு முன்பு இருந்ததைவிட இப்போது நாட்டில் இந்நோய் அதிகம் பரவியிருப்பதாகத் தெரிகிறது.


வாய் அறை, உணவுக்குழல் ஆகியவற்றில் புற்றுநோய் வருவது இந்தியாவில் மிக அதிகமாக இருக்கிறது. ஆயிரத்துக்குப் பதின்மூன்று பேர் வீதம் இந்நோயால் இங்கு அவதிப்படுவதாகத் தெரிகிறது. வெற்றிலை, புகையிலை போடும் பழக்கங்களால் தொண்டை, உணவுக்குழல் முதலிய பாகங்களில் புற்றுநோய் உண்டாவதும் இந்தியாவில் அதிகமாயுள்ளது.

ஜீரண மண்டலம் அடிக்கடி பல்வேறு நோய்களாலும் பாதிக்கப்படுகிறது. இந்நோய்களால் எழும் பொதுச் சுகாதாரப் பிரச்சினைகளோ எண்ணிலடங்கா. நோய் காரண ஆய்வுத்துறைக்கு விளங்காத, ஜீரண சம்பந்த நோய்கள் பல இந்தியாவில் சாதாரணமாய்க் காணப்படுகின்றன. இவை பொதுவாக, நாட்பட்டு உடல் நலத்தை பாதிப்பதால், நோயாளி மிகவும் வலுவிழந்து போய்விடுவார். நல்வாய்ப்பின்மையாக, ஜீரண நோய்ச் சிகிச்சைக்கான வசதிகள் நம்நாட்டில் மிகவும்குறைவாகவே உள்ளன. ஜீரண நோய்களுக்கு நல்ல சிகிச்சை இருந்தால் அது வாழும் நாட்களை உயிர்த்துடிப்புப் பெறச் செய்வதோடு, வாழ்நாளை நீடிக்கவும் செய்யும் என்பது உறுதி அன்ருே?






நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு



TANSI
டான்ஸி



தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்
தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது

- மலிவானது
- உத்திரவாதமானது
- வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமானகட்டமைப்புகளுக்கும். கருவிமற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் ''டான்ஸி''

விவரங்களுக்கு அணுகவும் : தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்

நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
''அருள்மனை'', 26, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600014



## குழந்தைகளுக்குச் சத்துணவு!


குழந்தையின் முதல் ஐந்தாண்டுக் காலம் அதன் உடலும் மனமும் பெருமளவில் வளர்ச்சி பெறும் பருவமாகும். இந்தப் பருவத்தில் குழந்தைக்குச் சீரான சத்துள்ள உணவு மிகவும் அவசியம். உணவில் குறையிருந்தால் அது குழந்தையின் உடல் வளர்ச்சியையும், மன வளர்ச்சியையும் பாதிக்கும். இவ்விதப் பாதிப்பை வாழ்க்கையில் பின்னர் சீராக்கவே முடியாது. சத்துணவுப் பற்றுக்குறையினுல் இந்தியாவில் வருங்காலத் தலைமுறையினரின் உடல் திண்மைக்கும் மனத் திறனுக்கும் தீங்கு ஏற்பட்டு வருகிறது. இதனுல் குழந்தைகள் இறப்பு விகிதமும் அதிகமாகிறது,

இந்தியாவில் ஐந்து வயதுக்குட்பட்ட 9 கோடி குழந்தைகள் இருக்கிறுர்கள். 3½ கோடிக் குழந்தைகள் ஏதாவதொரு விதத்தில் போதிய சத்துணவின்றி நலக்குறைவுடன் இருக்கிறுர்கள். சமச்சீரான உணவு இல்லை அவர்களுக்கு. அவர்களுடைய உணவில் கலோரிச் சக்தி, புரதம், வைட்டமின், அவசியமான தாதுச் சத்து ஆகியவை பெருமளவு குறைவாக இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டுமென்பதே சத்துணவுத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

இன்று நாட்டில் 17,000-த்திற்கும் மேற்பட்ட சத்துணவு நிலையங்கள் இயங்கி வருகின்றன. குழந்தைகள் தினமும் குறிப்பிட்ட நேரத்தில் இந்த நிலையங்களுக்குச் சென்று தங்களுடைய கூடுதல் உணவைப் பெற்றுக் கொள்கின்றனர். 1972 மார்ச் திங்கள் நிலவரப்படி, 20 இலட்சம் குழந்தைகள் இந்த நிலையங்கள் மூலம் பயனடைந்து வருகிறுர்கள்.

இந்தத் திட்டம் 1970 சூலையில் துவக்கப்பட்டது. முதல் ஆண்டில், சத்துணவு நிலையங்கள் மூலம் 8 இலட்சம் பேர் பயனடைந்தனர். இரண்டாவது ஆண்டில் இந்த எண்ணிக்கை 20 இலட்சத்தை எட்டியது. அடுத்த ஆண்டு, அதாவது 1972-73-ல், இத்திட்டத்தின் கீழ்வரும் குழந்தைகளின் எண்ணிக்கை 20 இலட்சத்திலிருந்து 30 இலட்சமாக உயரும். இத்திட்டத்தை நிறைவேற்றச் சுமார் 20 கோடி ரூபாய் செலவாகும்.

இச்சத்துணவுக் குறைவினுல் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 350 இலட்சம். இப்போது சத்துணவு பெறும் 20 இலட்சம் குழந்தைகள் அதில் மிகச் சிறிய பகுதியினர்தான். என்றுலும், நகரங்களில் சேரிகள், பழங்குடியினர் பகுதிகள் போன்ற இடங்களில் வசிக்கும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இந்த 20 இலட்சம் குழந்தைகள். இவர்களுக்குச் சத்துணவு மிகவும் அவசியமல்லவா?




உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல்
பெருக அதற்கு
'ப்ளேனேுஃபிக்ஸ்'
தேவை

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் "ப்ளேனேுஃபிக்ஸ்" உபயோகித்தீர்களானுல், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப் பயிரிலே "ப்ளேனேுஃபிக்ஸ்" மருந்தைப் பல்லாண்டுகள் பயன்படுத்தியதிலே, திருப்திகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன.

அசல் தயாரிப்புத்தானு என்று பார்த்து உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாருதீர்கள். உங்கள் பயிர் ஓர் ஒப்பில்லாச் செல்வம்.



M&B May&Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.


பம்பாய். கல்கத்தா. கவுஹாத்தி. இந்தோர்
லக்னே. சென்னை. புதுடெல்லி. பாட்ளு.

"ப்ளேனேுஃபிக்ஸ்" என்பது ஒரு எம் & பி. கேத் தயாரிப்பு. டிரேடு மார்க்



# இந்தியாவிலேயே மிகப்பெரிய மேம்பாலம்





இந்தியாவிலேயே மிகப்பெரியது என்று கருதப்படும் அண்ணா மேம்பாலத்தினைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1-7-1973-ல் திறந்து வைத்தார்கள்.


- இந்த மேம்பாலம் கட்டி முடிப்பதற்காகிய காலம் 21 மாதங்கள்.
- செலவு ரூ. 66 இலட்சம்.
- நீளம் 1599 அடி; அகலம் 48 அடி.

இந்த மேம்பாலத்தில்,

- 901 மெட்ரிக் டன் இரும்பு
- 3765 மெட்ரிக் டன் சிமெண்டு
- 120 மெட்ரிக் டன் வெண்சாம்பல்

பயன்படுத்தப்பட்டுள்ளன.

- வேலை தொடங்கப்பட்ட நாள் : 1-9-1971
- பாலம் திறக்கப்பட்ட நாள் : 1-7-1973





# எஃகு வங்கி

வங்கி (Bank) என்றதும் பணம்போடும் வங்கி, கண்களைப் பாதுகாக்கும் வங்கி (Eye Bank), இரத்தச் சேமிப்பு வங்கி (Blood Bank) ஆகியவை நினைவுக்கு வரும். ஆனல் எஃகு வங்கியைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீகளா ?

1972-73-ஆம் ஆண்டில் இந்தியாவில் எஃகு வங்கி இயங்கத் தொடங்கியது. பலதரப்பட்ட எஃகு வகைகளின் குறிப்பிடப்பட்ட சேமிப்பு அளவுகள் குறையாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்வதே இந்த வங்கியின் பணியாகும்.

மேலும் வெளிநாடுகளிலிருந்து எஃகு இறக்குமதி செய்து கொள்வதற்கான இறக்குமதி அனுமதிகளை வைத்திருக்கும் முன்னுரிமை பெற்ற தொழிற்சாலைகளுக்கு இவ்வங்கி முன்னதாக எஃகுகளை வழங்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

நாட்டில் நிறைவேற்றப்படும் முக்கியமான திட்டங்களுக்குத் தேவைப்படும் ஒரு குறிப்பிட்ட ரக எஃகு கிடைப்பதில் ஏற்படும் தடங்கல்களைத் தவிர்ப்பது இவ்வங்கியின் தலையாயக் கடமையாகும்.

இந்த வங்கி, கொதிகலன் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் 4710 டன் எஃகு, 640 டன் எஃகுத் தகடுகள், தட்டுகள், 3940 கார்பன் எஃகுப் பட்டைகள், 9570 டன் எஃகுக் குழாய்கள் போன்றவற்றைத் தொழிற்சாலைகளிலிருந்து பெறுவதற்காக ஆர்டர்கள் அளித்துள்ளது.

இவற்றில் கொதிகலன் தயாரிக்கப் பயன்படுத்தும் 4643 டன் எஃகு, 640 டன் எஃகுத் தகடுகள், தட்டுகள், 3710 கார்பன்—எஃகுப் பட்டைகள் ஆகியவை இவ்வங்கிக்கு வந்து சேர்ந்துள்ளன. எஃகு வங்கி இதுவரை, கொதிகலன் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் 1356 டன் எஃகு, 229 டன் எஃகுத் தகடுகள், தட்டுகள் ஆகியவற்றை வழங்கியுள்ளது. பலதரப்பட்ட 27 ஆயிரம் டன் எஃகை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது பற்றியும் இவ்வங்கி தற்போது ஆய்வு செய்து வருகிறது.

**ஆணும்—பெண்ணும் !**

ஆண்களின் துணிவு ஆறு
வதில் இருக்கிறது. பெண்
ணின் துணிவு பணிவதில்
இருக்கிறது. மௌனமே
பெண்ணின் புகழ்.

—அரிஸ்டாடில்

**துக்கத்தின் சகோதரி !**

கவிதை துக்கத்தின் சகோ
தரி. துக்கம் துய்ப்பவன் ஒவ்
வொருவனும் கவிஞனே.
ஒவ்வொரு கண்ணீர்த் துளி
யும் ஒரு செய்யுள். ஒவ்
வொரு இதயமும் ஒரு
காவியம் !

—ஆண்ட்ரே

**சோறும் காதலும் !**

சோறு—மனிதனுடைய
முதற் பசி !
காதல்—மனிதனுடைய
இரண்டாம் பசி !

—வி. ச. காண்டேகர்

**இரட்டைக் குழந்தை !**

அன்புண்டு இரக்கமில்லை
என்று பாசாங்கு செய்ய
முடியுமா ? அன்பும், இரக்க
மும் இரட்டைக் குழந்
தைகள் !

—டைரன்

**எது வாழ்க்கை ?**

உழைப்பு, துக்கம்,
மகிழ்ச்சி — இம்மூன்றையும்
மனிதன் அனுபவிக்கப்
பிறந்தவன். இந்த மூன்று
மில்லாத வாழ்வு சரியான
வாழ்வாகாது.

—வாவனூர்கூஸ்

**ஓவியமும் காவியமும் !**

ஓவியம் என்பது பேசாத
கவிதை ;– கவிதை என்பது
பேசும் ஓவியம்.

—சைமன்டீஸ்

**எது நாடகம் ?**

வாழ்க்கை முறையைக்
காட்டாத நாடகம் ஒரு
பொம்மலாட்டமே !

—காஸ்னர்

# இந்தியாவில்...

கடந்த சில ஆண்டுகளாக, இந்தியக் கைவினைப் பொருட்களுக்கு வெளிநாட்டுச் சந்தைகளில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. அச்சந்தைகளுக்கு வரும் வாடிக்கையாளர்கள், இந்திய கைவினைப் பொருட்களை விரும்பி வாங்குகின்றனர். 1961-62-ஆம் ஆண்டில் 19 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கைவினைப் பொருட்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. 1971-72-ஆம் ஆண்டிலோ 90 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கைவினைப் பொருட்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா ஏற்றுமதி செய்த கைவினைப் பொருட்களின் மதிப்பு நான்கு மடங்காய் அதிகரித்துள்ளது.

ஊனமடைந்த மாணவர்களுக்காக 1955—56-ல் கல்வி உதவிச் சம்பளத் திட்டம் ஒன்று துவங்கப்பட்டது. இப்போது இந்த உதவிச் சம்பளத்தின் அளவு வெகுவாக உயர்ந்திருக்கிறது. 1955—1956-ல் மைய அரசு 35 மாணவர்களுக்கு இந்த உதவிச் சம்பளத்தை வழங்கியது. 1972—73-ல் இந்த உதவிச் சம்பளம் பெற்றவர்களின் எண்ணிக்கை 1,555. கடந்த 17 ஆண்டுகளில் மொத்தம் 9,294 மாணவர்களுக்கு இந்த உதவிச் சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது.

1973 மார்ச் மாதத்தில் இந்திய ரயில்வேக்களில் பயணிகள் எண்ணிக்கை கடந்த ஆண்டின் இதே காலத்தைவிட சுமார் 1.87 சதவீதம் அதிகமாக இருந்தது. பரிசீலனை மாதத்தில் 2,19,521 பேர்கள் இந்திய ரயில்வேக்களில் பயணம் செய்தனர். 1972 ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் 1973 மார்ச் 31-ஆம் தேதி வரை இந்திய ரயில்வேக்களில் பதிவு செய்யப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை 26,08,267 ஆகும்.








மேற்கத்திய நாடுகளில், ஆகாய விமானங்கள் பறக்கத் தொடங்கிய சில காலங்களிலேயே இந்திய வானிலும் ஆகாய விமானங்கள் பறக்க ஆரம்பித்தன. 1911-ஆம் ஆண்டில், ஒரு ஆகாய விமானம், ஒரு பை நிறைய தபால்களை எடுத்துக்கொண்டு, அலகாபாதிலிருந்து நயினிக்குப் பறந்து சென்றது. இந்த ஆகாய விமானம் தான் உலகிலேயே முதன் முறையாக தபால்களை எடுத்துச் சென்றது என்று கருதுகிறார்கள்.

1972-ஆம் ஆண்டில் மோதல்கள், ரயில்கள் தடம் புரளுதல், லெவல் கிராசிங் விபத்துக்கள், ரயில்களில் தீ விபத்துக்கள் போன்ற ரயில் விபத்துக்களின் மொத்த எண்ணிக்கை முந்தைய ஆண்டின் 897 லிருந்து 778 ஆகக் குறைந்துள்ளது. கடந்த இருபதாண்டுக் காலத்தில் ரயில் விபத்துக்களின் எண்ணிக்கை 61 சதவீதம் குறைந்துள்ளது. அதே சமயம் ரயில்கள் கடக்கும் தூரம் 56 சதவீதம் அதிகரித்துள்ளது.

நம் நாட்டிலுள்ள சிவில் விமானங்கள் சுமார் 75 பெரிய, சிறிய நகரங்களுக்குப் பயணிகளையும், தபால்களையும், சரக்குகளையும் ஏற்றிச் செல்லும் பொறுப்பைச் சிறப்பாக ஏற்று நடத்தி வருகின்றன. அதேபோன்று தற்போது, சில மணி நேரங்களில் விமானம் மூலம், நாம் உலகத்திலுள்ள எந்த நாட்டுக்கும் சென்றுவிட முடியும். நம் நாட்டின் தொலைதூரப் பகுதிகளிலுள்ள குறிப்பாக எல்லைப்புற மலைப்பிரதேசங்களிலுள்ள மக்களுக்குத் தேவையான பண்டங்கள், விமானங்கள் மூலமாகவே கிடைக்கின்றன.




# ஒழித்துக் கட்டுவீர் பூஞ்சண நோயை! பன்மடங்கு ஓங்கச் செய்வீர் பருத்தி விளைச்சலை. உறுதுணை புரிவது இண்டோ:பில் டைத்தேன் M-45



பருத்தி நோய்கள் பலவற்றைத் தடுத்து, பயிர் விளைச்சலைப் பன்மடங்காக்குவதில் புகழ் பெற்ற பூஞ்சணங்கொல்லி: இண்டோ:பில் டைத்தேன் M-45. பயிர்களின் நலனை எவ்வகையிலும் பாதிக்காமல், நீடித்திருந்து காக்கும் திறனுள்ளது. வளப்பமான பருத்தி விளைச்சலுக்கு வாய்ப்பானது டைத்தேன் M-45 உங்கள் தேவைகளுக்கு இண்டோ:பில் விற்பனையாளரோடு தொடர்பு கொள்வீர்.

**இண்டோ:பில்—பசுமை நிறைந்த எதிர்காலத்திற்கு**




**இண்டோ:பில் கெமிக்கல்ஸ் லிமிடெட்,**

பம்பாய்-25

® டைத்தேன் M-45. மற்றும் : ப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனியின் ட்ரேட் மார்க்குகளாகும். இவை யூ எஸ். பேடெண்ட் ஆபீஸ் மற்றும் இதர நாடுகளில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டவை.

IF 6212

# மானாவாரி மணிலா மகசூல் பெருகிட...



தமிழ்நாட்டில் ஏறத் தாழ 24.7 இலட்சம் ஏக்கர் (10 இலட்சம் எக்டேர்) பரப்பளவில் ஆண்டுதோறும் மணிலாபயிரிடப் படுகிறது. அதில் 3.43 இலட்சம் ஏக்கர் (1.39 இலட்சம் எக்டேர்) இறைவையாகவும், 21·27 இலட்சம் ஏக்கர் (8.61 இலட்சம் எக்டேர்) மானாவாரியாகவும் சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக மணிலாவின் பரப்பும் அதிகமாகி வருகிறது; அதுபோலவே உற்பத்தியும் பெருகி வருகிறது. இதற்கு மூலகாரணம் இறைவை மணிலாப் பரப்பும், உற்பத்தியும் பெருகி வருவதேயாகும். ஆனால் மானாவாரி மணிலாவைப் பொறுத்தவரை எதிர்பார்க்கும் அளவுக்கு உற்பத்தி உயரவில்லை. இதற்கு முக்கியக் காரணம் கடந்த சில ஆண்டுகளாகப் பருவ மழைபொய்த்து விடுவதே ஆகும்.

உயர்விளைச்சல் தானிய வகைகள் சாகுபடிக்கு வந்த பிறகு, மானாவாரி மணிலாச் சாகுபடியில் உழவர் பெருமக்கள் முன்பு போல் ஆர்வம் காட்டாததும் ஒருவகையில், மானாவாரி மணிலா உற்பத்திக் குறைவுக்குக் காரணம் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இக்காரணங்களினால், பெரும்பாலான உழவர் பெருமக்கள் ஏக்கருக்கு 10 மூட்டைகள் (ஒவ்வொன்றும் 40 கிலோ கொண்டது) கூட விளைவிக்க முடியவில்லை. இதனாலேயே தற்பொழுது பல உழவர் பெருமக்கள் 'மானாவாரி மணிலாச் சாகுபடி இலாபமானதாக இல்லை' என்று கூறுகிறார்கள்.

ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு, மானாவாரி மணிலாச் சாகுபடி செய்தால் மானாவாரி மணிலாவிலும் ஏக்கருக்கு 20 மூட்டை (ஒவ்வொன்றும் 40 கிலோ கொண்டது) மகசூல் எடுக்க முடியும் என்பது பல்வேறு இடங்களில், பல உழவர் பெருமக்களின் வயலில் நடைபெற்ற பரிசோதனைகளிலிருந்து தெளிவாகிறது. ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு மானாவாரி மணிலாச் சாகுபடி செய்தால், சாதாரணமாகச் சாகுபடி செய்யப்படும் மணிலாவிலிருந்து கிடைக்கும் மகசூலைவிட ஏக்கருக்கு 10 மூட்டை நிலக்கடலையை அதிகமாக உற்பத்தி செய்யமுடியும். அதாவது தற்போதுள்ள மானாவாரி மணிலா உற்பத்தியை 2 மடங்காகப் பெருக்கிடலாம்!

இந்த அடிப்படையில் கணக்கிட்டால் தமிழ்நாட்டில் சராசரியாகச் சாகுபடி செய்யப்படும் 21 இலட்சம் ஏக்கர் மானாவாரி மணிலாவிலிருந்தும் ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொள்வதன் மூலம் 2 கோடியே 10 இலட்சம் மூட்டை அல்லது 8 இலட்சத்து 40 ஆயிரம் டன் மணிலா அதிகமாக விளைவிக்க முடியும்!

இவ்வாறு மானாவாரி மணிலா உற்பத்தி பெருகினால் உழவர் பெருமக்களின் வருவாய் பெருகுவதுடன் கடலை எண்ணெய் விலையும், கடலைப் பிண்ணாக்கு விலையும் கணிசமாகக் குறையும். மேலும், அதிகமாக உற்பத்தியாகும் கடலை எண்ணெய்யைக் கொண்டு உள்நாட்டுத் தேவையை ஈடு செய்வதுடன், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியையும் ஈட்டலாம்! எனவே, மானாவாரி மணிலாச் சாகுபடி செய்யவிருக்கும் உழவர் பெருமக்கள், ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு, மானாவாரி மணிலா பயிரிட்டு வீட்டிற்கும், நாட்டிற்கும் நற்பணி செய்யவேண்டும் என்பதற்காகத் 'தமிழரசு' இதழ் பின்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை உழவர் பெருமக்களுக்கு அன்புடன் படைத்துள்ளதுடன், அவைகளைப் படித்துப் பயன்படுத்திப் பயன் மிகு பெறுமாறு விரும்பிவேண்டிக் கேட்டுக் கொள்கிறது.



## ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

### ஏற்ற ரகங்கள்

மானாவாரி பயிரிட விரும்புகின்றவர்கள் தங்கள் தேவைக்கும், விருப்பத்திற்கும், பகுதிக்கும் ஏற்ற கொடி மணிலா ரகங்களையோ கொத்து மணிலா ரகங்களையோ பயிரிடலாம். கொடி மணிலா ரகங்கள் அதிக வயதுடையவையாதலின், அவைகளை அதிக நாட்கள் பருவமழை பெய்யும் பகுதிகளில் மட்டுமே பயிரிடுவது சிறந்தது. கொத்து மணிலா ரகங்கள் குறுகிய கால வயதுடையவையாதலின், அவைகளைக் குறிப்பாகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே பருவமழை பெய்யும் பகுதிகளிலும், பொதுவாக எல்லா இடங்களிலும் பயிரிடலாம். உங்களுக்கு ஏற்ற ரகங்களைப் பின்கண்ட அட்டவணையில் இருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

| மணிலா வகையும் ரகத்தின் பெயரும் | வயது (நாட்கள்) |
| --- | --- |
| **கொடி வகை. (Spreading Variety)** | |
| 1. டி.எம்.வி. 1 .. | 135 |
| 2. டி.எம்.வி. 3 .. | 135 |
| **கொத்து வகை (Bunch Variety)** | |
| 1. டி.எம்.வி. 2 .. | 105 |
| 2. டி.எம்.வி. 7 .. | 105 |
| 3. பி.ஓ.எல். 1 .. | 105 |
| 4. பி.ஓ.எல். 2 .. | 105 |
| **அதிகம் படராதது (Semi-Spreading)** | |
| 1. டி.எம்.வி. 10 .. | 125 |

### ஏற்ற மண்

மணல் கலந்த வண்டல் மண், செம்மண் அல்லது கருவண்டல் மண் போன்ற மிருதுவான மண்ணே மானாவாரி மணிலாச் சாகுபடிக்குச் சிறந்தது.

# இலக்கியம் என்றால் என்ன?

இலக்கியம் என்பது என்ன?

இந்த வினாவுக்கு மூன்று அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர். "இலக்கியம் என்பது வாழ்க்கையைப் பிரதி செய்வதன்று; உருவாக்குவதாகும்" என்று ஆஸ்கார் ஒயில்ட் கூறுகிறார்.

கதே என்னும் அறிஞர் சொல்கிறார்: "இலக்கியம் குன்றுவது மக்கள் குன்றுவதன் அறிகுறியாகும். இரண்டும் ஒரே கதியிலேயே தாழ்ந்து வரும்"

"ஒரு காலத்தின் இலக்கியம் அக்காலத்து மக்களின் மனப்போக்கைக் காட்டும் ஆடியாகும்" என்கிறார் நேஷன் என்னும் அறிஞர்.

### நிலந் தயாரித்தல்

மானாவாரி மணிலா மகசூலைப் பெருக்குவதற்கு நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். மணிலாச் செடிகள் நன்றாக வேர்விட்டு வளரவும், விழுதுகள் தடையின்றி மண்ணிற்குள் சென்று நிலக்கடலைகள் உருவாகவும், 6 அங்குல ஆழம் வரை நிலத்தை நன்கு புழுதியாகும்படி உழவேண்டும். நிலம் நன்கு புழுதியாக ஆக இரும்புக் கலப்பையால் 4 முதல் 6 தடவை உழ வேண்டும்.

### அடியுரமிடுதல்

விதைப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு, கடைசி உழவில் ஏக்கருக்கு பின்கண்ட அளவு உரங்களை அடியுரமாக இட வேண்டும்.

தொழு எரு :—

பத்து வண்டி (5 டன்). தொழு எரு கிடைக்காவிட்டால் 10 வண்டி (5 டன்) கலவை எரு (கம்போஸ்ட்) இடலாம்.

இரசாயன உரம் :—

தழைச்சத்து—4½ கிலோ

மணிச்சத்து—9 கிலோ

சாம்பல் சத்து—13½ கிலோ

மேற்கூறிய அளவு சத்துக்கள் அளிக்க ஏக்கருக்கு கீழ்க்கண்ட அளவு இரசாயன உரங்களை இட வேண்டும்.

அமோனியம் சல்பேட்—
23 கிலோ.

சூப்பர் பாஸ்பேட்—56 கிலோ

மியூரியேட் ஆப் பொட்டாஷ்—
23 கிலோ.

அமோனியம் சல்பேட் 23 கிலோ இடுவதற்குப் பதிலாக 10 கிலோ யூரியா இடலாம்.

மேற்கூறியவாறு உரமிடத் தனித்தனி இரசாயன உரங்கள் கிடைக்காவிட்டால் 7-ஆம் எண் கலப்பு உரத்தில் (4 : 8 : 12) ஏக்கருக்கு 113 கிலோவை அடியுரமாக இடலாம்.

அல்லது

25 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட்டையும், 23 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் சேர்த்து அடியுரமாக இடலாம். இதுவே மிகவும் குறைந்த செலவில் சிக்கனமாக உரமிடும் முறையாகும்.

இவ்வாறு இரசாயன உரமிட்ட 15 நாட்களுக்குப் பிறகு-மழை பெய்து விதைப்பதற்கு முன்னர் ஏக்கருக்கு 'போராக்ஸ்' எனப்படும் வெண்காரம் 4 கிலோவும், 'ஜிப்சம்' 90 கிலோவும் இட்டு, உழுதுவிடவேண்டும்.

'போராக்ஸ்' நிலக்கடலைச் செடியின் வளர்ச்சிக்கும், தரமான நிலக்கடலை உருவாவதற்கும், பருப்பு நன்கு முதிர்வதற்கும், உதவுகிறது. 'போராக்ஸ்' போடுவதால் 15 முதல் 20 சதம் வரை மணிலாவின் மகசூல் அதிகரிக்கும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 'போராக்ஸ்' இட்டால் போதுமானது.

ஆண்டு தோறும் தொடர்ந்து மணிலா சாகுபடி செய்வதால் மண்ணிலுள்ள சுண்ணாம்புச்சத்து குறைந்து விடக்கூடும். இதனால் மகசூல் குறைந்துவிடும். இக்குறையைத் தவிர்க்க 'ஜிப்சம்' இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

### விதைக்கும் பருவம்

மானாவாரி மணிலா விதைக்கும் பருவம் பருவ மழையைப் பொறுத்தே அமைகிறது. ஆயினும் ஆடி (ஜூலை-ஆகஸ்டு) மாத விதைப்பு நல்ல மகசூலைத் தரும். பொதுவாக, ஜூன் முதல் ஆகஸ்டு வரை மானாவாரி மணிலா விதைக்கலாம்.

### நுண்ணுயிர் கலத்தல்

மணிலாச் செடியின் வேரில் முடிச்சுகள் (Nodules) காணப்படும். அம் முடிச்சுகளில் 'ரைசோபியம்' என்னும் நுண்ணுயிர்கள் உள்ளன. அவைகளின் உதவியால், வேர் முடிச்சுகள் காற்றிலுள்ள தழைச்சத்தை இழுத்துக்கொண்டு செடிகளுக்குப் பயன்படும்படி செய்கின்றன. எனவே, மணிலாச் செடிகளில் அதிக அளவு வேர் முடிச்சுகள் உண்டாக ஏக்கருக்கு 3 குடுவை நுண்ணுயிர்களை மணலுடன் அல்லது மரத் தூளுடன் கலந்து விதைப்பதற்கு முன்பு அல்லது பின்பு நிலத்தில் தூவுதல் சிறந்தது.

### விதையளவு

கொடி மணிலாவை விட, கொத்து மணிலாவை நெருக்கமாக விதைக்க வேண்டுமாதலின், கொத்து மணிலாவிற்கு அதிக அளவு விதைப்பருப்புகளை (உடையாதது) விதைக்க வேண்டும். வகைக்கும், ரகத்திற்கும் ஏற்பப் பின் கண்ட அளவில் விதைக்க வேண்டும்.

| ரகம் | | ஏக்கருக்கு தேவைப்படும் விதை அளவு (உடையாத பருப்பு (கிலோவில்) |
|---|---|---|
| டி.எம்.வி. 1 | .. | 45 |
| டி.எம்.வி. 3 | .. | 45 |
| டி.எம்.வி. 2 | .. | 50 |
| டி.எம்.வி. 7 | .. | 55 |
| டி.எம்.வி. 10 | .. | 45 |
| பி.ஓ.எல். 1 | .. | 60 |
| பி.ஓ.எல். 2 | .. | 48 |

### விதையுடன் மருந்து கலத்தல்

விதைப்பதற்கு முன்பு விதைப் பருப்புகளுடன் 'கேப்டான்' அல்லது 'டீ. எம். டீ. டி.' என்ற மருந்தை 1 கிலோ விதைக்கு 2.5 கிராம் மருந்து வீதம் கலந்து 6 மணி நேரம் வைத்திருந்து பிறகு விதைக்கவும்.

### இடைவெளி

கொடி மணிலா ரகங்களுக்கு வரிசைக்கு வரிசை 9 அங்குலமும், செடிக்குச் செடி 9 அங்குலமும் இடைவெளி இருக்குமாறு விதைக்க வேண்டும்.

கொத்து மணிலா ரகங்களுக்கு வரிசைக்கு வரிசை 6 அங்குலமும், செடிக்குச் செடி 6 அங்குலமும் இடைவெளி இருக்குமாறு விதைக்க வேண்டும்.

### விதைப்பு

ஏரின் பின்னால் விதைப்பருப்புகளை மேற்கூறிய இடைவெளியிலும், $1\frac{1}{2}$ முதல் 2 அங்குல ஆழத்திலும் போட வேண்டும். மேற்கூறிய இடைவெளியில் விதைக்காமல், பெரும் இடைவெளி விட்டு விதைத்தால், பயிரின் அடர்த்தி குறைந்து மகசூல் குறைந்துவிடும். ஆகவே, மானாவாரி மணிலாவில் நிறைந்த மகசூல் பெறக் குறிப்பிட்ட இடைவெளியில் விதைக்க வேண்டும். ஏரின் பின்னால் விதைகளைப் போட்ட பிறகு, விதைகள் மண்ணில் மறைக்கப்படுவதற்குப் பச்சைக் கிளைகளைவெட்டிப்படலாகக் கட்டிக்கொண்டு அல்லது மூங்கில் படலின் மேல் கற்களை வைத்துப் பளு ஏற்படுத்திக் கொண்டு, நிலத்தின் மேல் இழுத்துச் செல்ல வேண்டும். இல்லையேல் விதைப் பருப்புகள் காக்கை, கருடன், குருவி போன்ற பறவைகளுக்கு இரையாகிவிடும்.


### களை எடுத்தல்

மானாவாரி மணிலாவில் நல்ல மகசூல் காணக் களை எடுத்தல் மிகவும் இன்றியமையாததாகும். விதைத்த 20 முதல் 25 நாட்களில் முதல் முறையும், விதைத்த 35 முதல் 45 நாட்களில் இரண்டாவது முறையும் களைக்கொட்டால் கொத்தி விட்டுக் களைகளை அகற்ற வேண்டும். இரண்டாவது களை எடுப்பிற்குப் பிறகு களைக் கொட்டால் களை எடுக்கக்கூடாது. அப்படிச் செய்தால் விழுதுகளைப் பாதிக்கும். எனவே, அதன்பின் தோன்றும் பெரிய களைகளைக் கைகளால் எடுத்து விடுவதே சிறந்தது.

கொத்து மணிலாவிற்கு இரண்டாவது களை எடுப்பின் போது மண் அணைக்கவேண்டும்.

நன்கு காய்ந்த நிலத்திலும், அதிக ஈரம் உள்ள நிலத்திலும் களை எடுக்கக் கூடாது.

தள்ளா விளைச்சலுக்குப் பொள்ளாச்சி—2




### பயிர்ப் பாதுகாப்பு

மானாவாரி மணிலாவில் முக்கியமாக சிவப்புக் கம்பளிப் பூச்சி; சுருள் பூச்சி, அசுவணி ஆகிய பூச்சிகளும், 'டிக்கா' இலைப்புள்ளி நோயும் தோன்றக்கூடும்.

#### 1. சிவப்புக் கம்பளிப் பூச்சி

மானாவாரி மணிலாவை அதிகம் தாக்குவது சிவப்புக் கம்பளிப் பூச்சியே. மழை பெய்த பிறகு இப் புழுக்கள் தோன்றக் கூடும், கோவை மாவட்டத்தில் வைகாசி முதல் ஆவணி வரை தோன்றக்கூடும். மற்ற மாவட்டங்களில் ஆனி முதல் ஐப்பசி வரை தோன்றக்கூடும். இதன் தாய்ப் பூச்சிகள் (வண்ணாத்திப் பூச்சி) மழை பெய்த 3-ஆம் நாள் இரவ, கூட்டுப் புழுவிலிருந்து தோன்றும். அப்பூச்சிகளை இரவில் 'பெட்ரோமாக்ஸ்' விளக்கு வைத்துப் பிடித்து அழித்து விடலாம். இப்பூச்சிகளை அழிக்காவிடில் அவை முட்டையிட்டு, பிறகு அம் முட்டைகளில் இருந்து சிவப்புக் கம்பளிப் பூச்சிகள் தோன்றி மணிலாவை அழிக்கும். சிவப்புக் கம்பளிப் புழுக்களை அழிக்க ஏக்கருக்குப் பின்கண்ட அளவில் மருந்து தெளிக்கலாம்.

1. என்ட்ரின் 0·045% (200 மில்லி லிட்டர் மருந்து, 100 லிட்டர் தண்ணீர்). அல்லது

2. பாரத்தியான் 0·05% (100 மில்லி லிட்டர் மருந்து, 100 லிட்டர் தண்ணீர்). அல்லது

3. நுவான் (டி.டி.வி.பி.) 0·1% (100 மில்லி லிட்டர் மருந்து, 100 லிட்டர் தண்ணீர்) அல்லது

4. ஹீலியோடாக்ஸ் — 750 மில்லி லிட்டர்+100 லி. தண்ணீர்

5. பி எச்.சி. 10% தூள்— ஏக்கருக்கு 10 கிலோ—இளம் புழுக்களுக்குகளே மட்டுமே அழிக்க ஏற்றது.

2. **சுருள் பூச்சி**: இவை வறட்சியான காலங்களில் தோன்றும். இளம் இலைகளைத் தின்பதுடன், இலைகளை மடக்கிச் சேதம் விளைவிக்கின்றன. இவைகளை அழிக்கப் பின்கண்டவாறு மருந்து தெளிக்க வேண்டும்.

1. டேக்ஸோபின்+டி.டி.டி.+டைமதோட்—750 மி. லி. மருந்து, 100 லிட்டர் தண்ணீர் (ஏக்கர்) அல்லது

2. பாரத்தியான் 0·05% (100 மி. லி. மருந்து, 100 லிட்டர் தண்ணீர்) அல்லது

3. பெனிட்டோதியான் 0·05% (100 மி. லி. மருந்து, 100 லிட்டர் தண்ணீர்) அல்லது

4. பெனிட்டோதியான் 2% தூள்—10 கிலோ ஏக்கருக்கு.

3. **அசுவணி**: இவை நுண்ணிய கறுப்புப் பூச்சிகள்; இலைகளில் காணப்படும்; இலைகளின் சாற்றை உறிஞ்சி செடிகளை வாடச்செய்யும். இவைகளைப் பின் கண்டவாறு அழிக்கலாம்.

1. கர்போஃபினோதியான் (டிரைதியான்) 0·06 சதவிகிதம் (300 மி.லி. மருந்து 100 லிட்டர் தண்ணீர்) அல்லது

2. மீதெய்ல் டெமிடான் (மெடாசிஸ் டாக்ஸ்) 0.025 சதவிகிதம் (100 மி.லி. மருந்து, 100 லி. தண்ணீர்) அல்லது

3. தயோமிடான் (எகடின் 0·25 சதவிகிதம் (100 மி.லி. மருந்து 100 லி. தண்ணீர்) அல்லது

4. டைமதோட் (ரோகார்) 0·03 சதவிகிதம் (100 மி.லி. மருந்து 100 லி. தண்ணீர்) அல்லது

5. ஃபாஸ்ஃபாமிடான் 0·05 சதவீதம் (டைமக்ரான்) (150 மி.லி. மருந்து, 300 லிட்டர் தண்ணீர்) அல்லது.

6. ஃபார்மோதியான் (ஏன்தியோ) 0·05 சதவிகிதம் (200 மி.லி. மருந்து 100 லிட்டர் தண்ணீர்) அல்லது,

7. வாமிடோதியான் 0·06 சதவிகிதம் (100 மி.லி. மருந்து 100 லிட்டர் தண்ணீர்) அல்லது

8. ஃபாஸலோன் 0·06 சதவிகிதம் (100 மி.லி. மருந்து 100 லிட்டர் தண்ணீர்)

**மருந்து தெளிக்க**: கைவிசை மருந்து தெளிக்கும் கருவி (Hand operated sprayer) உபயோகிக்கும்போது மேலே கூறியுள்ள அளவு நீர் தேவைப்படுகிறது. விசைக் கருவி (Power Sprayer) உபயோகிக்கும் போது முன்னால் கூறிய நீரின் அளவுகளை 40 சதவிகிதமாகக் குறைத்துக் கொள்ளவும். மருந்தின் அளவைக் குறைக்கக் கூடாது.

''டிக்கா'' என்னும் இலைப்புள்ளி நோய் காணப்படும் இடங்களில் 1 கிலோ தாமிரக் கலவை மருந்தை ஏனைய மருந்துடன் கலந்து விதைத்த 20—25 நாட்களில் முதல் முறையும், விதைத்த 40—45 நாட்களில் மறு முறையும் தெளிக்கவும்.

காலையில் 9 மணிக்குள்ளாகவும், மாலையில் 4 மணிக்கு மேற்பட்டும் மருந்து தெளித்தல் சிறந்தது.

மண்ணில் கரையான், வெள்ளைப் புழு, ஏனைய பூச்சிப் புழுக்கள் காணப்பட்டால் 'அல்டிரின்' 'டைஅல்டிரின்'. 'ஹெப்டெக்ளோர்' போன்ற மருந்துகளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் உழவில் போடலாம்.

### அறுவடையும் மகசூலும்

கடலைத் தோலின் உள்பாகம் கறுப்பு நிறமாகவும், பருப்பின் மேலுள்ள தோல் சிவப்பு நிறமாகவும் மாறிய பிறகு மணிலாவை அறுவடை செய்வதே சிறந்தது.

மேற்கூறிய முறையில் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு பின் கண்ட அளவு மகசூல் பெறலாம்:—

| ரகம் | மகசூல் (மூட்டைகள்) |
|---|---|
| டி.எம்.வி. 1 | 15—20 |
| டி.எம்.வி. 3 | 18—22 |
| டி.எம்.வி. 10 | 20—25 |
| டி.எம்.வி. 2 | 15—20 |
| டி.எம்.வி. 7 | 15—20 |
| பி.ஓ.எல். 1 | 18—22 |
| பி.ஓ.எல். 2 | 20—25 |

(1 மூட்டை=40 கிலோ)

எனவே, மானாவரி மணிலாச் சாகுபடி செய்யவிருக்கும் உழவர் பெருமக்கள் அனைவரையும் மேற்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு மகசூலைப் பெருக்கிப் பெரும் இலாபம் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

—ஆர்.எம்.

அமெரிக்க நாட்டில் 'அது முடியவே முடியாது' என்று ஒரு டெலிவிஷன் திரைப்படம் தயாரித்திருக்கிறார்கள். வல்லுநர்களும் ஆராய்ச்சி அறிஞர்களும், நிபுணர்களும் எந்தெந்தப் பணிகள் முடியவே முடியாது என்று சொன்னார்களோ அவைகளை எல்லாம் நிறைவேற்றி—வெற்றி அடைந்ததை விளக்கும் படம் அது. அது ஏன் முடியாது? என்று பெயர் வைப்பதற்குப் பதிலாக 'அது முடியவே முடியாது' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.



இந்தியாவிலேயே சிங்கங்கள் உள்ள காடு, குஜராத் மாநிலத்திலுள்ள கிர் காடு ஆகும். ஆனால், ஒரு நூற்றாண்டுக்கு முன்புவரை கிர் காட்டின் பரப்பளவு இப்பொழுதுள்ளதைப்போல மூன்று மடங்கு பெரியதாக இருந்தது.



# எண்ணம் பெருகட்டும்! எண்ணிக்கை குறையட்டும்!

கவிஞர் கா. வேழவேந்தன் எம்.ஏ.

'விண்மீன்கள்' நெரிசலாக
விளங்கினால் வெளிச்சம் உண்டா?
'தண்ணிலா' ஒன்று னாலும்
தரும்ஒளிக் கீடும் ஏது?
மண்ணிலே புகழ்கு விக்கும்
மகவொன்று பெறுவோம்; பிள்ளை
எண்ணிக்கை பெருகு மானால்
இருக்குமா இன்பம் வாழ்வில்?

வயல்மணி பெருகி டட்டும்;
வண்தொழில் குவிந்தி டட்டும்!
'வயிறுகள்', 'வாய்கள்' மேலும்
வருவதால் வறுமை தானே!
முயல்குட்டி மிகுதி போடும்;
மொழிகின்ற சிறப்பும் உண்டா?
உயர்யானைக் கன்றே ஒன்றே;
உலகமே போற்றி டாதா?

குந்தவோர் குடிசை யின்றிக்
குமுறிடும் 'ஏழைக் கந்தன்'
மந்தையைப் பெறுவா னானால்
மகிழ்ச்சியா மிஞ்சும்? 'பேற்றுப்
பந்தயம்' வைத்தி ருந்தால்
பரிசைநாம் பெறுவோம்! ஆனால்
எந்திர வாழ்வும் வாழ்வா?
இருவர்க்கே இருவர் போதும்!

வாழைஓர் குலைதான் ஈனும்;
வண்குலைப் பெருமை ஒன்று?
தாழைப்பூ ஒன்று னாலும்
தரும்மணம் குறைவா? உள்ள
ஏழ்மையை வளர்க்கும் பிள்ளை
இரண்டுக்கு மேல்ஏன் தேவை?
தாழ்ப்பாளால் பிள்ளைப் பேற்றைத்
தடுப்பதா குற்றம் வாழ்வில்?





'கட்டிலின் காதல் பாட்டு'
காலமும் ஒலிக்க வேண்டின்
'தொட்டில்தா லாட்டுப் பாட்டு'
தொடர்ந்திங்கே எழுதல் நன்று?
'கட்டியே, கரும்பே!' என்னும்
கணவனின் விழியின் முன்னால்
'எட்டி'யாய் மனைவி மாறல்
ஏழ்பிள்ளை பெறுவ தால்தான்!

கூட்டியே பெறுவ தாலே
கூடிடும் துன்பம் ஒன்று?
வீட்டிலே 'இன்பம்' போகும்;
மேனியின் 'அழகு' போகும்!
நாட்டிலே 'அமைதி' போகும்!
நலமெலாம் அற்றுப் போகும்!
தீட்டிடும் திட்ட மெல்லாம்
'தீனி'க்கே எட்டி டாதே!

ஈசல்கள் பெருகும்; ஆனால்
இருப்பதோ சிலநாள்! வீட்டின்
வாசலும், ஒன்றே; 'வாழ்வின்
வாரிசு'ம் ஒன்றே என்றே
ஆசைக்கோர் மகவைப் பெற்றே
ஆனந்த வாழ்வு வாழ்வோம்!
பூசல்கள் தவிர்க்க 'நித்தம்
புகும்பள்ளி'ப் பாடம் ஈதே!





குமார்

# எல்லாம் பிளாஸ்டிக் மயம்



நாகரிகம் வளர வளர நம்மைச் சுற்றிலும் தேவைகளும், வசதிகளும் வளர்ந்து கொண்டே வருகின்றன. நாகரிகத்துக்கேற்றாற் போன்று, புதிய புதிய பொருள்கள் அவ்வப்போது வெளிவந்த வண்ணமிருக்கின்றன. ஒரு காலத்தில் மட்பாண்டங்களையே முழுவதும் பயன்படுத்திய மனிதன், படிப்படியாகப் பித்தளை, அலுமினியம், எவர்சில்வர் போன்ற பொருள்களைப் பயன்படுத்தினான்; பயன்படுத்தியும் வருகின்றான். ஆனால், இன்று எவர்சில்வரோடு பிளாஸ்ட்டிக் பொருள்களும் நம்மை வெகுவாகக் கவர்ந்து வருகின்றன.

இது பிளாஸ்ட்டிக் யுகம் என்றால் அது முற்றிலும் தகும்!

இன்று எதில் பிளாஸ்ட்டிக் இல்லை? மருத்துவம் முதல் மகளிர் அணியும் அணிகலன்கள் வரை, எல்லாம் பிளாஸ்ட்டிக் மயமாகவே காட்சி அளிக்கிறதே! கையிலும், காதிலும், கழுத்திலும் பொன் நகை இருந்த இடத்தில் இன்று பிளாஸ்ட்டிக் நகை இடம்பெற்று விட்டதே! எளிமையாகவும் அதே சமயத்தில் எடுப்பாகவும் அல்லவா இது தோற்றமளிக்கிறது!

கடைத் தெருவுக்குப் போகிறோம். அங்கே வண்ண பிளாஸ்ட்டிக் பொருள்களைக் கண்ணாரக் கண்டு மகிழ்கிறோம். பொம்மை முதல் வீட்டுச் சாமான்கள் வரை அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால், அவைகளையெல்லாம் வாங்கி வீட்டில் அடுக்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் நிச்சயம் பிறக்கும்!

அன்றாடம் நாம் பயன்படுத்தும் பொருள்களில் ஒன்றாகத் திகழும் பிளாஸ்ட்டிக்குக்கும் வரலாறு உண்டே!

'தமிழ்க் கலைக்களஞ்சிய'த்தில் இதுபற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன:

''பிளாஸ்ட்டிக்குகள் என்பவை தொகுப்பு முறையில் தயாரிக்கப்பட்டு, வெப்பம் அல்லது அழுத்தத்தால் உருவாக்கக்கூடிய சில வகைப் பொருள்கள். தொகுப்பு ரெசின்களெனப்படும் உயர் மூலக்கூற்று எடையுள்ள கரிமக் கூட்டுக்கள் பிளாஸ்டிக்குத் தொழிலுக்கு மூலப்பொருள்கள்.

''1869-ல் ஜான் வெஸ்லி ஹையட் என்பவரும், அவருடைய சகோதரரான ஐசையா என்பவரும் செலுலாயிடைத் தயாரித்தனர். இதன் ரசாயனப் பெயர் செல்லுலோஸ் நைட்ரேட்டு. 1898-ல் கேசின் பிளாஸ்ட்டிக் செர்மனியில் தயாராயிற்று. எனவே, பிளாஸ்ட்டிக் தொழில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியதெனலாம். பேக்கலைட் (Bakelite) எனப்படும் பினல்-பார்மால் டிஹைடு ரெசின் 1909-ல் தயாராயிற்று. 1910 – 1930 – ல் 'கிளிப்ட்டால்' (Glyptal), 'பிளெக்சிகிளாஸ்' (Plexi glass) முதலிய பலவகையான பிளாஸ்ட்டிக்குகளுக்கும் காப்புரிமை வழங்கப்பட்டது. இரண்டாவது உலக யுத்த சமயத்திலும் பலவகையான பிளாஸ்ட்டிக்குகள் தயாராயின. இவ்வாறு பிளாஸ்ட்டிக்குத் தொழில் தோன்றி வளர்ந்தது.

''பிளாஸ்ட்டிக்குகளைப் பொதுவாக இருபெரும் பிரிவுகளாக்கலாம். ஒரு தடவை உருவாக்கிவிட்டால் மீண்டும் கரைக்கவோ இளக்கவோ முடியாமல் இருப்பது ஒருவகை. இது வெப்ப உறை வகை எனப்படும் (Thermosetting type). உருவாக்கிய பொருளை மீண்டும் இளக்கி, வேறுவகைப் பொருளாக்கக் கூடியது வெப்ப பிளாஸ்ட்டிக் வகை (Thermo plastic type) எனப்படும்.''

தமிழ்நாட்டில் பல்வேறு தொழில்கள் வளம்பெற்று வருகின்றன. அதற்குத் தமிழக அரசு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. சென்னைக் கிண்டி, அம்பத்தூர் ஆகிய இடங்களில் தொழிற் பேட்டைகளை நிறுவி, வளரும் தொழிலுக்கு வகை செய்துவருகிறது. இத்தகைய தொழில்களில், பிளாஸ்ட்டிக் தொழிலும் ஒன்று.

சென்னை ஜார்ஜ் டவுனில் அமைந்துள்ள 'டிப் டாப் பிளாஸ்ட்டிக் தொழிலகம்' வகை வகையான பிளாஸ்ட்டிக் பொருள்களைத் தயார் செய்து வருகிறது.

டிப்டாப்பாக இருப்பதுதானே இன்றைய நாகரிகம்? ஒருவன் ஆடை அணி வகைகளுடன் மட்டுமல்ல, கையில் ஓர் அழகான சூட்கேசும் இருந்தால் அவன் இன்னும் எடுப்பாகக் காட்சியளிக்கிறான். இத்தகைய எடுப்பும், எழிலும் மிக்க 'சூட்கேஸ்'கள் செய்வதில் இவர்கள் சிறந்து விளங்குகிறார்கள். பலவித வண்ணங்களில் சிறிய, பெரிய, பயணப் பெட்டிகள் கண்ணைக் கவரும் வகையில் இங்குக் காட்சியளிக்கின்றன.

பயணப் பெட்டிகள் மட்டுமா?

விளையாட்டுச் சாமான்கள், பைகள், டைரிகள், காலண்டர்கள், மணிபர்சுகள், பெல்டுகள் முதலியவையும் இங்குத் தயாராகின்றன. பிளாஸ்ட்டிக்கோடு பதனிட்ட தோலையும், ரெக்சைன் எனப்படும் பொருளையும் கொண்டு பலதரப்பட்ட பொருள்கள் இங்கே உருவாகின்றன,

விடாமுயற்சி, தன்னம்பிக்கை, உழைப்பு – இம் மூன்று தன்மைகளும் இருந்தால் வாழ்க்கையில் முன்னேறலாம் என்பதற்கு எடுத்துக்காட்டு இந்தத் தொழிலகம்.


1959-ஆம் ஆண்டில் சென்னை ஜார்ஜ் டவுன் வட்டாரத்தில் சிறிய அளவில் 30 பேர்களோடு தொடங்கப்பெற்ற இத் தொழிலகம், படிப்படியாக வளர்ந்து இன்று 135-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் பெரிய தொழிற்கூடமாக விளங்கி வருகிறது. சென்னைக் காசி செட்டித் தெருவிலுள்ள தொழிற்கூடமே இன்று தலைமை அலுவலகமாக இயங்கி வருகிறது. அன்று விதைத்த விதை செடியாகி இன்று மரமாக வளர்ந்து கிளைவிட்டிருக்கிறது. ஆம். பெங்களூர், நெல்லூர், கள்ளிக்கோட்டை, எர்ணாகுளம், திருச்சி ஆகிய ஊர்களில் இதன் கிளைகள் பரவியிருக்கின்றன.

பயணம் என்னும்போது பெட்

## பிளாஸ்ட்டிக் தரும் பெரும் பயன்!

கண்ணைக் கவரும் வண்ணங்களில் கண்ணாடியைப்போல ஒளிபுகுந் தன்மையுள்ள பிளாஸ்ட்டிக் பொருள்களை நாம் உபயோகிக்கிறோம். இரசாயனப் பொருள்களால் பாதிக்கப்படாத பிளாஸ்டிக்குகள் பரிசோதனைச் சாலையில் பல பொருள்கள் செய்யப் பயன்படுகின்றன. பிளாஸ்டிக் மின் கடத்தாப் பொருளாதலால் மின்சார வேலையில் காப்புறையிடவும் இது பயன்படுகிறது. சில பிளாஸ்டிக்குகள் இரும்பு எஃகு போல் உறுதியானவை. இவை எந்திரங்களில் பல்லிணை (Gears) தயாரிக்கப் பயன்படுகிறது. அலுமினியத்தைப்போல் இலேசான வகை பிளாஸ்ட்டிக்கோ ஆகாய விமானத்தின் சில பகுதிகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

இவை மட்டுமா? துணியை நீர் புகாததாகவோ, காற்று புகாததாகவோ செய்ய இது பயன்படுகிறது. தகர டப்பிகளில் அரிமானம் ஏற்படாமல் பாதுகாக்க அதன்மேல் பிளாஸ்டிக் பூசுகிறார்கள். பல வகை வர்ணங்கள், வார்னிஷ் எண்ணெய் முதலியன பிளாஸ்ட்டிக்குகளானவை. மோட்டார் படகு ஆகியவற்றின் உறுப்புக்கள், தனிவகைக் குழாய்கள், பிலிம், பல வகையான புருசுகள், பட்டுப் போலவே தோன்றும் செயற்கைப்பட்டு இழை முதலியன தயாரிக்கவும் பிளாஸ்ட்டிக் பயன்படுகிறது! பித்தான், மணிகள் (Beads) சீப்பு, போலித்தந்தம், சீட்டாடப் பயன்படும் சீட்டு, பணப்பை, மூக்குக் கண்ணாடிச் சட்டகம் (Frame), இசைக் கருவிகள், பேனா, பென்சில்கள், விமானத்தின் செலுத்திகள், வானொலிப் பெட்டி, கடிகாரக்கூடு, டெலிபோன் உறுப்புக்கள், விளையாட்டுச் சாமான்கள் இப்படி எத்தனையோ வகையான பொருள்களைத் தயாரிக்கப் பிளாஸ்ட்டிக் பெரிதும் உதவுகிறது..





டியும், பையும் நம் நினைவுக்கு வரும். கச்சிதமான அழகான பெட்டிகள், கைப்பைகள் அன்றாடம் தேவைப்படும் பொருளாக விளங்குவதால், இவை டிப்டாப்பில் பெருமளவில் தயாரிக்கப்படுகின்றன.

இத்தொழிற்கூடக் காட்சி அறைகளில் நாள்தோறும் மக்கள் வந்த வண்ணமுள்ளனர். ஆடவர், பெண்டிர், குழந்தைகள் இப்படிப் பலர் தமக்குத் தேவையான பொருள்களை வாங்கிச் செல்கின்றனர். இப்போது பள்ளிகளெல்லாம் திறந்துவிட்டனவல்லவா? புத்தகங்கள் வைத்துக் கொள்ளும் பிளாஸ்ட்டிக் பெட்டிகள், பைகள் ஆகியவற்றின் விற்பனைக்குக் கேட்க வேண்டுமா என்ன?

பிளாஸ்ட்டிக்காலான பொருள்களை மக்கள் அதிகம் விரும்பி வாங்குவதேன்?

பிளாஸ்ட்டிக் சாமான்கள் இதர பொருட்களைக் காட்டிலும் விலை மலிவு. கனம் குறைவு. தூக்கிச் செல்லவும் எளிதாயிருக்கிறது. தண்ணீர் பட்டாலும் அவை ஒன்றும் ஆவதில்லை. பைகள், பெட்டிகள், சாமான்கள் முதலியன நீடித்து உழைக்கின்றன.

இங்குத் தயாராகும் பொருள்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்களிலும் பெருமளவில் விற்பனையாகின்றன. புதிய புதிய 'டிசைன்'களில் சிறிய பெரிய பைகளும் குறிப்பாகப் பெண்கள் வைத்துக் கொள்ளும் கைப்பைகளும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. புதிய டிசைன்களில் பொருள்களை உருவாக்கும் திறமை மிக்க தொழிலாளர்கள் இங்குப் பணியாற்றுகின்றனர். சில சமயங்களில் மேலை நாடுகளிலிருந்தும் இது சம்பந்தப்பட்ட 'கேட்லாக்'குகள் தருவிக்கப்படுகின்றன.

ஒரு வாரத்தில் சுமார் **1500** சிறிய, பெரிய பயணப் பெட்டிகள் இங்குத் தயாராகின்றன. பயணப் பெட்டியின் மிகக் குறைந்த விலை ரூ. **18**. அதிக விலை ரூ. **150**. ஆர்டர் கொடுத்தால் ராட்சதப் பெட்டிகளைக்கூடத் தயாரிக்க இங்கு நவீன இயந்திர வசதிகள் உள்ளன. விசேடத் தையல் இயந்திரங்கள், பிளாஸ்ட்டிக் தாள்களை இணைக்கும் வெல்டிங் இயந்திரம் போன்றவை இங்கு வேலைகளை வேகமாக்கிட உதவுகின்றன.

மரப்பலகைகளை (பிளைவுட்) ஒருமுனையில் பார்க்கிறோம். மறுமுனையில் அழகான பெட்டிகள் உருவாக்கப்பட்டு வெளிவருவதையும் பார்க்கிறோம். சில நிமிடங்களில் இவை உருவாக்கப்பட்டு விடுகின்றன. இங்கே பணியாற்றுபவர்கள் பம்பரம்போல் சுறுசுறுப்பாக வேலையைக் கவனிப்பதுதான் இதற்குக் காரணம் என்று கூறலாம்.

சிக்கனம், உழைப்பு, தரம் இம்மூன்றையும் குறிக்கோளாகக் கொண்டு பொருள்களைத் தயாரிக்கும் 'டிப்டாப்' தொழிற்கூடத்தினர், வருங்காலத்தில் புதுமையான பொருள்களை உலகுக்கு அறிமுகப்படுத்துவார்கள் என்பதில் ஐயமேதும் இல்லை!


—பி.வி.ஜி.



# வீட்டுக்கொரு தோட்டம் வேண்டும் கட்டாயம்!

ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியின்படி வயது வந்த ஒவ்வொருவரும் நாள்தோறும் 284 கிராம் (10 அவுன்சு) காய்கறிகளை உட்கொள்ள வேண்டும் என்றும், அதில் 114 கிராம் (4 அவுன்சு) இலை (கீரை) வகைக் காய்கறிகளாகவும் (Leafy vegetables), 85 கிராம் (3 அவுன்சு) கிழங்கு மற்றும் வேர் வகைக் காய்கறிகளாகவும் (Tuber and fruit vegetables) விதை 85 கிராம் (3 அவுன்சு) மற்றும் பழவகைக் காய்கறிகளாகவும் (Seed and fruit vegetables) என்றும் அமைந்திருக்க வேண்டும் என்றும் ஊட்டச் சத்துணவு வல்லுநர்கள் (Nutrition Experts) பரிந்துரைத்துள்ளார்கள்.





ஆனால், '' நாம் ஒவ்வொருவரும் நாள்தோறும் இந்த அளவில் காய்களை உண்ணுகிறோமா?'' என்றால், '' இல்லை '' என்றே கூற வேண்டியுள்ளது. பொருள் வசதி படைத்தவர்களும் கூட மேற்கூறிய அளவில் காய்கறிகளை உண்பதில்லை. இதற்கு முக்கியக் காரணங்கள் மூன்று ; அவை :

1. காய்களில் உள்ள ஊட்டச் சத்துணவை உணராமை.

2. காய்கறிகளின் உற்பத்திக் குறைவினால் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை.

3. அதிக விலை.

எனவே, முதலில் காய்கறிகளில் உள்ள ஊட்டச் சத்தினை எல்லாருக்கும் உணர்த்த வேண்டியுள்ளது. அடுத்து, காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கிக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

இவ்விரு பணிகளையும் செவ்வனே செய்தால்தான் சமுதாயத்தின் அடித்தளத்தில்உள்ள ஏழை, எளிய, சாமான்ய, பாமர, பாட்டாளி, தொழிலாளி மக்கள் முதல் சமுதாயத்தின் மேல் மட்டத்தில் உள்ளவர்கள் வரை எல்லாரும் ஊட்டச் சத்துணவு வல்லுநர்கள் பரிந்துரைக்கும் அளவில் காய்கறிகளை அன்றாடம் உண்ண முடியும்!

**காய்கறிகளை ஏன் உண்ணவேண்டும் ?**

1. காய்கறிகள் புரதச் சத்து ( Protein ), மாவுப் பொருள்கள் (Carbohydrates), தாது உப்புக்கள் (Mineral Salts), உயிர்ச் சத்துக்கள் ( Vitamins ) ஆகிய சத்துக்களை நமக்குக் கொடுக்கின்றன.

2. உணவில் சுவை ஏற்படுத்துகின்றன.

3. நமக்குத் தேவையான எல்லாச் சக்திகளையும் அளித்து உடல் நலத்தைப் பாதுகாக்கின்றன.

4. நம் உடலுறுப்புகள் வலுவடையவும், நாம் ஊக்கத்துடன் பணிகளில் ஈடுபடவும் உதவுகின்றன.

5. நமக்கு வலிவை மட்டுமல்ல, வனப்பையும் தருகின்றன!

எனவே, நாம் ஒவ்வொருவரும் நம் உணவில் காய்கறிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

நாம் அரிசி உணவை மட்டுமே உட்கொள்பவர்களாக இருந்தால், நாள்தோறும் நம் உடலுக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்தை (கால்சியம்) அரிசி உணவு கொடுப்பதில்லை. ஆனால் இலை வகைக் காய்கறிகள் (Leafy vegetables) நமக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்தைப் பெற உதவுகின்றன.

இலை வகைக் காய்கறிகளான தண்டுக் கீரை, அகத்திக் கீரை, முட்டைக்கோஸ், முருங்கை இலை, ' ஸ்பைனாஸ் ', புதினா போன்றவைகள் சிறந்த பாதுகாப்பு உணவாகும் ( prot:ctive food ). ஏனென்றால், அவைகளில் சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து, ஆகியவை அடங்கிய தாது உப்புக்களும், வைட்டமின்களும் நிறைந்துள்ளன.

விதை வகைக் காய்கறிகளான ( Seed vegetables ) 'பீன்ஸ் ' பட்டாணி, இளம் மக்காச் சோள விதை போன்றவைகள் வயிறு நிரம்புவதற்கான திடப் பொருள்களையும் (Roughage), புரதச் சத்து, வைட்டமின் ' சி ' ஆகியவைகளையும் கொடுக்கின்றன.

பழவகைக் காய்கறிகளான ( Fruit Vegetables ), தக்காளி, பலாக்காய், வாழைக்காய், முருங்கைக்காய், கத்தரி, வெண்டை, பூசணி, பறங்கி போன்றவை சிறந்த சத்துக்களைக் கொண்டுள்ளன. தக்காளியில் வைட்டமின் '' சி ''யும், முருங்கைக்காயில் சுண்ணாம்புச் சத்தும், வைட்டமின் '' சி ''யும் நிறைய உள்ளன. பறங்கிக்காயில் வைட்டமின் '' ஏ '' பெருமளவில் உள்ளன.

கிழங்கு மற்றும் வேர் வகைக் காய்கறிகளான (Tuber and (root vegetables) உருளைக் கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, கருணைக் கிழங்கு, சேனைக் கிழங்கு, கேரட், பீட்ரூட், முள்ளங்கி, ' டர்னிப் ' போன்றவைகள் தானியங்களைப் போலவே மாவுப் பொருள்களையும், வைட்டமின் '' சி ''யையும் வழங்குகின்றன. சர்க்கரை வள்ளிக் கிழங்கும், கேரட்டும் வைட்டமின் ''ஏ ''யைக் கொடுக்கின்றன. இவ்வகைக் காய்கறிகள் உடலுக்குத் தேவையான சக்தியைக் கொடுக்கும் மாவுப் பொருள்களைக் கொடுப்பதால் நமது உணவில் தானியங்களுக்குப் பதிலாக இவைகளைப் பயன்படுத்தி, தானியங்களில் ஒரு பகுதியைக் குறைத்து மீதப் படுத்தலாம். இவ்வகைக் காய்கறிகளே குறைந்த செலவில் சக்தியைத் தரும் உணவுகளாகும்.

சில முக்கியக் காய்கறிகளில் உள்ள ஊட்டச் சத்துக்களை அட்டவணை 1-இல் இருந்து அறிந்து கொள்ளலாம்.

## அட்டவணை — 1

### ஒரு அவுன்சு (28 கிராம்) காய்களில் உள்ள ஊட்டச் சத்துக்கள்

| வரிசை எண் (1) | காய்களின் பெயர் (2) | புரதச் சத்து (கிராம்) (3) | கொழுப்பு (கிராம்) (4) | மாவுப்பொருள் (கிராம்) (5) | சுண்ணாம்பு (மில்லிகிராம்) (6) | பாஸ்பரஸ் (மில்லிகிராம்) (7) | இரும்பு (மில்லிகிராம்) (8) | உயிர்ச்சத்து-ஏ (இன்டர் நேஷனல் யூனிட்) (9) | உயிர்ச்சத்து-பி (மில்லிகிராம்) (10) | நிக்கோட்டினிக் அமிலம் (மில்லிகிராம்) (11) | ரிபோபிளேவின் (மில்லி கிராம்) (12) | உயிர்ச்சத்து-சி (மில்லிகிராம்) (13) | கலோரி (14) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | முட்டைக்கோசு | 0·5 | 0·1 | 1·8 | 8 | 14 | 0·2 | 568 | 14 | 0·1 | 9 | 35 | 9 |
| 2 | காலிபிளவர் | 1·0 | 0·1 | 1·5 | 8 | 17 | 0·4 | 122¼ | 31 | 0·3 | 23 | 19 | 11 |
| 3 | காரட் | 0·3 | 0·1 | 3·0 | 23 | 8 | 0·4 | 568 | 17 | 0·1 | 6 | 1 | 13 |
| 4 | பீட்ரூட் | 0·5 | 0·1 | 3·9 | 57 | 17 | 0·3 | சிறு அளவு. | 20 | 0·1 | 26 | 25 | 18 |
| 5 | முள்ளங்கி | 0·2 | 0·1 | 1·2 | 14 | 6 | 0·4 | 1 | 17 | — | — | 4 | 6 |
| 6 | உருளைக் கிழங்கு | 0·5 | 0·1 | 6·5 | 3 | 9 | 0·2 | சிறு அளவு. | 6 | 0·3 | 3 | 1 | 28 |
| 7 | மரவள்ளிக் கிழங்கு | 0·2 | 0·1 | 10·9 | 10 | 10 | 0·2 | — | 4 | 0·1 | 28 | — | 43 |
| 8 | சர்க்கரைவள்ளிக் கிழங்கு | 0·3 | 0·1 | 8·8 | 6 | 10 | 0·2 | 3 | — | 0·2 | 11 | 7 | 37 |
| 9 | கத்தரி | 0·4 | 0·1 | 1·8 | 60 | 17 | 0·4 | 1 | 4 | 0·2 | 26 | 6 | 10 |
| 10 | வெண்டை | 0·6 | 0·1 | 2·2 | 25 | 23 | 0·4 | 16 | 6 | 0·2 | — | 4 | 12 |
| 11 | தக்காளிக்காய் | 0·5 | 0·1 | 1·3 | 6 | 11 | 0·7 | 91 | 7 | 0·1 | 17 | 9 | 8 |
| 12 | தக்காளிப்பழம் | 0·3 | 0·1 | 1·1 | 3 | 6 | 0·1 | 91 | 11 | 0·1 | 17 | 7 | 6 |
| 13 | பெல்லாரி வெங்காயம் | 0·3 | 0·1 | 3·3 | 50 | 14 | 0·2 | — | 11 | 0·1 | 3 | 3 | 14 |
| 14 | நாட்டு வெங்காயம் | 0·5 | 0·1 | 3·7 | 11 | 39 | 0·3 | 7 | 22 | 0·1 | — | — | 17 |
| 15 | புடல் | 0·1 | 0·1 | 1·2 | 14 | 6 | 0·4 | 45 | — | 0·1 | 17 | சிறு அளவு | 6 |
| 16 | பாகல் | 0·5 | 0·1 | 1·2 | 6 | 20 | 0·6 | 60 | 7 | 0·1 | 26 | 25 | 7 |
| 17 | பறங்கி | 0·4 | 0·1 | 1·5 | 3 | 8 | 0·2 | 24 | 6 | 0·1 | 11 | 1 | 8 |
| 18 | வெள்ளரி | 1·0 | 0·1 | 0·8 | 3 | 8 | 0·4 | சிறு அளவு. | 8 | 0·1 | 1 | 2 | 6 |
| 19 | முருங்கைக்காய் | 0·7 | 0·1 | 1·0 | 8 | 30 | 1·5 | 52 | — | 0·1 | — | 34 | 7 |
| 20 | கருணைக் கிழங்கு | 0·4 | 0·1 | 7·5 | 17 | 6 | 0·4 | — | 7 | — | | சிறு அளவு | 32 |
| 21 | பீன்ஸ் | 1·3 | 0·1 | 2·8 | 14 | 17 | 0·5 | — | — | 0·2 | — | 3 | 17 |
| 22 | வாழைக்காய் | 0·4 | 0·1 | 4·2 | 3 | 8 | 0·2 | 14 | 4 | 0·1 | 57 | 7 | 18 |
| 23 | ஸ்பைனஷ் | 0·5 | 0·3 | 1·1 | 17 | 3 | 1·4 | 994 | 20 | 0·1 | 17 | 14 | 9 |
| 24 | புதினா | 0·5 | 0·2 | 2·2 | 56 | 21 | 4·2 | 756 | 14 | 0·1 | — | 3 | 16 |
| 25 | தண்டுக்கீரை | 1·4 | 0·1 | 1·6 | 14 | 3 | 0·6 | 700 முதல் 3,080 | 8 | 0·3 | — | 48 | 17 |
| 26 | கறிவேப்பிலை | 1·7 | 0·3 | 4·4 | 224 | 17 | 0·8 | 3,528 | 22 | 0·6 | — | 1 | 27 |



காய்கறிகளில் ஊட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளதால், நாம் ஒவ்வொருவரும் இலை, விதை பழம், மற்றும் கிழங்கு வகைக் காய்கறிகளை நமது உணவில் நாள்தோறும் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

**வீட்டுத் தோட்டத்தின் இன்றியமையாமை!**

ஊட்டச் சத்துணவு ஆராய்ச்சியாளர்களின் பரிந்துரைப்படி தமிழ் நாட்டின் மக்களுக்கு இந்த ஆண்டில் (1973–74), ஏறத்தாழ, 40 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள் தேவைப்படுகின்றன. ஆனால் தற்பொழுது தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சராசரியாக 10 அல்லது 12 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகளே உற்பத்தியாகி வருகின்றன. எனவே, நமக்குத் தேவைப்படும் காய்கறிகளில் நான்கில் ஒரு பகுதியையே நாம் தற்பொழுது உண்ண முடிகிறது.

ஊட்டமளிக்கும் காய்கறிகள் தேவையான அளவுக்கு நமக்குக் கிடைக்காததால், நம்மில் பலர் தேவையான அளவுக்கும் அதிகமான தானிய உணவை உண்ணுகின்றோம். இதனால் ஊட்ட உணவுப் பற்றாக்குறை ( under nutrition) ஏற்படுவதுடன், தானியப் பற்றாக்குறையும் ஏற்படுகிறது. ஊட்ட உணவு பற்றாக்குறையால் உடல் நலம் கெடும் ; கண் பார்வை மங்கும் : உடல் வலிமை குன்றும் ; உழைக்கும் ஆற்றல் குறையும் ; உடல் எளிதில் கொடிய நோய்களால் தாக்கப்படும்.

இந்தியாவில் 100-க்கு 50 பேர்கள் ஊட்ட உணவுப் பற்றாக்குறை Und nutrition) அல்லது ஊட்டக் குறைவினால் (Mal nutriton) பாதிக்கப்படுகிறார்கள் என்று உலக நல்வாழ்வு நிறுவனம் (World Health Organisation) கருத்துத் தெரிவித்துள்ளது. இந்தியாவில் தற்பொழுது நிலவிவரும் ஊட்ட உணவுக் குறைகளைப் போக்கிடக் காய்கறி உற்பத்தியைப் பெருக்கி, நம் உணவில் காய்கறிகளைத் தேவையான அளவுசேர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, காய்கறி உற்பத்தியைப் பெருக்கிட, நாம் ஒவ்வொருவரும் வீட்டுத் தோட்டம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

**வீட்டுத் தோட்டத்தின் பயன்கள்.**

" பதினாறும் பெற்று, பெருவாழ்வு வாழு " என்பது போல், வீட்டுத் தோட்டம் அமைத்தால் கீழ்க்கண்ட பதினாறு பயன்கள் கிடைக்கும்.

1. புத்தம் புதிய காய்கறிகளைப் (Fresh vegetables பெறலாம்.

2. விருப்பமான காய்கறிகளைப் (Choice Vegetables) பெறலாம்.

3. பலவகைக் காய்களையும் பசுமையாகப் (Green Vegetables) பெறலாம்.

4. வேண்டிய போது காய்கறிகளைப் பறித்துக்கொள்ளலாம்.

5. சுவை குன்றாத காய்களைப் (Tasteful Vegetables) பெறலாம்.

6. உயிர்ச் சத்துக்கள் மிகுந்த காய்களைப் (Vitamin-rich Vegetables) பெறலாம்.

7. குறைந்த செலவில் காய்களை விளைவிக்கலாம்.

8. சமயலறைக் கழிவு நீரையும் உபயோகப்படுத்த முடியும்.

9. வீட்டுக்கு அழகு சேர்க்கலாம்.

10. பொழுது போக்காகவும் அமையும்.

11. உடற் பயிற்சியாகவும் இருக்கும்.

12. கண்ணுக்குக் குளிர்ச்சி தரும்.

13. மனத்திற்கு அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கச் செய்யும்.

14. நல்வழியில் நாட்டம் ஏற்படுத்தும்.

15. சுவையான உணவு கிடைக்கச் செய்யும்.

16. நலமான வாழ்வு தரும்.

**வீட்டுத் தோட்டம் அமைப்பது எப்படி?**

1. குடும்பத்தினரின் விருப்பத்திற் கேற்றவாறும்,

2. கிடைக்கும் இடத்தின் அளவுக்குத் தகுந்தாற்போலவும்,

3. நிலத்திற்கும், பருவத்திற்கும் ஒத்ததாகவும்,

4. ஆண்டு முழுவதும் தொடர்ந்து காய்கள் கிடைக்கும் வகையிலும்,

5. வரப்பின் பக்கம், வாய்க்கால் ஓரங்கள், மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், வேலிகள் அல்லது உயிர்வேலிகள் முதலிய இடங்களை நன்கு பயன்படுத்தும் முறையிலும்,

6. குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெறும் வகையிலும்,

வீட்டுத் தோட்டத்தைத் திட்டமிட்டு அமைக்க வேண்டும். ஆனால், சிலர் வீட்டுத் தோட்டம் அமைப்பதில் வெகு ஆர்வம் காட்டி ஈடுபட்டாலும், முதல் முயற்சியிலேயே தோல்வி கண்டு விடுகின்றனர். இதற்குக் காரணம் வீட்டுத் தோட்டம் அமைப்பதில் உள்ள நுட்பங்களை உணராமையே ! எனவே, வீட்டுத் தோட்டம் அமைப்பதில் உள்ள நுட்பங்களை ஒவ்வொன்றாகக் கீழே விளக்கியுள்ளோம்.

ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு வேண்டிய காய்கறிகளை உற்பத்தி செய்ய 5 சென்ட் நிலம் வேண்டும்.

அந்த 5 சென்ட் நிலமும், குறைந்தது நாள்தோறும் 6 மணி நேரமாவது சூரிய வெளிச்சம் படக்கூடிய திறந்த வெளியாக இருக்க வேண்டும்.

ஐந்து சென்ட் பரப்பு இல்லை எனில், 100 சதுர அடியில் கூட வீட்டுத் தோட்டம்அமைக்கலாம்.

**மண்**

மணலும், களிமண்ணும் சரி யான விகிதத்தில் அடங்கிய இரு மண்பாடு நிலமே காய்கறி பயிரிட மிகவும் சிறந்தது.

மணற்பாங்கான மண்ணாக இருந்தால், மாட்டெரு, கலவை எரு(கம்போஸ்டு) போன்ற கரிம எருக்களைப் போட்டு வளமான மண்ணாக்கிவிடலாம்.


களி மண்ணாக இருந்தால், மணல், மக்கிய தழை, கரிம எருக்கள் ஆகியவைகளை இட்டும் வடிகால் வசதிகளை அமைத்தும் காய்கறி பயிரிடுவதற்கு ஏற்ற மண்ணாகச் செய்துவிடலாம்.

**நிலம் தயாரித்தல்**

ஐந்து சென்ட் நிலத்தையும், கீழே கொடுக்கக்கப்பட்டுள்ள மாதிரி வீட்டுக் கறிகாய்த் தோட்ட வரை படத்தில் குறிப் பிட்டுள்ளபடி பாத்திகள், நடைபாதை, மற்றும் மைய நடைபாதை, நிரந்தரப் பயிர் களுக்கான பகுதி என்று பிரித்துக் கொள்ள வேண்டும்.

## மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்டம்

### 5 சென்ட் பரப்பு (50 அடி X 44 அடி)




கம்போஸ்டு குழிகள். வேலி அல்லது தட்டி

தனிக் குச்சிகள் அல்லது கம்புகளில் இணைத்துக்கட்டப்பட்ட தக்காளிச் செடிகள்.

....... அரக் கீரை, புதினா, சிறுக் கீரை, பருப்புக்கீரை. முள்ளங்கி, வெங்காயம் முதலியன...

நிலத்தின் பிற்பகுதியை நிரந் தரப் பயிர்களுக்காக ஒதுக்குதல் வேண்டும்.

படத்தில் குறிப்பிட்டுள்ளது போல், நான்கு கம்போஸ்டு குழி களையும் தோண்டுங்கள்.

பாத்திகள் ஒவ்வொன்றும் 20 அடி நீளமும், 10 அடி அகல மும் உள்ளதாக இருக்க வேண் டும்.

அந்தப் பாத்திகளின் மேல் மண்ணை 1½ அடி ஆழத்திற்குத் தோண்டி எடுத்து, அம்மண்ணி லுள்ள கற்களையும், கண்ணாடித் துண்டுகளையும், புல்பூண்டுகளையும் அப்புறப்படுத்திவிட்டு, அந்த மண்ணை ஒரு புறமாக வைக்க வேண்டும்.

ஒன்றரை அடிக்குக் கீழுள்ள மண்ணை மேலும் 1 அடி ஆழத்திற் குத் தோண்டி, மண் கட்டிகளை உடைத்து, இரு மண்பாடு நிலம் போல ஆக்க வேண்டும்.

அதில் 500 சதுர அடிக்கு ½டன் அல்லது ஒரு வண்டி தொழு எரு அல்லது கலவை எருவை (கம் போஸ்டு) அடியுரமாக இட்டு மண்ணில் நன்கு கலக்குமாறு கொத்திவிட வேண்டும்.

எருவிட்ட மண்ணின் மேல், முதலில் எடுத்த 1½ அடி மண் ணைப் போட்டுச் சமப்படுத்த வேண்டும்.

விதைப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னதாக " செரசான் " என்ற பூஞ்சாள மருந்தை மண் ணில் கலந்து பயிர்களை நோய்கள் தாக்கா வண்ணம் தடுக்க வேண் டும்.

விதைப்பதற்கு 3 நாட்கள் முன்னதாக டி. டி. டீ. மருந்தை மண்ணில் கலந்து எறும்புகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

**பட்டம்**

காய்கறி சாகுபடி செய்ய (1) ஜூலை-ஆகஸ்ட் (ஆடி), (2) ஜனவரி-பிப்ரவரி (தை) ஆகிய இரண்டும் முக்கிய விதைப்புப் பட்டங்களாகும்.

வீட்டிற்கு வேண்டிய காய் கறிகளை ஆண்டு முழுவதும் தொடர்ந்து பெற அட்டவணை 2-ல் கண்டபடி பயிரிடுவதே சிறந்ததாகும்.

அட்டவணை-2

| பாத்தி எண் | காய்கறிகளின் பெயர் | பயிர் செய்வதற்கான பட்டங்கள் |
|---|---|---|
| பாத்தி 1 | கத்தரி, முள்ளங்கி | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | முட்டைகோஸ் .. | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | வெண்டை .. | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 2 .. | கொத்தவரை .. | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | பீட்ரூட் .. | அக்டோபர் முதல் டிசம்பர் வரை. |
| | தண்டுக்கீரை .. | ஜனவரி முதல் பிப்ரவரி வரை. |
| | தட்டைப்பயறு .. | மார்ச்சு முதல் மே வரை |
| பாத்தி 3 .. | தட்டைப்பயறு .. | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | கத்தரி, டர்னிப் .. | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | கொத்தவரை .. | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 4 .. | வெண்டை .. | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | தட்டைப்பயறு .. | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | முள்ளங்கி .. | பிப்ரவரி முதல் மார்ச்சு வரை. |
| | தண்டுக்கீரை .. | ஏப்ரல் முதல் மே வரை. |
| பாத்தி 5 .. | மிளகாய், முள்ளங்கி. | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | வெண்டை .. | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | கத்தரி, வெங்காயம். | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 6 .. | பெல்லாரி வெங்காயம். | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | மிளகாய் .. | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | தண்டுக்கீரை .. | பிப்ரவரி முதல் மார்ச்சு வரை. |
| | முள்ளங்கி .. | ஏப்ரல் முதல் மே வரை. |

கீரை வகைகள், முள்ளங்கி, கத்தரி, வெண்டை, தக்காளி, கொத்தவரை ஆகியவைகளை ஆண்டு முழுவதும் பயிரிடலாம்.

அவரை, பூசனி, பாகல், புடலை ஆகியவைகளை சூலை-ஆகஸ்ட் (ஆடி), டிசம்பர்-சனவரி (மார்கழி) ஆகிய பட்டங்களில் விதைக்கலாம்.

முட்டைக்கோஸ், 'காலிபிளவர்', 'நூல்கோல்', 'பீட்ரூட்', 'கேரட்' ஆகியவைகளை அக்டோபர் முதல் டிசம்பர் வரை விதைக்கலாம்.

**விதைப்பு**

கலப்பில்லாத திடமான, நல்ல முளைப்புத் திறன் உடைய விதைகளை விதைப்பதே சிறந்தது. விதைப்பதற்கு முன் விதைகளை 'அக்ரசான்' மருந்தில் கலந்து விதைக்க வேண்டும். கத்தரி, மிளகாய், தக்காளி, ஆகியவைகளை மேடான பாத்திகள் (Raised beds) அமைத்து நாற்று விடுதலே சிறந்தது.

நாற்றுவிட மரப்பெட்டிகளையும் உபயோகிக்கலாம்.

கீரை போன்ற சிறிய விதைகளோடு எட்டுப் பாகம் மணலைக் கலந்து விதைத்தல் நல்லது.

நாற்றங்காலில் விதைகளைப் பரவலாக விதைப்பதே நல்லது.

வரிசைகளில் நாற்று விடுவதும் நல்லது.

விதைத்த விதைகள் முளைத்து வரும்போது, அவைகளைப் பறவைகள் தின்றுவிடாமல் தடுக்க, விதைப் பாத்திகளின் மேல் வைக்கோலைப் பரப்பி வைக்கலாம்.

விதைப் பாத்திகளுக்குப் பூவாளியால் தண்ணீர் தெளிப்பதே நல்லது.

ஒரு மாதத்திற்குப் பின் நாற்றுகளைப் பறித்து நடவு செய்தல் வேண்டும்.

நாற்றுகளைப் பறித்து நடுவதற்கு முன் நாற்றங்காலில் தாமிரப் பூசணக்கொல்லி மருந்து, என்ட்ரின் அல்லது பாரத்தியான் மருந்து ஆகியவைகளைத் தண்ணீரில் கலந்து தெளித்தல் நல்லது.

நாற்றுகளை வரிசை வரிசையாக நடுவதே சிறந்தது.

கிழங்கு வகைச் செடிகளுக்கு வரிசையில் செடிக்குச் செடி 6" இடைவெளியும், வெண்டை, கத்தரி, தக்காளி ஆகியவைகளுக்கு $1\frac{1}{2}$ முதல் 2 அடி இடைவெளியும் விட்டு நடுதல் சிறந்தது.

**உரமிடுதல்**

பொதுவாக எல்லாக் காய்கறிச் செடிகளுக்கும் (பூசனி ரகங்களைத் தவிர) ஒரு சதுர மீட்டருக்கு 50 கிராம் வீதம் இரசாயன உரங்கள் இடவேண்டும். அதில்,

அமோனியம் சல்பேட் அல்லது கால்சியம் அமோனியம் நைட்ரேட்—1 பங்கும், சூப்பர் பாஸ்பேட்—2 பங்கும், மூரியேட் ஆப் பொட்டாஷ்—1 பங்கும் கலந்திருக்க வேண்டும். மேலுரமாக, இரசாயன உரங்களை இட ஊடுழவு செய்யும் பொழுது அல்லது களையெடுக்கும் பொழுது இடுவதே நல்லது. இரசாயன உரங்களைச் செடிகளினின்று 10 செ. மீ. தூரம் தள்ளி வைத்து, அவைகளை மண்ணுடன் நன்ருகக் கலக்குமாறு செய்யவேண்டும்.

இரசாயன உரமிட்டவுடன் தண்ணீர் பாய்ச்சுதல் அவசியம்.

பூசனி, புடலை, பீர்க்கு, பாகல், சுரை ஆகியவைகளுக்கு ஒரு குழிக்கு 25 கிலோ தொழு எரு அல்லது கலவை எருவையும், அட்டவணை 4-ல் குறிப்பிட்டுள்ள உரங்களையும் விதைகளை நடுவதற்கு முன்பு இட வேண்டும். பூக்கும் பொழுது ஒரு குழிக்கு 12 கிலோ தொழு எரு இடுவது சிறந்தது.

சிறப்பாக நல்ல மகசூல் எடுப்பதற்குப் பின்னல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளது போல் குறிப்பிட்ட காய்கறிப் பயிருக்குக் குறிப்பிட்ட இரசாயன உரங்களைக் குறிப்பிட்ட அளவில் இடவேண்டும்.

அடி உரத்தை விதைப்பதற்கு அல்லது நாற்றுகளை நடுவதற்கு ஒரு வாரம் முன்பாக இட்டு விட வேண்டும்.

**களை எடுத்தலும் மண் அணைத்தலும்**


மண்ணில் தகுந்த காற்றோட்டம் ஏற்பட்டுச் செடிகள் நன்கு வளரக் களை எடுத்தல் மிகவும் அவசியம். களைகள் தோன்றிய உடனேயே அவைகளை அகற்றி விடவேண்டும்.

களையெடுக்கும் போது செடிகளின் வேர்களுக்குக் கெடுதி ஏற்படாமல் களையெடுக்க வேண்டும்.

கிழங்கு வகைப் பயிர்களுக்கு மண் அணைக்க வேண்டும்.

**நீர்ப்பாசனம்**

விதைகள் முளைக்கும் போது பூவாளியால் தண்ணீர் தெளிப்பதே நல்லது.



இளஞ்செடிகளுக்கு வாரத்திற்கு 2 அல்லது 3 முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

குறைந்த ஈரத்தன்மை, அதிக ஈரத்தன்மை ஆகிய இரு நிலைமைகளுமே செடிகளுக்குக் கெடுதல் விளைவிக்கக்கூடும். எனவே, தண்ணீர் பாய்ச்சுவதற்கு முன்பே, மண்ணில் 5 முதல் 6 சென்டிமீட்டர் ஆழத்தில் உள்ள மண்ணின் நிலைமையை அறிந்து அதற்கேற்பத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

இரசாயன உரமிட்டவுடன் தண்ணீர் பாய்ச்சுவது மிகவும் அவசியம்.

'' கேரட் '' போன்ற வேர்க் காய்கறிப் பயிர்களுக்கு அறுவடைக்கு 15 நாட்கள் முன்னதாகவே தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தி விடுவது நல்லது இவ்வாறு செய்வது கிழங்குகளுக்கு நல்ல சுவையையும், நல்ல நிறத்தையும் கொடுக்கிறது.

**பயிர்ப்பாதுகாப்பு**

விதைகளை விதைப்பதற்கு முன்பாக 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து கலந்து விதைக்க வேண்டும்.

செடிகளில் பூச்சிகளை அல்லது நோய்களைக் கண்டால் உடன் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்குத் தெரிவித்து, அவர்களிடமிருந்து தகுந்த தடுப்பு முறைகளை அறிந்து, அதன்படி செய்யுங்கள்.

பூச்சிகள் வராமல் இருக்க, முன் தடுப்பாக 15 நாட்களுக்கு ஒரு தடவை 'என்ட்ரின்' அல்லது 'பாலிடால்' அல்லது 'ரோகார்' தெளிக்க வேண்டும். அதுபோலவே, நோய்கள் வராமல் இருக்க, முன் தடுப்பாக, மாதமொருமுறை தாமிரப் பூசணக் கொல்லி மருந்து தெளிக்க வேண்டும்.

புடலை, பாகல், பறங்கி, பீர்க்கு போன்ற பூசனி வகைக் காற்கறிச் செடிகளுக்கு டி.டி.டி. (D.D.T.) அல்லது பி.எச்.சி. (B.H.C.) ஆகிய மருந்துகளைத் தூவுதலோ தெளித்தலோ கூடாது.

பூசணி வகைக் காயகறிச் செடிகளைப் பூச்சிகள் தாக்கா வண்ணம் பாதுகாக்க ''வின்டேன்'' தெளிக்க வேண்டும்.

காய்களை அறுவடை செய்வதற்கு 2 வாரத்திற்கு முன்பாகவே மருந்து தெளிப்பதையோ அல்லது மருந்து தூவுதலையோ நிறுத்திட வேண்டும்.

**எல்லா இடங்களையும் பயனுள்ள முறையில் சாகுபடி செய்தல்!**

வீட்டுத் தோட்டத்தின் எந்தப் பகுதியையும் வீணாகப் போடாமல் நன்கு பயன்படுத்தினால் மிகுந்த பலன் பெறலாம். திட்டமிட்டுப் பயிர் செய்தால், ஓர் அங்குல மண்ணைக்கூட வீணாக்காமல் பயன்படுத்தலாம்.

குறிப்பாக குடும்பத் தலைவிகள் வீட்டுத் தோட்டத்தில் ஆர்வம் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது வீட்டுத் தோட்டத்திற்கென ஒதுக்கி எல்லா வேலைகளையும் செய்ய முயன்றால், ஒரு அங்குல இடத்தைக்கூட வீணாக்காமல் பயன்படுத்திக் காய்கறிகள் விளைவை அதிகப்படுத்த முடியும். வீட்டுத் தோட்டத்திலுள்ள நடைபாதைகள், மைய நடைபாதை, வரப்பின் ஓரங்கள், மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், உயிர் வேலிகள், கலவை எருக்குழிகள், நிரந்தரப் பயிர்கள் பகுதி ஆகியவைகளைப் பின்கண்ட முறையில் நன்கு பயன்படுத்தி, மிகுந்த பயன் பெறலாம்.

நடைபாதை :— வீட்டுத் தோட்டத்தைச் சுற்றியுள்ள நடைபாதை, மைய நடைபாதை ஆகியவற்றின் ஓரங்களில் குறுகிய கால வயதுடைய பலவகைக் கீரைகளை வளர்க்க வேண்டும். அவ்வோரங்களில் தண்டுக்கீரை: கொத்துமல்லி, வெந்தயக்கீரை, ஸ்பைனஷ், புதினா ஆகியவைகளைப் பயிரிடுங்கள். நடைபாதையின் ஒவ்வொரு ஓரந்தி

லும் ஒவ்வொரு வகைக் கீரை பயிரிடுங்கள். கீரைகளை வெவ்வேறு பட்டங்களில் மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள்.

**மைய நடைபாதை** :— மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்ட வரை படத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல், மைய நடைபாதையின் இரண்டு ஓரங்களிலும் செடிக்குச் செடி 2 முதல் 4 அடி இடைவெளிவிட்டுத் தக்காளிக் கன்றுகளை நட்டு வளருங்கள். தக்காளிச் செடிகளைத் தனிக்குச்சிகளில் இணைத்துக் கட்டி 4 முதல் 5 அடி உயரம் வரை வளர விடலாம்.

மைய நடைபாதையில் பன்னீர்த் திராட்சை ('' மஸ்காட் ''), '' அனப்-இ-ஷாஹி '' போன்ற திராட்சைகளின் பதியங்களை நடுங்கள். மைய நடைபாதையின் மேல் ஓர் பந்தல் அமைத்து அதன் மேல் திராட்சைக் கொடியைப் படரவிடுங்கள்.

**வரப்பின் ஓரங்கள்** :— இரண்டு முக்கியப் பாத்திகளை நீண்ட வாக்கில் பிரிக்கும் வரப்புகளின் ஓரங்களில் கீரை வகைகள், முள்ளங்கி, வெங்காயம் போன்றவைகளைப் பயிரிடுங்கள்.


**தட்டிகள், வேலிகள்** :—வீட்டுத் தோட்டத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், வேலிகள் அல்லது உயிர் வேலிகளில் பசலை, பாகல், பீர்க்கன், கோவைக்காய், சௌ-சௌ முதலிய கொடி வகைச் செடிகளை வளர்க்க வேண்டும். இவைகளையும் வெவ்வேறு பட்டங்களில் மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள்.

**கலவை எருக்குழிகள்** :—காய்கறிச் செடிகளிலிருந்து விழும் காய்ந்த இலைகள், அறுவடைக்குப் பின் வெட்டப்பட்ட செடிகள், வீட்டில் கிடைக்கும் கழிவுப் பொருட்கள் ஆகியவற்றை அவ்வப்போது கலவை எருக்குழிகளில் (கம்போஸ்ட் குழிகள்) நிரப்பி, மண்ணால் மூடிக் கலவை எரு தயாரிக்கவும்.

கலவை எருக்குழிகளை மூடியுள்ள மேல் மண்ணிலேயே புடல், அவரை போன்ற விதைகளை ஊன்றலாம். அல்லது தொட்டிகளில் விதைகளை ஊன்றிக் கலவை எருக்குழிகளின் மேல் வைக்கலாம்.

கலவை எருக் குழிகளின்மேல் பந்தல் அமையுங்கள். அப்பந்தலின் மேல் புடலை, அவரை போன்ற கொடிகளைப் படர விடுங்கள்.

**நிரந்தரப் பயிர்கள் பகுதி**:— நிரந்தரப் பயிர்களுக்காக, வீட்டுத் தோட்டத்தின் பின் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தில், வாழை, கறிவேப்பிலை, ஜாப்னா, முருங்கை, தவசிக்கீரை அல்லது செக்கூர் மணிஸ் எனப்படும் பல உயிர்ச்சத்துக் கீரை (Multi-Vitamin Greens), மரவள்ளிக் கிழங்கு, **சுண்டைக் காய்,** தென்னை ஆகிய நிரந்தரப் பயன்தரும் செடிகளை வளர்க்க வேண்டும்.



# கோ.1. பப்பாளி

ஒவ்வொரு வீட்டிலும் இப்பகுதியில் ஒன்றிரண்டு பழச் செடிகளையும் வளர்த்தல் நல்லது. ஏனென்றால் பெரும்பாலான பழங்கள் குடற்பகுதிகளை நல்ல நிலையிலும், சுறுசுறுப்பாகவும் வைப்பதற்கு வேண்டிய திடப் பொருட்களைக் ( Roughage ) கொடுத்து உதவுவதுடன் உயிர்ச் **சத்து (வைட்டமின்) '' ஏ '', உயிர்ச்சத்து (வைட்டமின்) '' சி '', தாது உப்புக்கள் ஆகிய வற்றையும்** கொடுக்கின்றன.

மேலும் வயது வந்த ஒவ்வொருவரும் நாள்தோறும் குறைந்தது 85 கிராம் (3 அவுன்சு) பழங்களை உண்ண வேண்டும் என்று ஊட்ட உணவு ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுவதால், நமக்குத் தேவையான பழங்களை வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்து கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் பப்பாளியை நிரந்தரப் பயிர்கள் பகுதியில் வளர்க்கலாம். பப்பாளி ஆண்டு முழுவதும் பழம் கொடுப்பதுடன், நமக்குத் தேவையான வைட்டமின் '' ஏ '' யையும் கொடுக்கிறது.

நமக்குப் பலவகையிலும் பயன்படும் எலுமிச்சையையும், வைட்டமின் 'சி' நிறைந்த 'மேற்கு இந்திய செர்ரி' (West Indian Cherries) போன்றவைகளையும் நிரந்தரப் பயிர்கள் பகுதியில் வளர்க்கலாம்.

நிரந்தரப் பயிர்கள் இடைவெளிகளில் சர்க்கரை வள்ளி, தட்டைப்பயறு, பீன்சு போன்றவைகளைப் பயிரிடலாம்.

வாழையின் நிழலில் ஓரிரண்டு சேனைக் கிழங்குகளையும் நடலாம்.

**வீட்டுத் தோட்டம் அமைக்கப் போதிய இடம் இல்லையானால் என்ன செய்வது?**

**அடுத்த இதழில் காண்க.**

# நினைவுச் சின்னங்கள்

இரா. நாகசாமி

''வானம் பொழியுது'' பூமி விளையுது; மன்னவன் காணிக்கு ஏதுகிஸ்தி?'' என்றுவீர முழக்கம் செய்து, அந்நியரான ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்து, விடுதலை வேள்வித் தீயில் தன் ஆவியையே விட்ட பாஞ்சாலங் குறிச்சிக் குரிசில் வீரபாண்டிய கட்டபொம்மனைத் தமிழ் மக்கள் நன்கு அறிவர். அம்மாவீரன் வாழ்ந்த இடத்தை ஆங்கிலேயர் தகர்த்துத் தரைமட்டமாக்கினர். சுமார் 35 ஏக்கர் பரப்பளவுக்கு மேல் இருந்த கோட்டைப் பகுதிகள் மண் மேடாக இருந்து வந்தது. அண்மையில் கட்டபொம்மனுடைய குலதெய்வம் ஜக்கம்மா தேவிக்குக் கோட்டை மேட்டின் மத்தியில் ஒரு கோயில் எடுக்கப் பட்டது. கோட்டைமேடு முழுவதும் புதர்கள் மண்டிக்கிடந்தன. இங்குமங்குமாக ஒருசில இடங்களில் சுவர்களின் அடிப்பகுதிகள் காணப்பட்டன. புறத்தே வாழும் மக்களால் கோட்டைப் பகுதிகளில் இருந்து மண் வெட்டி எடுக்கப் பட்டுள்ளது. கோட்டை மேட்டை அகழ்ந்து அரண்மனைப் பகுதிகளை வெளிக் கொணர அரசும் ஆணையிட்டது.

கோட்டை மேட்டிலிருந்த புதர்கள் அகற்றப்பட்டன. ஜக்கம்மா கோயிலுக்கு அருகில் தென்புறத்தில் அகழ் ஆய்வு தொடங்கப்பட்டது. அந்த இடத்திலேயே அரண்மனையின் அடிப்பகுதிகள் கண்டுபிடிக்கப் பட்டன. நாளோலக்க மாளிகையும், கல்யாண மண்டபமும், அடுக்களையும், வசிக்கும் அறைகளும் சூழ விளங்கிய அரண்மனையின் அடிப்பகுதி வெளிப் பட்டது. தென்கோடியில் கிழக்கு நோக்கிய வாயில் காணப் பட்டது. வாயிலின் இருமருங்கிலும் ஆறு அறைகள் காணப் பட்டன. உள்ளே நுழைந்ததும் வடபுறத்திலே 1 மீட்டர் ஆழமுள்ள சதுரமானகுழி ஒன்று காணப்பட்டது. குழியின் பக்கங்கள் சுண்ணாம்புச் சாந்தால் பூசப் பட்டிருந்தன. தானியங்களைக் கொட்டிவைப்பதற்கு இவ்வறை உபயோகப்பட்டு இருக்கலாம். இங்கிருந்து ஒரு சரிவான வழியின் மூலம் நாளோலக்க மாளிகையை அடையலாம்.

நாளோலக்க மாளிகையின் மேற்புறம் செங்கல்லால் கட்டப் பட்ட உயர்ந்த பீடமொன்று காணப்பட்டது. அதன் முகப்பில் விளக்கு வைப்பதற்குப் பிறைகள் வரிசையாக அமைக்கப் பட்டிருந்தன. அப்பீடத்தின் அடிப்பகுதி மிக அழகாகச் சுதை வேலைப்பாட்டால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. மரத்தூண்களைத் தாங்குவதற்குக் கல்லாலான இரண்டு அடிப்பகுதிகள்பீடத்தின் மேல் காணப்பட்டன. பீடத்தின் மேற் பகுதி சதுரமான செங்கற்களால் பாவப்பட்டு, சுண்ணாம்புச் சாந்து பூசப்பட்டு இருந்தது. இதன் ஒரு பகுதியில் யாரோ சிலர் புதையல் தேடிக் குழிகளைத் தோண்டியிருந்தனர்.

பீரங்கியால் தாக்கிய போது வந்து பாய்ந்த இரும்பாலான பீரங்கிக் குண்டு சுவரில் பதிந்த நிலையில் காணப் பட்டது. இந்தப் பீடத்தின் மேல் அரசனின் அரியணை இருந்திருக்கக் கூடும் என்று ஊகிக்கப் படுகிறது. இப்பகுதியில் இருந்த இடிபாடுகளை நீக்கிய போது சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட சுதை வேலைப்பாடுகளும், வண்ணம் பூசப்பட்ட சுதைக் காரைகளும் பெருவாரியாகக் கிடைத்தன. ஒரு காரைத் துண்டில் வண்ணம் பூசப்பட்ட ஒரு முகம் காணப்பட்டது. இப்பகுதி அழகிய வண்ணம் பூசப் பட்ட ஓவியங்களால் நிறைந்திருக்க வேண்டும் என்பதற்கு இவை சான்று பகர்கின்றன. இந்த மண்டபத்தின் முன்னர் வெளியான பகுதியும் ஓரங்களில் உயர்ந்த திண்ணைகளும் மண்டபத்தை நோக்கி அமரும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் கிழக்கிலும் தெற்கிலும் இருந்த திண்ணைகள் சற்று உயரமாகவும், வடபுறம் இருந்த திண்ணை சற்றுத் தாழ்வாகவும் அமைக்கப்பட்டுத் திண்ணைகளின் ஓரங்களில் மரத் தூண்களைத் தாங்கிய கல்லாலான அடிப்பகுதிகள் உரிய இடங்களில் இருந்தன. திண்ணைகளும் தரைப்பகுதியும் அரைத்த வெண்மையான சுண்ணாம்புச் சாந்தினால் பூசப்பட்டிருந்தன. வடகிழக்கில் ஓர் அறை காணப் பட்டது. அவ்வறைக்குச் செல்லும் வாயில் நிலையும் காணப் பட்டது. நாளோலக்க மாளிகையிலிருந்து கழிநீர்ப் பாதை ஒன்று இவ்வறையின் வழியாகப் பூமியினடியில் அமைக்கப்பட்டிருந்தது.

அறையின்ஒருபுறத்தில்கைகால் கழுவத் திட்டு ஒன்று அமைக்கப் பெற்றிருந்தது. நாளோலக்க மாளிகையில் இருந்து அதை ஒட்டி வடபுறத்தே கல்யாண மண்டபம் ஒன்று, நடுவில் உயர்ந்த சதுரமான தெற்றியும், சுற்றி நான்கு புறமும் ஓடும் திண்ணைகளும் அவற்றின் புறத்தே அமைக்கப்பட்டிருந்த அறைகளும் உடையதாகக் காணப்பட்டது. நடுவில் இருந்த தெற்றி வெற்று மண்ணாலானது. சுற்றிலும்சுண்ணாம்புச்சாந்துபூசப் பட்டிருந்தது. மேட்டுப் பகுதிஇடிபாடுகளினால் சேதமடைந்திருந்தது. கிழக்குப்புறம் திண்ணையின் அருகே நீர்வடியும் பாதை அமைக்கப்பட்டிருந்தது. திண்ணைகளில் ஏறுவதற்கு ஆங்காங்கே கருங்கல் படிகள் அமைக்கப்பட்டிருந்தன. திண்ணைகளின் ஓரங்களில் மரத்தூண்களைத் தாங்கும் கல்லாலான அடிப்பகுதி ஆங்காங்கு வைக்கப்பெற்று இருந்தன.

கல்யாண மண்டபத்திலிருந்து வடக்கு நோக்கி ஒரு வாயில் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு மரக்கதவுகளும், நிலைகளும் இருந்திருக்க வேண்டும். அவற்றைப் பிடுங்கியெடுத்த தடயங்கள் காணப்பட்டன. அவற்றிலொன்று அடுக்களையாக இருந்திருக்க வேண்டும். அடுப்பெரித்த சாம்பல்களும், கலங்

கல் வைக்கும் திட்டுகளும், கை கால் கழுவும் பகுதிகளும் அங்குக் காணப்பட்டன. அரச மாளிகையிலிருந்து சுமார் ஐந்து மீட்டர் மேற்கில் மற்றும் ஒரு பெரிய கட்டடத்தின் அடிப் பகுதி காணப்பட்டது. நடுவில் தாழ்வாகவும், சுற்றிலும் உயர்ந்த திண்ணைகளோடும் மரத் தூண்களால் தாங்கப்பட்ட மேல் கட்டடங்களோடும் இந்தக் கட்டடம் இருந்திருக்க வேண்டும் என்பதற்கான தடயங்கள் கிடைத்தன. தாழ்வான நடுப் பகுதியில் உயரமான நான்கு மரத்தூண்கள் இருந்திருக்க வேண்டும். அவற்றைத் தாங்கிய கல்லாலான அடிப் பகுதிகள் இன்னும்இருக்கின்றன. இவற்றைச் சுற்றிலும் அறைகள் காணப்பட்டன. இக்கட்டடத்தின் நுழைவாயில் தெற்கு நோக்கி இருந்தது. தென்புறத்தில் வாயிலின் இருமருங்கிலும் திண்ணைகள் இருந்தன. திண்ணைகளின் அடிப்பகுதி அழகிய சுதை வேலைப்பாட்டுடன் திகழ்ந்தன.

வடபுறக் கோடியிலிருந்த ஒரு கிணறு தூர் எடுக்கப்பட்டது. சில பீரங்கிக் குண்டுகளும், பீர்ப் புட்டிகளும் கிணற்றினுள் காணப் பட்டன. அரச மாளிகையின் கிழக்கில் கருங்கல்லாலான தறியும், கரடு முரடான கற்கள் பாவிய கட்டுத் தறியும் காணப் பட்டன. இது யானை கட்டும் தறியாக இருக்கலாம். இக் கட்டுத் தறியில் வடக்கே தெற்கு நோக்கிய கட்டடம் ஒன்று காணப்பட்டது. இக்கட்டடத்தின் வடகோடியில் உயர்ந்த பீடமும், நடுவில் சதுரமான தூண்களின் அடிப்பகுதியும் காணப்பட்டன. இக்கட்டடத்தின் அமைப்பைக் கண்டால் இது ஒரு கோயில் போலத் தோற்றமளிக்கிறது.

இவை தவிர கோட்டை மேட்டில் பல சிறு கட்டடங்களின் பகுதிகள் ஆங்காங்கே காணப் படுகின்றன. இக் கோட்டையின் பகுதிகளில் அகழ்வாய்ந்த போது பல மட்கலங் களும், கருங்கல்லாலும், இரும்பாலுமான பீரங்கிக் குண்டுகளும், அழகிய சுதை வேலைப்பாடுகளும், ஆங்கிலேயர்களின் பீங் கான் தட்டுகளும், மண் விளக்குகளும், சில மட் பாவைகளும் கிடைத்தன. அரச மாளிகையில் நாளோலக்க மாளிகை யும், கல்யாண மண்ட பமும் சேதமடைந்த பகுதிகளில் சுண்ணம்புக் காரையாலும், வெள்ளைச் சிமெண்டினாலும் பூசப்பட்டு வெய்யிலிலும், மழையிலும் பாழடைந்து விடாமல் பாதுகாக்கப் பட்டுள்ளன. மண்ணாலான தரைப் பகுதிகள் வாரமொருமுறை அலகிட்டு, மெழுகிப் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. கோட்டை மேட்டில் கிழக்குக் கோடியில் புதர்களின் நடுவில் பல வீரக் கற்கள் காணப்பட்டன. இவற்றில் நாயக்க வீரர்கள் தங்கள் பெண்டிர் சூழ வீற்றிருக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. இச்சிலைகள் அனைத்தும் கட்டபொம்மனின் முன்னோர்களின் சிலைகளாகக் கருதப்படுகின்றன. இவை அனைத்தும் ஜக்கம்மா கோயிலுக்கு அருகில் கொண்டு வந்து பாதுகாக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக் குறிப்பு உள்ள ஒரு பலகை பொருத்தப்பட்டு உள்ளது. முழுநேரக் காவலர் ஒருவர் நியமிக்கப்பட்டு அரண்மனைப் பகுதிகள் பாதுகாக்கப்படுகின்றன.

கட்டபொம்மன் வாரிசுகளுக்கு இந்த அரசு உதவித் தொகை கொடுக்க முன்வந்ததையும் அதைத் தற்போது அதிகரித்து உள்ளதையும் முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். மேலும் கட்டபொம்மன் பிறந்த சனவரி 3-ஆம் நாளும், மறு நாளும் ஆகிய இரண்டு நாட்களும் கட்டபொம்மன் விழாவாக அரசே 1974-ஆம் ஆண்டிலிருந்து நடத்தும் என்று முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். இது மறைந்த மாவீரனின் விழாவாகச் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

பாஞ்சாலங்குறிச்சி விழாவில்
முதல்வர் அவர்கள்
ஆற்றிய உரை வருமாறு


''பாஞ்சாலங்குறிச்சி இந்திய நாட்டுச் சுதந்தரப் போராட்டத்தில் வெள்ளையனை எதிர்த்து முதல் முழக்கம் செய்த வீரத் திருத்தலமாகும். இந்தத் திருத்தலம் வெள்ளையருடைய ஆட்சிக் காலத்திலே மண்மேடு இடுகின்ற அளவுக்கு ஒரு கொடுமை விளைந்து, அந்தக் கொடுமை களையப்படுவதற்கு ஏற்ற நாள் இதுவரையில் வராமல் போய், இன்றைக்கு அதற்கான ஒரு தொடக்க நாளாக இந்த நாள் அரசாங்கத்தால்ஏற்கப்படுகிறது.

பாஞ்சாலங்குறிச்சியின் பெருமை மறைக்கப்பட்டிருக்கிறது. பாஞ்சாலங்குறிச்சியின் புகழ் மங்கி விட்டது. அப்படி மங்கி விட்ட அந்தப் புகழ், மறைக்கப் பட்டுவிட்ட அந்த பெருமை, மீண்டும்தமிழ்நாட்டில், இந்தியப்பெரு நாட்டில், அகில உலக அரங்கில் கொண்டு வரவேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகின்ற நாளாக இதைக் கருதுகிறேன், எனப் பல்லாயிரக் கணக்கில் கூடியிருக்கின்ற உங்கள் முன்னால் உறுதி எடுத்துக் கொள்ளுகின்றேன்.

எவ்வளவு பெரிய வீரப் பூமி, எப்படிப்பட்ட மறவர் குல மண், எவ்வளவு பெரிய ஆதிக்கத்தை எதிர்த்து நின்று தூக்குமேடை ஏறினாலும் பரவாயில்லை, தூய கொள்கைக்காகச் சாவை முத்தமிடுவது மேல், 'வெண்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள்' என்கின்ற சூளுரையைத் தந்து அன்றைக்குத் தூக்குக் கயிற்றை முத்தமிட்ட கட்டபொம்மன் ஆனாலும், அவனது சகோதரர் ஊமைத்துரை ஆனாலும், அவனோடு சேர்ந்து வாழ்ந்த ஒப்பற்ற அவனது தளபதிகளானாலும், ஆயிரக் கணக்கான போர்வீரர்களானாலும், அவர்கள் அத்தனை பேரும் நம்முடைய வீர வணக்கத்திற்கு உரியவர்கள். பாஞ்சாலங் குறிச்சியிலே கட்டபொம்மன் கட்டிய அந்தக் கோட்டை உழுது, ஆமணக்கு விதை தெளிக்கப்பட்டு, மண்மேடிட்டு அது எங்கே இருக்கிறது என்கின்ற கேள்விக் குறியோடு முடிந்திருந்த காலம் ஒன்று உண்டு.

அதைத் தமிழ்நாடு அகழ்வாய்வுத் துறை 1967-ஆம் ஆண்டு தோண்டிப் பார்த்து

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனின் மாளிகைப் பகுதி அகழாய்வு செய்யப்பட்ட இடம்.



அந்தக் கோட்டையினுடைய அடித்தளங்களை எல்லாம் இன்றைக்குக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவற்றை நாங்கள் கண்டபோது மெய்சிலிர்த்தது. அவற்றினைக் கண்டபோது உணர்ச்சி வசப்பட்டோம். கட்டபொம்மன் காலத்திற்கே வந்தது போன்ற எண்ணம் ஏற்பட்டது. அங்கேயே அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட இடங்களும், கட்டபொம்மன் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் காட்சியில் இருக்கின்றன. அவைகளையெல்லாம் கண்டபோது வெள்ளையர்களை எதிர்த்து இந்திய மண்ணினுடைய விடுதலைக்காக முதல் முழக்கம் செய்தவனாகத் தமிழ் நாட்டுக்காரன்தான் இருந்திட வேண்டும் என்ற உறுதியோடு தன்னுயிரைப் பணயம் வைத்தானே, அந்த வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு அவனுடைய வாரிசுகளுக்குத் தமிழ் நாடு, தமிழர் சமுதாயம் என்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறது.



பாரதியார் பிறந்த இடம்

அப்படிப்பட்ட ஒரு மாவீரனுடைய பிறந்த இடத்தை வரலாற்றுச் சின்னமாக அறிவிப்பதென்பது, நாம் அறிவித்த பிறகு அது சாதாரணமாகத் தெரியலாம்; ஆனால், தமிழனுடைய வரலாறு உள்ள வரையில் இந்தச் சின்னம் நிலைத்திருக்கும். தமிழ்மொழியினுடைய பெருமை உள்ள வரையில் இந்தச் சின்னம் வாழ்ந்து கொண்டிருக்கும். தமிழனைப் போற்றுகின்ற கடைசித் தமிழன் வாழ்கின்ற வரையில், அவனுடைய உடலிலே கடைசிச் சொட்டு ரத்தம் இருக்கின்ற வரையில் இந்தச் சின்னம் பாதுகாக்கப்படும் என்பதை நான் இங்கு உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று உருக்கமாகக் கூறிய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 12–5–73-ஆம் நாளன்று எட்டயபுரத்தில் பாரதி பிறந்த வீட்டை வரலாற்றுச் சின்னமாகத் திறந்து வைத்தார்கள்.

கட்டபொம்மன் கோட்டை 1' 2' உயரம் பூமிக்கு அடியிலே காணப்படுகின்ற அளவுக்கு அகழ்வாய்வுத் துறையினர் மிகச் சிறந்த முறையிலே தம்முடைய பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மீண்டும் அதே கோட்டையைக்கட்ட வேண்டும் என்றால், அதே அடித்தளத்தில் கட்டினால் அது முறையாகாது. பழமையைக் காப்பாற்றியதாகாது. ஆண்டாண்டுக் காலத்திற்குக் கட்டபொம்மன் உண்மையிலேயே கட்டியிருந்த கோட்டை இது என்பதைக் காட்டுவதற்கு அந்த அடித்தளம், இன்றைக்கு மிச்சப்பட்டிருக்கின்ற அந்த அஸ்திவாரம் பயன்பட்டாக வேண்டும்.

அதை அப்படியே விட்டு விட்டு அந்த அடித்தளத்தின் மேலே எப்படிக்கட்டடம் கட்டப்பட்டிருந்தது என்ற கற்பனையைப் பக்கத்திலே நாம் ஒரு புதிய கட்டபொம்மன் கோட்டையைக் கட்டுவதன் மூலமாகத் தமிழக அரசின் சார்பிலே அந்த நினைவுச் சின்னத்தை வெகுவிரைவிலே அமைப்பதற்காக அடிக்கல் நாட்டுவிழா நடத்தப்படும் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன்தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது இருக்கும் அடித்தளம் அப்படியே இருக்கும். அது எந்தவித ஊனமும் ஆகாது.

## எட்டயபுரத்தில் பாரதி பிறந்த இல்லம்

''இன்றைக்குச் சற்றேறக் குறைய 90 ஆண்டுகளுக்கு முன்னால் எட்டயபுரத்தில் இந்த அக்ரகாரத்தில் இந்தச் சின்னஞ் சிறிய வீட்டில் தமிழ்நாட்டைப் பற்றிப்பாடுவதற்கு, தமிழர்களின் வீரத்தைப் பற்றிப் பாடுவதற்கு, இந்திய மண்ணின் விடுதலைத் தாகத்தைப் பற்றிப் பாடுவதற்கு 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்' என்று சூளுரைத்துப் பாடுவதற்கு ஒரு குரல் அம்மா என்று கேட்டது. அந்தக் குரல் கேட்ட இடந்தான் இந்த இடம்.

அன்று எட்டயபுரமே விழாக் கோலம் கொண்டிருந்தது. ஊரெங்கும் தோரண வாயில்கள். பாரதி பிறந்த வீட்டின் முன்னரேயே பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த அவ் வீட்டைத் தமிழ்நாடு அரசே பழுதுபார்த்தது. வாயிலை அழகிய கோலங்கள் அலங்கரித்தன. பாரதி பிறந்த வீடு பண்டையத் தமிழ் மரபுக்கு ஏற்ப அலங்கரிக்கப்பட்டிருந்தது. வாயிலைக் கடந்ததும் பாரதி பிறந்த பகுதி. பாரதி பிறந்த இடத்தில் அவரது படம் ஒன்று வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது தமிழகத்தின் மாபெரும் கவிஞன் பிறந்த இடத்தில் இன்றையத் தமிழகத்தின் ஈடில்லாத்தலைவர், கலைஞர் உள்ளம் உருகி நின்றது ஒப்பற்ற காட்சியாகும்.

எட்டயபுரத்தில் மகாகவி சுப்பிரமணியபாரதி பிறந்த வீட்டை வரலாற்றுச் சின்னமாக எடுத்துப் பாதுகாக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு 1967-ஆம் ஆண்டிலிருந்து தீவிர முயற்சியை மேற்கொண்டது. பாரதி பிறந்த வீடு அவருடைய தாய் மாமனரான திரு. சாம்பசிவஐயருக்குச் சொந்தமானது. சாம்பசிவ



பாரதியார் தன்கைப்பட எழுதிய குயில் பாட்டை முதல்வர் கலைஞர் அவர்கள் பார்வையிடுகிறார்கள்.

ஐயரின் வழி வந்தவர்களிடம் அந்த வீடு இருந்துவந்தது. அதில் 1967-ஆம் ஆண்டில் தீக்குச்சி தயாரிக்கும் மருந்து சேமித்து வைக்கும் கிடங்காக ஆண்டுக்கு 400 ரூபாய் வாடகையில் விடப்பட்டிருந்தது. தமிழகத்தின் தவப் புதல்வன் பாரதி பிறந்த இடத்தை வரலாற்றுச் சின்னமாக எப்படியும் பாதுகாக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தீவிர முயற்சிகளை எடுத்துக் கொண்டதன் பேரில் தீக்குச்சிக் கிடங்கு அங்கிருந்து அகற்றப்பட்டது. சிலகாலம் இந்தக் கட்டடத்தில் மாவட்ட நூலகம் இயங்கி வந்தது. நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட இக்கட்டடம் தொன்மை மாறாமல் பாரதி பிறந்தபோது எப்படி இருந்ததோ அப்படியே பாதுகாக்கப்பட இருக்கிறது. பழுதடைந்த இடங்கள் திருத்தப்பட்டன.


வீட்டின் நடுப்பகுதியில் பாரதி தன் கைப்பட எழுதிய பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, முதலிய தாள்கள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை அரசு பொருள் கொடுத்து வாங்கிச் சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாத்து வருகிறது. பாரதி வாழ்ந்த காலத்தில் அவர் வீட்டில் வழங்கிய சில பொருட்களும் காட்சியில் வைக்கப்பட்டன. இவற்றில் பாரதி பாடிய வேல் ஒன்றும், அழகிய சிறிய கண்ணன் பொம்மை ஒன்றும் குறிப்பிடத் தக்கவை. பாரதியின் நூல்களும், பாரதி பற்றிய நூல்களும் இங்குக் காட்சியில் இருக்கின்றன. இவை நிரந்தரமாக மக்களின் பார்வைக்காக வைக்கப்படும் எனக்கூறிய கலைஞர் அவர்கள் :—''90 ஆண்டுகளுக்கு முன்பு பாரதியார் குழந்தையாக இங்கே தோன்றினார். இந்தத் தெருவினிலே தவழ்ந்து விளையாடினார். இளமையிலேயே தாயையும், தந்தையையும் இழந்தார் என்றாலும், தாயாகத் தந்தையாகத் தமிழையும், தம் நாட்டையும் நெஞ்சத்திலே பதித்துக் கொண்டார்.

அப்படிப்பட்ட பெரும் புலவருடைய நோக்கு நேரான நோக்கு. அவருடைய பார்வை ஒளி பொருந்திய பார்வை. அந்தக் காரணத்தினாலேதான் 'ஒளி படைத்த கண்ணினாய் வா, வா, வா' என்று பாரதியார் தன்னருகே வரவேண்டியவர்களைத் தமிழ் மொழியைக் காப்பாற்றப் புறப்படுகின்றவர்களை, விடுதலைப் போருக்கு ஆர்வத்தோடு ஓடுகின்றவர்களை எல்லாம் 'ஒளி படைத்த கண்ணினாய் வா, வா, வா' என்று அழைத்தார். கோழைகளைக் கிலிபிடித்த நெஞ்சினாய் போ, போ, போ என்று துரத்தினார். 'வா, வா, வா' என்று அழைத்ததிலே உள்ள கனிவும், 'போ, போ, போ' என்று விரட்டியதிலே உள்ள துணிவும் பாரதியார் பாடலிலே தெளிவாகக் காண்கின்றோம்.

அப்படிச் சமுதாயத் துறையில், இலக்கியத் துறையில், அரசியல் துறையில் கவிதைகள் மூலமாகப் புரட்சி செய்த பாரதியாருக்குத் தமிழ் நாடு என்றென்றும் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. அவருடைய ஒவ்வொரு வரியும் எழுச்சி வாய்ந்தது. ஒவ்வொரு வார்த்தையும் எண்ணி எண்ணி மகிழத் தக்கது. அவர் சுதந்தரக் கனலை எழுப்பினார், சுந்தரத் தமிழுக்கு மேலும் புகழ் சேர்த்தார். சுதந்தர பூமியிலே அவர் வாழுகின்ற வாய்ப்பைப் பெறாவிட்டாலும் நாமெல்லாம் வாழுகின்ற வாய்ப்பைப் பெறுவதற்குச் சங்கநாதம் செய்தார்; சிங்கநாதம் செய்தார்; முரசு கொட்டினார்; முழங்கினார்.

அவருடைய போராட்டத்தின் விளைவில் அந்த வெற்றி அறுவடையை இன்று நாமெல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அவர் இல்லம் இங்கே இருக்கிறது. அவர் எழுதிய நூல்களெல்லாம் பாதுகாக்க ஏற்பாடுகள் அரசினால் செய்யப்பட்டு இருக்கிறது. அவர் கையால் எழுதப்பட்ட, பாஞ்சாலி சபதம் என்ன, குயில் பாட்டு என்ன, அவருடைய கையால் எழுதப்பட்ட பல்வேறு கவிதைகள் என்ன அனைத்தும்—அவர் கையால் எழுதப்பட்ட தாள்களெல்லாம் பாதுகாக்கப் பெற்று இந்த இல்லத்திலே வைக்கப்பட்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார்கள்.

பாரதி பிறந்தவீட்டைத் தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைவரலாற்றுச்சின்னப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எடுத்துப் பாதுகாத்து வருகிறது. இதை முதல்வர் அவர்கள் ''நாட்டுக்காகப்பாடுபட்டவர்கள் நாட்டினுடைய மானத்தைக் காக்க, சுதந்தரத்தைக் காக்க விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், அவர்களையெல்லாம் மதிப்பது, அவர்களுக்கு மரியாதை செய்வது, அந்தவரலாற்று நாயகர்களுக்குத் தரவேண்டிய கௌரவத்தை அளிப்பது இன்றைக்கு இருக்கின்ற அரசு ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு முக்கியமான பொறுப்பாகும்'' என்று குறிப்பிட்டது போல், அதே குறிக்கோளுடன் பாதுகாத்து வருகிறது.




## 58. வேளாண் துறையின் வியத்தகு சாதனை

ஏரோடு வித்துக்கள் ஏற்ற உரவகைகள்
பாரோர்தாம் போற்றும் பலகருவி—நீரோடும்
வாய்க்கால் அணைகள் வரப்புயரக் காரணமாய்
வாய்த்திட்ட நம்மரசை வாழ்த்து !

— ம. சக்குபாய், உடுமலைப்பேட்டை.

தன்னிறைவைக் கண்ட தமிழரசின் சாதனையால்
பொன்விளையக் காண்கின்றோம் பூமியிலே !—முன்னாளின்
திண்டாட்டம் போக்கித் திசையெங்கும் நெல்குவித்துத்
தொண்டாற்றும் வேளாண் துறை.

— சண்முக. தாயுமானவன், பொன்மலை.

காய்வயிற்றிற் காகஅல்ல ! கன்னித் தமிழ்காக்கும்
சேய்நிறைந்த முன்வயிற்றுச் செந்தமிழாள் !—போய்அன்று
சோற்றரிசி வாங்கநின்று சோர்ந்தாளே ! அக்கொடுமை
மாற்றியதே வேளாண்மை மாண்பு.

— ப. வேங்கடாசலன், உறந்தைராயன்குடிக்காடு.

பாரோர் வியக்கப் பசுமைப் புரட்சியினால்
வாரிக் குவித்தார் வளம்பலவே ; —நேராய்
உரமும் மருந்தும் உயர்நல் விதையும்
அரசினர் தந்தாரே ஆய்ந்து.

— ப. சக்திவேலன், கொட்டடப்பட்டு.

தோளாண்மை கொண்டு துயர்நீக்கினோம் மற்றும்
தாளாண்மை கொண்டோம் தகைசான்ற—நூலாய்ந்தோம்
கேளானோம் பாருக்குக் கேளீர் இவையாவும்
வேளாண்மை தந்த விளைவு.

— புலவர் ப. சம்பந்தன், திருக்கோவிலூர்.

வேளாண்மை யேநாட்டின் வேர்என்று தேர்ந்ததனால்
தாளாண்மை நீரதற்கே தந்துதவி—நாளும்
விளைவைப் பெருக்கியதால் வீழ்ந்ததுவே பஞ்சம்
களையாம் பசியைக் களைந்து.

— தனமணி, மூலனூர்.

கையார் விதையுங் கடனுங் கலப்புரமும்
பையார் மருந்தும் பலதந்து—மையாரும்
இல்லாமை மாற்றி எளியோர் பசிதீர்க்கும்
நல்லரசின் சாதனையை நாடு.

— க. சு. தமிழ்ப்பிரியன், ஆலாம்பாளையம்.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
ம. சக்குபாய், ஆசிரியை, எஸ். கே. பி. உயர்நிலைப்பள்ளி,
உடுமலைப்பேட்டை, கோவை மாவட்டம்.

# வெண்பாப் போட்டி

அண்டைமனை அண்டி அரிசி கிடைக்காது
கொண்டவரை நோக்கிக் குனிந்ததலைப்—பெண்டே, நம்
பண்டைவளம் மீண்டும் பசுமைப் புரட்சியினுல்
கண்டோம் கலைஞராலே காண்.

— சிவ. நடராசன், மாமல்லபுரம்.

வேளாண்மைச் சீரெல்லாம் வெண்பாவில் கூறவல்ல
நூலாண்மை கொண்டிலையே நுண்ணறிவே !—தாளாண்மை
மண்ணின்மேல் பேராண்மை ! வாழ்த்தளிக்கும் ஊராண்மை !
உண்ணுமை நோன்பேன் உனக்கு !

— சிவ. கிருட்டிணன், கணியூர்.

வெற்றியால் வேளாண்மை மேலோங்க நம்மரசு
நற்றுறையை நம்நாட்டில் நாடியே—அற்புதமாய்
உற்பத்தி பல்கிடவே ஊக்கமதை யூட்டுவதைப்
பொற்பாக நாவினிக்கப் போற்று.

— வெற்றிவேல் வேங்கடேசன், சேலம்-9.

வண்ணமலர் சூடி வாரணுசிப் பட்டுடுத்திக்
கண்ணைப் பறித்தாலும் காணேனே—கண்ணே !
பசியாற உண்ண, வகைசெய் அரசின்
பசுமைப் புரட்சிதனைப் பார் !

— மு. க. மூர்த்தி, மானம்புச்சாவடி.

வீரியபல் வித்துகளைக் கண்டு விதைத்ததனுல்
சீருடனே நஞ்சை செழித்ததுகாண்—நேரிழையே
அப்பெருமை வெளாண்மை என்னும் அருந்துறைக்கே
தப்பாமற் சாருமென்று சாற்று.

— த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

வேளாண் துறைசெய்த வெற்றிப் பணிநலத்தால்
தாளாண் துறைக்கரிசி தங்கியதே—நாளெல்லாம்
வாடியே மக்கள் வரிசையில் நின்றரிசி
தேடிய மாநிலத்தில் இன்று !

— இளங்கோ, ஆலங்குளம்.

வேளாண்மை யாலே விளையும் சிறப்புகளைத்
தாளாண்மை யோடு " தமிழரசு "ம்—வாள்விழியே !
பன்முறைகள் ஆய்ந்து பசுமைப் புரட்சியால்
நன்மகசூல் தந்தவழி நாடு.

— ப. குப்புசாமி, பொன்மலை.

மண்ணின் வளமறியும் மாபெரும் திட்டத்தால்
எண்ணிலா மக்களின் ஏழ்மைநீங்கப்—பெண்ணே !
பயிர்த்தொழிலை நம்மரசு பாரெங்கும் போற்ற
உயிர்போலக் காக்கும் உயர்ந்து.

— வெ. குமாரசாமி, கோரிக்கடவு

ஏரைப் பிடித்தகை ஏற்றம் படைத்தகை
ஊரை உயர்த்த உதவும்கை—சீரை
வளர்க்கும்கை யென்றே, வகைவகையாய்த் திட்டம் !
பலப்பல சாதனையைப் பார் !

— சாப்டூர் சதுரகிரியான், கருங்காலக்குடி.

பசுமைப் புரட்சிநிலம் பாரிலுழு வோர்க்கே !
இசைவாய்க் கடனுதவி ; இல்லார்—இசையேத்த
நாளும் புதுவித்து ! நன்மருந்து ! நம்மரசின்
வேளாண் துறையொன்றே மேல்.

— சோ. முத்துமாணிக்கம், பி.எஸ்சி., அமரப்பூண்டி.

உழுதொழில் செய்ய உரக்கடன் ! ஏழை
உழவர்க்கு வீட்டுமனைப் பட்டா !—உழுபவர்க்கே
அந்நிலம் ! அப்பப்பா !! எத்தனை நன்மைகள்
செந்நெல் களம்குவித்தோம் சேர்ந்து.

— வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

செல்லாயி கேட்டாயா சேதியினை ! நெல்லரிசி
இல்லாத கேரளர்க்கோ ஈத்துவக்கும்—நல்லதமிழ்
நாட்டரசின் வேளாண்மை நற்பயனுல் இங்கெவரும்
வாட்டமின்றி வாழ்வர் மகிழ்ந்து.

— வி. மு. உலகநாதன், சென்னை-7.

## வெண்பாப் போட்டி

நீள்புவியின் வாழ்வு நிமிர்த்திடவே தான்வளைந்து
நாள்முழுதும் ஏரோட்டும் நல்லுழவன்—தோள்விம்ம
வேண்டும் கடன்கருவி வீறுடனே நல்கிவளம்
தூண்டும் அரசே துணை.

—ஜி. வி. அர்த்தநாரி, பி.ஏ., பி.டி., வேலூர்.

மாடுகட்டி மாளாது மாயானை போரடித்த
நீடுபுகழ் தாயகத்தே, பீடுடைய—ஆடுதுறை
நாடுயரக் கண்டதனுல், நம்மரசை நாடோறும்
ஏடுபோற்ற வைத்திடுவோம் ஈண்டு.

—புலவர் இலெ. சீ. குப்புசாமி, மாச்சம்பட்டு.

ஏர்முனையால் என்றென்றும் இல்லாமை இங்கொழித்துப்
பார்முழுதும் வாட்டும் பசிப்பிணியின்—வேரறுக்கும்
வேளாண்மைச் சீர்துறையால் வெற்றி பலகுவித்து
நாளும் வளங்கொழிக்கும் நாடு.

—க. ச. சூ. கனியமுதன், சம்புகுட்டப்பட்டி

''கருணு''பெயர்கொண்ட கட்டழகு நெல்லைப்
பெருமையால் பூரிப்பாய்ப் பெற்ருய்—விரும்பி
உழவரிடம் வந்திட்டாய் ; வேளாண்மை யென்ற
மழலையே நீயென்றும் வாழ் !

—இரா. வேதநாயகன், வடபாதிமங்கலம்.

என்போல் உழவர்கள் ஏற்றமுடன் வாழ்ந்திடப்
பொன்போற் பலதிட்டம் போற்றியே—தன்பால்
பழம்புகழ் சேர்த்துப் பயிர்வளங் காண்ப
துழவுத் துறையென்றே ஓது.

—சுப்பிரமணியக்கவுண்டர், பவானி.

மக்கள் தொகைக்கேற்ப மாநிலத்தில் உற்பத்தி
தக்க அளவில் தழைத்திடவே—எக்காலும்
நல்ல விளைவுக்கே நம்மரசு செய்தொண்டை
எல்லாரும் போற்றல் இனிது.

—மா. கணபதி, சங்கமங்கலம்.

வேளாண்மை வெற்றியுற வேண்டும் பலவழியில்
தாளாண்மை மிக்காணத் தூண்டிடவே—ஆளவந்தார்
ஆக்கப் பணிநோக்கின் ஆகும் முதலிடமே
ஊக்கத் துறையார் செயல்.

—எஸ். சுசீலா, விசயநகரம்.

உரமளித்தார் ; ஊற்றுக் கிணறளித்தார் ; நாற்றில்
பரவிய நோய்தீர் மருந்தைத்—தரமாய்
விதையொடு தானளித்தார் ; வேளாண் துறையார்
இதமா யுழவர்கட் கின்று.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

பொன்னி கரிகாலன் பொற்புடைய கண்ணகியாள்
கன்னிசெயா பத்மா கருணுவும்—பன்மடங்குப்
பொன்குவிக்கும் நெல்வகையால் பொல்லாப் பசியொழிக்கும்
குன்ருப் புகழ்உழவைக் கூறு.

—புலவர் அ. வே. காசிநாதன், அமிர்தராயன்கோட்டை.

இல்லாமை போக்கிடவே இன்பமெங்கும் ஓங்கிடவே
நல்லவளம் வேளாண்மை நல்கிடவே—வெல்வழியே
நாடுபுகழ்த் திட்டத்தால் நம்மக்கள் வாழ்வுயர்த்தும்
பாடுதமிழ் நல்லரசைப் பாடு.

—சு. விசுவநாதன், ஆ. தெற்கூர்.

நிலந்தந்தார் ஏழைக்கு ! நீர்தந்தார் ! செய்ய
புலந்தன்னில் நல்வளமும் பொங்க—நலஞ்சேர்
உரந்தந்தார் தந்தார் நல்ஊக்கம் ! என்றும்
திறஞ்சார்ந்து வாழ்க சிறந்து.

—வீ. சேசாசலம், அரடாப்பட்டு.

உமியென நீங்கி ஒழிந்தது பஞ்சம்
தமிழகம் ஓங்கித் தழைக்க!—அமிழ்தினும்
இன்பத்தை ஈபவளே ! வெண்சோறும் நெய்மீனும்
என்றும் விருந்துக் கிடு.

—ஜி. செலிணு, சாத்தூர்.

## செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு இனிக்கும் செய்தி !

அரசு ஆணை எண் 741, கல்வித்துறை, நாள் 7—5—1973-ன் படி, 5,000 'ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பதவிகளை 2—10—1973 முதல் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பதவிகளாக உயர்த்தத் தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. இதனால் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றிருந்தும் தற்பொழுது ஹையர் கிரேடு ஆசிரியர் பதவியில் அமர்ந்து ஹையர் கிரேடு ஆசிரியர் பதவிக்குரியர் சம்பளமே பெற்றுவரும் 5,000 பேர் செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிக்குரிய சம்பளம் பெறும் வாய்ப்பினைப் பெறுவார்கள்.

புதிதாக உயர்த்தப்படும் செகண்டரி கிரேடு பதவிகளில் செகண்டரி கிரேடு தகுதி படைத்த ஆசிரியர்கள் அந்த ஆசிரியர்கள் எந்தத் தேதியில் செகண்டரி கிரேடு, பயிற்சிக் கல்வித் தகுதி பெற்றார்கள் என்று நோக்காமல்—கண்டிப்பான முந்துரிமை (Seniority) அடிப்படையில் அமர்த்தப் படுவார்கள்.


இவ்வாறு 5,000 ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பதவிகளை 2—10—1973 முதல் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பதவிகளாக உயர்த்துவதன் காரணமாக ஏற்படும் அதிகச் செலவை ஈடுகட்டுவதற்காக 1973–74-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 10 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆகவே நடப்பாண்டில் 2—10—1973 முதல் 5,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் அதிகச் சம்பளம் பெறுவார்கள்.



**காலக் கண்ணாடி**

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுக் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த ஏணி' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ !

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா


சுற்றுலா சுந்தரம்
7
கதை: இளவல்: சித்திரம்: முத்து
ஒருத்தருக்கும் தெரியாம நம்முடைய சாமான்களை இறக்கிவிட்டோம். ஆனல் பஸ்ஸிலே தேட மாட்டாங்களா?
தேடினல் தேடட்டுமே நமக்கென்ன நம்முடைய மாபெரும் இரண்டு எதிரிகளிடமிருந்து தப்பித்திருக்கின்றேம்
டேய் சுந்தரம்! பாவம்டா மாலா அக்காவும் மீரா அத்தையும் நம்மைக்காணும தேடுவாங்க...! பஸ்ஸை த் திருப்பி வந்து தேடினலும் தேடுவாங்க...! அவுங்களை ஏமாற்றுவது தான் என்னவோ மாதிரி இருக்கு
டேய் அருள்! பகவத் கிதை படிச்சிருக்கியா உறுதியாக இருக்க வேண்டிய நேரத்திலே உளறுகிறயே..!
பகவத்கீதையா? உன் மாதிரி நான் அட்டையைப் பார்த்திருப்பேன் டேய் தாத்தா மாதிரி பேசாதே! அடுத்து நடக்க வேண்டியதைச் சொல்லு.
பஸ் திரும்பிவந்து தேடினலும் தேடும்... இந்தப்பாதை வழியாகப் போகவேண்டாம். எதிரே போகிற ரோடு வழியாகப் போகலாம்.. அடடே. அந்த டிரைவர் கொடுத்த வெட்டியையும் எடுத்துக்கிட்டு வந்துட்டேனே... உம் ஊர்லே போய் கொடுத்துக்கலாம்.
ஊரிலே போய் என்னடா சொல்றது ஏன் சுற்றுலா போகணேன்னு கேட்டா என்ன சொல்ல முடியும்?
ஒரு பொய் சொன்னல் போதுமா? அந்தப் பொய்யை அறுதையா விடாமல் அதுக்கு ஆதரவா பல பொய் சொல்லத்தான் வேண்டும்!
டேய் அருள் மழை வேறே வருது... பெட்டிகளைத் தூக்கு வேகமாக நடப்போம்...
டேய் சுந்தரம்! மழையும் காற்றும் அடிக்குது, இப்ப என்னடா செய்யறது?
எதிரே இடிந்த கட்டடம் ஒண்ணு தெரியுதுபார் அங்கே போய்த்தங்குவோம், மழை விட்டதும் பஸ்ஸைப் பிடித்து ஊருக்குத் திரும்பி விடலாம்


சினிமாவிலே வர்ற மர்ம மாளிகையாகத்தாண்டா இருக்கு....ரொம்ப பயமா இருக்கு! ஒரே த்ரில்!
ஆமாம்... நீபோய் சன்னல் வழியாக எட்டிப்பாரு...... உள்ளே திருடர்கள் கூட்டம் இருக்கும், நீ பயந்து சத்தம் போடுவே... திருடர்கள் உன்னைப் பிடித்து விடுவார்கள்! நீ அலறுவே அந்தச் சமயம் பார்த்து அங்கே அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கதாநாயகியைக் காப்பாற்றக் கதாநாயகன் வருவான் அப்புறம் டிஸ் டிஸ் சண்டை நடக்கும்! சாமான்கள் உடையும்! போலீஸ் வரும்!
உடனே நான் காப்பாற்றப் படுவேன் திருடரைப்பிடித்துக் கொடுத்ததற்காக எனக்குப் பரிசு கிடைக்கும் பாராட்டு விழா நடக்கும்... உனக்கு அழைப்பிதழ் அனுப்பச் சொல்வேன்!
டேய் உன் கற்பனையை நிறுத்துடா காற்று ரொம்பப் பலமாக அடிக்குது
நீ ஆரம்பிச்ச நான் முடித்து வைத்தேன்...! அது இருக்கட்டும். இப்படியே மழையும், காற்றும் அடிச்சால் நாம எப்படிப் போகிறது?
அது தான் எனக்கும் புரியலே அருள் அதோ ஒருவர் உட்கார்ந்திருக்கிறர் அவரிடம் எந்த பஸ்ஸில் ஊருக்குப்போகலாம் என்று விசாரிக்கலாம்.
வாங்க தம்பிகளா, வாங்க! உங்களைத்தான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன்
சுந்தரம்... ஆள் ஒரு மாதிரியா பேசுறர்!
சார் இந்தப் பக்கம் பஸ் வருமா?
பஸ் எதற்கு...? காரிலேயே அனுப்புகிறேன்! அதோ ஒரு ஜீப் வருகிறது; அதிலே போகலாமே! நான் அனுப்பி வைக்கிறேன்.
ஜீப்பிலிருந்து, போலீசார் இறங்குகின்றனர். அதே சமயம் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து கீழே விழுகிறது
ஐயோ, போலீஸ்! நான் ஓடுகிறேன் நீங்களும் ஓடிவிடுங்கள்!
தொடரும்

# சிறு தொழில்கள் மூலம் பெருமளவில் வேலை வாய்ப்புகள்

சாக...

வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வறுமையையும் ஒழிப்பதற்கு நாட்டைத் தொழில் மயமாக்குவது ஒன்றுதான் வழி என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும், அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, அதே நேரத்தில் பொருள் உற்பத்தியையும் பெருக்குவதில் சிறு தொழில் வளர்ச்சி மிக முக்கிய இடம் வகிக்கின்றது. தொழில் வளர்ச்சிக்குரிய ஆற்றல், வசதிகளைப் பெருக்குவதிலும், பரவலாகத் தொழில்களை அமைக்கும் செயல் முறைகளிலும் தமிழகத்தில் கடந்த பத்தாண்டுக் காலமாக ஓர் அமைதிப் புரட்சியே நடைபெற்று வருகின்றது. சிறுதொழில் வளர்ச்சியின் மூலம் மாநிலத்தின் பொருளாதாரம் புதிய உயிர்ப்பினைப் பெற்றுள்ளது. வேளாண்மை, மின்சாரம், கல்வி முதலிய துறைகளைப் போலவே மாநிலத்தில் சிறுதொழில் வளர்ச்சியும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடங்குவதற்கு முன்பு நாட்டில் சிறு தொழில்கள் என்ற வகையில் கைத்தறி நெசவு, பாத்திரங்கள், பூட்டு, செருப்பு, சிப்பம் கட்டும் பெட்டிகள், பிரஷ்கள் முதலிய தொழில்கள் மட்டுமே குறிப்பிடத் தக்கனவாக இருந்தன. முதல் திட்டக் காலத்தில் வேளாண்மை, பாசன வசதி, கிராமங்களுக்கு மின்வசதி வேளாண்மைக் கல்வி, பொறியியல் கல்வி முதலியவைகளில் முக்கியக் கவனம் செலுத்தப்பட்டது. அடுத்து வந்த திட்டக் காலங்களில் தொழில் வளர்ச்சிக்கு இவை ஏற்ற சூழ்நிலையை அமைத்துத் தந்தன.

இரண்டாவது திட்டக் காலத்தில் தொழிற் பேட்டைகள் அமைப்புப் பணி, தொழில் வளர்ச்சிக்கு நல்ல ஊக்கமளித்தது. தொழில் வளர்ச்சியை, குறிப்பாகச் சிறு தொழில் வளர்ச்சி நிலையைச் சரியான முறையில் மதிப்பிட போதிய புள்ளி விவரங்கள் இல்லாத குறை மூன்றும் திட்டக் காலத்தில் உணரப்பட்டது. சிறு தொழில்களைப் பதிவு செய்யவும் உற்பத்தி, முதலீடு, வேலை செய்யும் நபர்கள் அளவு முதலியன குறித்துப் புள்ளி விவரங்கள் திரட்டவும், செயல் முறைகள் மேற்கொள்ளப்பட்டன.



இப்பணியில் பல இடையூறுகள் குறுக்கிட்டன. இப்போதும் கூட அந்த இடையூறுகள் அனைத்தும் நீங்கி விட்டதாகச் சொல்ல இயலாத நிலை இருக்கிறது. சிறு தொழில்களைப் பதிவு செய்வதில் சட்டம் மூலமான கட்டாயம் இல்லாமல், தாமாக முன் வந்து பதிவு செய்து கொள்வோர் மட்டுமே கணக்கில் வருகிறார்கள். புள்ளி விவரங்களில் குறைபாட்டுக்கு இது ஒரு முக்கியமான காரணம் ஆகும். ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமான தொழில் வளர்ச்சியில் குறிப்பிடத் தக்க ஓர் அம்சம், அரசு அளிக்கும் உதவிகள் அனைத்தும், தொழில் துறை இயக்ககம், மாநில நிதி நிறுவனங்கள், வணிக வங்கிகள் மூலம் ஒரு முகப்படுத்தப் படுகின்றன. என்பதாகும்.

தொழில் துறை நடத்தி வந்த தொழிலகங்களில் பெரும்பாலானவை, இலாப நஷ்டத்தைக் கணக்கில் கொள்ளும் வணிக இயல் ரீதி நிறுவனங்களாக இப்போது நடத்தப்படுகின்றன. இதற்காக அரசினர் அமைத்துள்ள நிறுவனம் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனமாகும். ( Tamil Nadu Small Industres Corporation) "TANSI" தனியார் நடத்தும் வணிக நிறுவனங்களைப் போலவே அரசும் நிறுவனங்களை நடத்தி லாபம் காட்ட முடியும் என்பதை டான்சி புலப்படுத்தியிருக்கிறது.

தொழிலகங்களை ஏற்படுத்துவதற்காக மேம்படுத்தப்பட்ட மனையிட வசதியோடு, ஏற்கெனவே உள்ள தொழிலகக் கொட்டகைகளை விரிவுபடுத்தவும், புதிய தொழில் கொட்டகைகளை அமைக்கவும் விரிந்த அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. சிறு தொழில்களின் தேவைக்கான கச்சாப் பொருள் தேவைகளை நிறைவு செய்ய (குறிப்பாக இரும்பு வகைகள்) மாநில அளவில் கச்சாப் பொருள் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பற்றாக் குறையாக இருப்பனவும், இறக்குமதி செய்யப்படுவனவுமாகிய கச்சாப் பொருட்களின் விநியோகத்தைச் சீரான முறையில் ஒழுங்குற நடத்தவும் இந்த நிலையங்கள் உதவுகின்றன. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. பல்வேறு மட்டங்களிலும் தொழில் நுட்ப நபர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவை செம்மையான முறையில் செயல் பட்டு வருகின்றன. பொறியியல் கல்லூரிகளிலும் பாலிடெக்னிக்குகளிலும் ஆண்டு ஒன்றுக்குச் சேர்க்கப்பட்டு வந்த மாணவர்கள் எண்ணிக்கை முதல் திட்டக் காலத்தில் முறையே 650 ஆகவும் 800 ஆகவும் இருந்தது. 1970–71 இல் இந்த

எண்ணிக்கை முறையே, 2000 ஆகவும் 5,000 ஆகவும் உயர்ந்தது.

போக்குவரத்து வசதிகள் விரிவடைந்ததன் பயனாக அத்தொழிலுக்கு உதவும் வகையில் கருவிப் பகுதிகளைச் செய்கின்ற துணைத் தொழில்கள் பெருகின. சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு நிதி உதவும் அமைப்புகளும், தொழில் வளர்ச்சி நிறுவனங்களும், சிறு தொழில்களின் வளர்ச்சிக்கும் வளர்த்துக்கும் சிறப்பாக உதவுகின்றன. வணிக வங்கிகள், நாட்டுடமை ஆக்கப் பட்ட வங்கிகள் ஆகியவற்றின் உதவியும் குறிப்பிடத்தக்கது.

ஒவ்வோர் ஆண்டிலும் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களின் கணக்கிலிருந்து சிறு தொழில்களின் வளர்ச்சி விகிதத்தைக் கீழ்க்கண்ட அட்டவணை மூலம் அறியலாம்.

| ஆண்டு | தொழிலகங்கள் எண்ணிக்கை. | அதிகரித்த தொழிலகங்கள் |
|---|---|---|
| 1966 | 10,431 | |
| 1967 | 11,813 | 1,382 |
| 1968 | 14,214 | 2,401 |
| 1969 | 19,741 | 5,527 |
| 1970 | 22,231 | 2,490 |
| 1971 | 25,190 | |
| 1972 | 28,990 | 3,800 |

(1972 செப்டம்பர் 30 வரை).

1968-ல் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களின் எண்ணிக்கையில் நல்ல வளர்ச்சி தெரியவருகிறது. எவர்சில்வர் ( Stainless Steel) தகடுகள் கிடைப்பதில் இடையூறுகள் ஏற்பட்ட காரணத்தால் அந்தப் பாத்திரங்கள் செய்யும் தொழிற்சாலைகளின் வளர்ச்சி பாதிக்கப் பட்டது. அதைத் தவிர, மற்ற தொழிற்சாலைகளின் வளர்ச்சி ஒரே சீரான முறையில் இருந்து வருகின்றது. ஆண்டுக்கு 2,000 தொழிலகங்கள் என்ற வகையில் வளர்ச்சி விகிதம் இருக்கிறது. இந்த வளர்ச்சி வேகம் ஆண்டுக்கு 12—15 சதவிகிதம் ஆகும்.


கடந்த பத்து ஆண்டுகளில் சிறப்பான வளர்ச்சி பெற்ற தொழில்களில் குறிப்பிடத் தக்கவை பொறியியல் தொழில்களும், பஞ்சாலைத் தொழில்களும் ஆகும். மாநிலத்தின் மொத்தம் 25,000 சிறு தொழில்களில் உருக்குச் சார்பான பொறியியல் தொழில்கள் எண்ணிக்கை 4,500-ம் பஞ்சாலைத் தொழிலகங்கள் எண்ணிக்கை 2,000-ம் ஆகும். முக்கிய உற்பத்தியாளர்களிடமிருந்து தமிழகம், இரும்பு உருக்குப் பொருட்களின் தேவையில் 20 சத விகிதம் மட்டுமே கிடைக்கப்பெறுகின்றது. (1971-ல் தேவை 2 இலட்சம் டன்; ஆனால் கிடைத்தது 38,000 டன்) அப்படியிருந்தும் உருக்குச் சார்ந்த தொழிற்சாலைகள் கணிசமாக அதிகரித்துள்ளன.

சிறு தொழில்களில் 1971-ல் 25,000 தொழில்களுக்குமாக மொத்த மூலதனம் சுமார் ரூ. 100 கோடி என்று மதிப்பிடப்படுகிறது. (திட்டவட்டமான புள்ளி விவரம் இந்த வகையில் கிடைக்கவில்லை) பதிவு செய்யாமலிருக்கும் சிறு தொழில்களில் மூலதனத்தின் அளவு பற்றிச் சரியானபடிமதிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை.

பதிவு செய்து கொண்டுள்ள தொழில்களில் உற்பத்தி அளவு விஷயமாக 1,100 தொழிற்சாலைகள் மட்டுமே 1969—70-ல் கணக்குக் கொடுத்தன. அவற்றின் பொருள் உற்பத்தி மதிப்பு ரூ. 37 கோடி. பொதுப்படையாகக் கூறுமிடத்து எல்லா வகையான சிறு தொழில்களிலும் சராசரியான மூலதன, உற்பத்தி விகிதத்தை 1 : 4 என்று மதிப்பிடலாம். தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம் ரூ. 100 கோடி என்னும்போது, பதிவு செய்யப்பட்ட தொழில்களில் உற்பத்தி அளவு சுமார் ரூ. 400 கோடியாக இருக்கும். பதிவு செய்யப்படாத சிறு தொழில்களில் உற்பத்தி அளவு சுமார் ரூ. 200 கோடியிலிருந்து ரூ. 300 கோடி வரை இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

வேலை வாய்ப்பைப் பொறுத்த வரை சிறுதொழில்கள், அதிக அளவில் நபர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டிய தன்மை வாய்ந்தவை. பொதுப் துறைத் தொழில்களிலும் தனியார் தொழில்களிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒப்பந்த வேலை அடிப்படையிலும் 1972-ஆம் ஆண்டில் வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் எண்ணிக்கை சுமார் 4 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு சிறுதொழில் நிறுவனங்களில் வேலையில் ஈடுபடுத்தப் பட்டிருப்போர் எண்ணிக்கை 5,000 ஆகும். பொருள் உற்பத்தி சம்பந்தப்பட்ட தொழில்கள் மட்டுமே சிறு தொழில்கள் என்ற வகையில் வருகின்றன. கைக்குத்தலரிசி, கரும்பிலிருந்து வெல்லம் செய்தல், இறைச்சி, பால் பொருட்கள் முதலியன சிறு தொழில் என்ற வகையில் வரவில்லை. வேளாண்மைத் துணைத் தொழில்கள் என்ற பிரிவில் அவை வருகின்றன.

மாநிலத்தின் மொத்த வருமானத்தில் சிறு தொழில்கள் மூலமான வருமானம் 1960 61-ல் 6.2 சதவிகிதமாக இருந்தது. 1970 71-ல் இது (1960–61 விலை நிலவரப்படி ) 8.9 சதவிகிதமாக உயர்ந்தது. பொதுப்படையான ஒட்டு மொத்தமான பொருளாதார வளர்ச்சி விகிதம் 3.5 சதவிகிதமாக இருக்கும் நிலையில் சிறு தொழில்கள் மூலமான வருமான வளர்ச்சி விகிதம் 6.4 சதவிகிதமாக உள்ளது. கடந்த பத்தாண்டுக் காலத்தில் முதல் ஐந்து ஆண்டுகளில் (1960–65) தொழிற்சாலைகள் வளர்ச்சி விகிதம் 6.2 சதவிகிதமாக இருந்தது. ஆனால் 1969-ல் இந்த வளர்ச்சி விகிதம் அதிகரித்து 6.9 சதவிகிதம் என்ற அளவினை அடைந்தது.



சிறு தொழில் வளர்ச்சிக்காகத் தொலை நோக்குத் திட்டத்தைத் தயாரித்துள்ள மாநிலத் திட்டக் குழுவின் செயல் அணி தனது அறிக்கையிலும், பரிந்துரைகளிலும் நிதித் தேவையின் அளவு பற்றியும் குறிப்பிட்டுள்ளது. 1972-லிருந்து 1984 வரை 12 ஆண்டுக் காலத்துக்கு மாநில அரசு மத்திய அரசு, கூட்டுறவுத் துறை தனியார் துறை எல்லாமாகச் சேர்ந்து சிறு தொழில்களுக்காக ரூ. 707 கோடி செலவிடுவது அவசியம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறு தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் ( SIDCO ) இன்னும் முனைப்பான பங்கினை மேற்கொள்ள வேண்டும் என்றும் செயல் அணி பரிந்துரையில் வலியுறுத்தியுள்ளது. பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ள பகுதிகளில் தொழிற் பேட்டைகள் தொடங்கத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் செயல் அணி கூறியுள்ளது. சிறு தொழில்களின் கச்சாப் பொருள் வசதிக் காக "கச்சாப் பொருள் வங்கி" ( Raw Material Bank ) ஒன்றும், சிறு தொழில் உற்பத்திப் பொருள்களின் விற்பனை வசதிக்காக "விற்பனை நிறுவனம்" (Marketing Organisation ) ஒன்றும் தொடங்க வேண்டும் என்று செயல் அணி தனது பரிந்துரைகளில் முக்கியமாக வலியுறுத்தியுள்ளது.

(தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவின் சிறு தொழில் பற்றிய செயல் அணியின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது)

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி, மக்கள் தொடர்புத்துறை இயக்குநர்: தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது




Criterion CO 2882




# தமிழகம் ஒரு பொற்காலத்தை உருவாக்கிவருகிறது!

உழுபவனுக்கே நிலம் உடைமையாகச் சட்டம்:
பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரு மடங்காவதற்கு
அடித்தளத்திலிருந்து திட்டமிடும்
மாநில திட்டக்குழுவின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட
குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் - மின்வசதி!
கிராமப் புறங்களிலும் வீட்டுவசதி!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை!
பசுமைப் புரட்சியில் முதலிடம்!

இரத்தப்புரட்சி இல்லாமல் இனிய வாழ்வு உருவாக்கும்

**இந்தத் திட்டங்கள்**
**இன்றையத் தலைமுறைக்கு நன்மை நல்க**
**நாளையத் தலைமுறைக்கும் நல்வாழ்வு அளித்திட**
**தமிழகத்தில் பொற்காலம் அமைந்திட**
**நாம் ஆற்றவேண்டிய பேருதவி**

## அளவான குடும்பம்

சீரான வாழ்வுக்கு மட்டுமல்ல
சிறு குடும்பம்—
செழித்திடும் நன்மைகளை-நாட்டில்
நிலைத்திடச் செய்ய
அமையட்டுமே அளவான குடும்பம்!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.

குடும்பநலத்துறை
தமிழ்நாடு அரசு